
# ‘ஆரையூர் அருள்’

## சிறப்புப் பக்கம்



# கூத்துக்கலைக் காவலர்

## கூத்திலக்கியம் பற்றிய பார்வை

– ம. கேதீஸ்வரன்

ஈழத்திருநாட்டின் கிழக்குத் தமிழகத்தில் தொன்மையும் பழமையும் பண்பாடும் மங்காது மரபுடமை காக்கின்ற மட்டக்களப்பு மண்ணின் மைந்தன்; ஆரையம்பதி தந்த அருளாளன்; ஆரையூர் அருள் என்று சிறப்பித்து அழைக்கப்படும் மூ. அருளம்பலம், அன்னைத்தமிழ் மீது கொண்ட அடங்காத தாகத்தால் அவர் தந்த படைப்புக்கள் அத்தனையும் அற்புதமே. அதிபராக, ஆசிரியராக, கலைஞனாக, கவிஞனாக பக்தி பாவலராக, அண்ணாவியாராக என்று பல தளங்களில் நின்று தமிழ் காக்கும் காவலனாக மிளிர்கின்றார், எனில் அது மிகையாகது. ‘தில்லைக்கூத்தனே’ என்று மாணிக்கவாசகப்பெருமான் சிவபுராணத்தில் இறைவனைச் சிறப்பித்து பாடுகின்றார். ‘கூத்து’ எனும் சொல் புராண, இதிகாச, சங்க இலக்கியங்களில் ஆடற்கலைக்கு கொடுக்கப்பட்ட பழந்தமிழ்ப்பெயராகும். இறை வன் உலக உயிர்களை உய்விக்கும் பொருட்டு எழு வகைக் கூத்துக்களை ஆடியதால் ‘கூத்தன்’ என அழைக்கப்படுகின்றார். இவ்வாறு தொன்மையும் பழமையும், கொண்டு

விளங்கும் கூத்துக்கலையின் காவலனாக நின்று மிளிர்கின்றார் அருளம்பலம். இவர் கூத்துக்களை ஆடியும் அவற்றை பழக் கியும் வந்துள்ள அதேவேளை, கூத்துக்கள் எழுதியும் தன்பணி செய்து வருகின்றார்.

இவர் எழுதிய கூத்துக்களை கதை நிகழும் காலத்தை அடிப் படையாகக் கொண்டு புராண காலம், இதிகாச காலம், காப்பிய காலம், நவீன காலம் எனப் பிரித்து நோக்கலாம். அந்தந்த காலத்திற்கு பிசகாத வகையில் கூத்துக்களின் கதையோட்டத்தைக் கச்சிதமாக கையாண்டுள்ளார். அதன டிப்படையில்,

### புராண காலக்கதைகள்:

இறைவனும் புலவனும், இராவண சொரூபம், இரணிய சங்காரம், சூரசங்காரம், சத்தியவான் சாவித்திரி, மானீன்ற வள்ளி, மறலியை வென்ற மங்கை, காத்தவராயன், அரிசந்திர காண்டம், அரிச்சந்திர மயான காண்டம்.

### இதிகாச காலக்கதைகள்:

இடும்பன் வதம், குருதட்சணை, மாதுசா பட்டாபிசேகம், லவகுசா காப்பிய காலக்கதைகள், கண்ணகி சபதம் நவீன காலக் கதைகள், பணச்செருக்கு, மங்கள தீபம், மட்டக்க ளப்பு மகிமை, மனிதம் மாறியதால், கல்யாணப்பரிசு, ஞானம் பிறந்தது, குருபக்தி, நாகரிகமோகம், உயர்ந்தவர் களும் தாழ்ந்தவர்களும் முத லானவற்றைக் கூறலாம். ஆரையூர் அருள் தனது கலை யுலகப் பயணத்தில் மொத்தம் 26 கூத்துக்களை எழுதி யுள்ளார். இது ஈழத்து கூத்துக் கலைக்கு கிடைக்கப்பெற்ற பெருங்கொடையாகும். இவர் எழுதிய கூத்துக்களில் 11 வட மோடிக்கூத்துக்களும் 09 தென் மோடிக்கூத்துக்களும் 03 சிந்து நடைக்கூத்துக்களும், மூன்று இசை நாடகமும் அடங்கு கின்றன. இவற்றுள் வடமோடி, தென்மோடி, சிந்துநடை கூத்துக்களுள் பணச்செருக்கு, மங்க ளதீபன், மனிதம் மாறியதால், கல்யாணப்பரிசு, ஞானம் பிறந்தது, நாகரீக மோகம், உயர்ந்தவர்களும் தாழ்ந்தவர் களும் போன்ற கூத்துக்கள் சமூகப்பிரச்சினை, சமூக எழுச்சியை பறைசாற்றுவனவாக அமைந்துள்ளது.

**இப்போதும் இவர் தனது வயதுக்குச் சவால்விடும் வகையில், துவிச்சக்கரவண்டியில் பயணம் செய்து கூத்துக்களைப் பார் வையிட்டு வருகிறார். அதேசமயம் தான் எழுதிய கூத்துக்களைப் பழகியும் கூத்தைச் செம்மை யாக்கம் செய்தும் மரபு மாறாத வகையில் கூத்து நிகழ்த்தப்பட வேண்டும் எனும் முனைப்போடும் செயற்பட்டு வருகின்றார்.**

கூத்துக்கலையின்பால் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட அருள், 'இறைவனும் புலவனும்', 'இராவண சொரூபம்' எனும் இரு தென்மோடிக் கூத்துக்கள் அடங்கிய நூலைத் 'தமிழ் கூத்தியல்' எனும் நாமத்தோடு 2020-ஆண்டு வெளியிட்ட மையும் குறிப் பிடத்தக்கதாகும். 1962-ஆம் ஆண்டு பேராசி ரியர் சு. வித்தியானந்தன் 'அலங்காரரூபன்' எனும் தென்மோ டிக்கூத்தை தொகுப்பித்து நூலுருவாக்கினார். 1969-ஆம் ஆண்டு பண்டிதர் வி.சீ. கந்தையா 'அனுருத்திரன்' தென்மோ டிக்கூத்தும் 'இராமநாடகம்' வடமோடிக்கூத்தும் தொகுப்பித்து நூலுருவாக்கினார். ஆனால், ஆரையூர் அருள் தனது புலமையால் எழுதி வெளியிட்ட கூத்திலக்கியம் என்ப தோடு, இதுவே கிழக்கிலங்கை யின் முதலாவது தென்மோடிக்கூத்து நூல் எனவும் கருதலாம்.

1997-ஆம் ஆண்டு வெளியாகிய தினக்குரல் பத்திரிகையில் சண். தவராசா புலவரை இவ்வாறு விழிக்கின்றார். 'நாட்டுக் கூத்து அருகி விடாமல் காக்கும் அருளம்பலம், தன் இரத் தத்தில் ஊறிய இக்கலையை நவீனப்படுத்தி நவீன நாட்டுக் கூத்தாக மாற்றி, நாடக மேடைகளில் அவற்றை மேடை யேற்றி, அதனை ஜனரஞ்சகப்படுத்தி வரும் வல்லோன். மகிழ டித்தீவு சரஸ்வதி வித்தியாலயத்தில் அதிபராக இவர் கடமை யாற்றியபோது, இவருடைய 'சுந்தரி விடுதூது' எனும் நாட்டுக் கூத்து தமிழ்த்தினப் போட்டியில் முதலிடத்தினைப் பெற்ற மையும் குறிப்பிடத்தக்கது' எனப் பதிவு செய்கின்றார்.

1994-ஆம் ஆண்டு வெளியாகிய தினக்குரல் பத்திரிகை, ஆரையூர் அமரனின் வித்தாரத்தை இவ்வாறு குறிப்பிடு கின்றது. 'நாட்டுக்கூத்து வளர்ச்சிக்கே தன்னை அர்ப்பணித்த அருளம்பலம் எனவும், ஆரையம்பதியில் வாழையடி வாழையாக கலைத்தொண்டு புரிந்துவரும் ஒரு கலைஞர் எனவும் 1974-ஆம் ஆண்டு பொலநறுவை முத்துக்கல் தமிழ் வித்தியாலய மாணவர்களைக் கொண்டு 'வள்ளி திருமணம்' எனும் வடமோ டிக்கூத்தை ஆடி அரங்கேற்றம் செய்து பொதுமக்களின் பெரும் பாராட்டினைப் பெற்றவர்' எனவும் குறிப்பிடுகின்றது.

1992-ஆம் ஆண்டு 'வழிதவறிய வஞ்சி' எனும் வடமோடி நவீன நாட்டுக்கூத்தை தயாரித்து நெறி யாள்கை செய்ததுடன் வஞ்சியின் தாயாக பாத்திரமேற்று ஆடி அரங்கேற்றியதும் குறிப்பிடத்தக்க தாகும். இக்கூத்தானது மட்டக்க ளப்பில் பல பகுதிகளில் ஆடப் பெற்று மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது. 1993-இல் 'அனுமன் கண்ட சீதை' என்ற இதிகாச வடமோடிக் நாட்டுக் கூத்தை தயாரித்து நெறியாள்கை செய்து, சீதையாக பாத்திரமேற்று நடித்து அரங்கேற்றம் செய்தமையும் குறிப்பிடத்தக்கது. 1994-ஆம் ஆண்டு 'மங்களதீபம்' என்ற வடமோடி என்ற நவீன நாட்டுக்கூத்தை எழுதி நெறியாள்கை செய்து தருமசொருபி எனும் தந்தையின் பாத்திரமேற்று ஆடி அரங்கேற்றம் செய்து, தனக்கே ஒரு தனித்துவத்தை ஏற்படுத் தியுள்ளார்.

1997-ஆம் ஆண்டு மண்முனைப்பற்று பிரதேச செயலகத் தினால் முதன்முதலாக பிரதேச சாகித்தியவிழா நடத்தப்பட்ட போது நாட்டுக் கூத்துப் போட்டியும் சேர்க்கப்பட்டது. அப் போட்டியில் ஆரையம்பதியில் பண்டுதொட்டு நாட்டுக்கூத்து ஆடப்பட்டு வந்தபோதிலும் அப்போட்டியில் பங்குபற்ற எந்த கலைஞர்களோ குழுக்களோ விண்ணப்பிக்காத துர்ப்பாக்கிய நிலை இருந்தது. மண்ணின் பெருமை காக்க 'மறிலியை வென்ற மங்கை' எனும் தென் மோடிக் கூத்தை எழுதி ஆரையம்பதி கலை ஞர்களைக் கொண்டு அதனை நெறியாள்கை செய்து 'சாவித்திரி' எனும் பெண் பாத்திரத்தை தாமே ஏற்று நடித்து, நடுவர்கள்,



பார்வையாளர்களின் பாராட்டையும் பெற்றுக் கொண்டார். சாகித்திய விழாவிலே மீண்டும் அக்கூத்து ஆடப்பட்டு அமோக வரவேற்பை பெற்றது.

ஆரையூர் அருள் கூத்துப்பனுவலோடு மட்டும் நின்றுவிடாது கூத்துச் சார்ந்த ஆய்வுக்கட்டுரைகளை எழுதுவதிலும் பின் நிற்வில்லை. அந்தவகையில் 'மட்டக்களப்பில் வடமோடி, தென்மோடி கூத்துப்பிரதிகள்' என்னும் கட்டுரையில், கூத்துக் கையெழுத்துப் பற்றிய தெளிவான விளக்கம், கூத்து கையெ ழுத்துப்பிரதிகளைக் கையாளும் விதம், வாய்மொழி எழுத்துரு மரபின் தாளக்கட்டுக்கள் முதலானவற்றை விளக்குகிறார். அத்துடன் இக்கட்டுரையில், இரு வகையான கூத்துப்பாணி களும் கூத்துப்பிரதிகளும், அச்சுவாகனத்தின் செல்வாக்கும் கூத்துப்பிரதிகளும், சமூகச்சூழலின் போக்கும் கூத்துப்பிரதி களும், கூத்துப்பிரதிகளும் கையோட்ட சீராக்கமும் போன்ற தலைப்பின் கீழ் மட்டக்களப்பு கூத்து குறித்து விரிவாக ஆய்வு செய்கின்றது. இவ்வாய்வுக்கட்டுரையில் மட்டக்களப்பு தமிழகத்தில் 132 வடமோடிக் கூத்துக்களும் 50 தென்மோடிக் கூத்துக்களும் இருந்தமையையும் எடுத்துக்காட்டுகின்றார்.

2018-ஆம் ஆண்டு வெளிவந்த தேறல் சஞ்சிகையில் தென் மோடிக்கூத்தில் சிருங்கார இரசனை எனும் கட்டுரையில், தலைவன் தலைவிக்கிடையிலான, தலைவி தோழிக்கிடை யிலான தர்க்க தருவில் சிருங்காரசுவை மேலோங்கியுள் ளமையை இவ்வாறு விபரிக்கினறார்.

தரு

***'நன்ன நன்ன நான நன்ன நானா -***
***நன்ன நான நன்ன நான நன்ன நானா பாங்கியரே***
***நானுரைக்கச் கேளும் -***
***இரவு தூங்கு மஞ்சும் மீதிலுறங்கும் போது***
***வாங்குசிலை மதனைப் போலொருவன் -***
***எந்தன் வீங்குதனம் பிடித்திடக்கண்டேன்***
***முக்தோடே முகத்தை வைத்துக் கொஞ்சி -***
***முலை அகத்தோடே நகத்தை வைத்துக் கெஞ்சி - வெகு***
***அகத்தோடே அனைந்தாரடி வஞ்சி...'***

'மண்முனைப் பற்று பிரதேசத்தில் ஆரையம்பதியில் கூத் துக்கலை' எனும் ஆய்வுக்கட்டுரையில் ஆரையம்பதிக் கிரா மத்தின் நாட்டுக்கூத்துக்கலைகளையும் அங்கிருந்த அண் ணாவிமார்களையும் மத்தாளக் கலைஞர்களையும் எடுத்து ரைக்கின்றார். 'முத்திரைப்பல்லவி' எனும் கட்டுரையில் அனு ருத்திரன், இந்திரன், பூங்காவனம், சாம்பேந்திரன், அலாங்க ரூபன், வாளவீமன் போன்ற கூத்துக்களின் முத்திரைப்பல்ல வியின் தாக்கம் பற்றி விபரிக்கின்றார்.

2014-ஆம் ஆண்டு தேசிய பல்சுவை குடும்பச் சஞ்சிகையான தென்றல் சஞ்சிகையில் 'மட்டுநகர் மறவா நாட்டுக்கூத்து நாயகன் த. நல்லலிங்கம்' எனும் கட்டுரையில் த. நல்ல லிங்கம் நாட்டுக்கூத்து கலைஞர் பற்றி இவ்வாறு பதிவு செய் கின்றார். '05.10.1938 ஆண்டு மட்டுநகரின் வடபாலுள்ள வாகரையில் பிறந்து சென் செபஸ்தியார் பாடசாலையில் கற்று எஸ்.எஸ்.சி பரீட்சையில் சித்தி பெற்று ஆசிரியர் பணிக்கு அமர்த்தப்பட்டார். தான் கல்வி கற்கும் ஏழாவது வய திலிருந்தே கலையுலகில் கால் வைத்தார். செல்லத்தம்பி அண்ணாவியார், வந்தாறுமூலை செல்லையா அண்ணாவி மார்களின் 'கற்பலங்காரி', 'வாளவீமன்' கூத்துக்களில் முறையே சிவதருமன், வாளவீமன் பாத்திரமேற்று கூத்தாடி யவர். இவரின் பாத்திரப்பொருத்தம் ஆடல், பாடல் என்பன அனைவராலும் பாராட்டப்பட்டன. 1965-இல் கர்ணன் போரில், கர்ணனாக பாத்திரமேற்று நடித்த இவர், 1970-களில் மார்கண் டேயர் எனும் கூத்தைப் பழக்கி, அதில் பரிகாரி பாத்திரமேற்று நடித்தார். இக்கூத்து மட்டக்களப்பு அரசாங்க அதிபர் பிரிவில் முதலாம் இடத்தினைப் பெற்றுக் கொண்டதும் நினை வுகூரத்தக்கது.

கலையுலகின் பல்துறைப்பட்ட நாயகனான ஆரையூர் அருள் கலைகாத்த கலைஞர்களை மதித்து அவர்களுக்கு மகுடம் சூட்டுவதிலும் பின்னிற்காதவர். தற்போது இவர் தனது வய துக்குச் சவால்விடும் வகையில், துவிச்சக்கரவண்டியில் பயணம் செய்து கூத்துக்களைப் பார்வையிட்டு வருகிறார். அதேசமயம் தான் எழுதிய கூத்துக்களைப் பழகியும் கூத்தைச் செம்மையாக்கம் செய்தும் மரபு மாறாத வகையில் கூத்து நிகழ்த்தப்படவேண்டும் எனும் முனைப்போடும் செயற் பட்டு வருகின்றார். இயங்கியல்வாதியாகவும் கூத்துக்கலை காக்கும் காவலராகவும் விளங்கும் இவர் மட்டக்களப்பின் தனித்துவம் வாய்ந்த கூத்துக் கலைஞராகவும் சிறப்பிக்கப்ப டுகிறார்.

kethees.m@thaiveedu.com






# தமிழ் இலக்கணத்தை நன்கு கற்றறிந்த மரபுவழிக் கவிஞர்

– வெல்லவூர்க் கோபால்

மட்டக்களப்புத் தேசத்தில், தளம்பலற்ற ஒரு பல்சமூகக் கட்டமைப்பை உள்ளடக்கிய தனித்துவத்தை நீண்டகால வரலாறாக கொண்ட ஒரு பழந்தமிழ் கிராமமே ஆரையம்பதி. இங்கு வாழுகின்ற சமூகங்கள் வாழ்வியலிலும் வழிபாட்டிலிலும் தங்கள் தங்கள் மரபுவழிப்பட்ட பண்பாடுகளைத் தொடர்ந்தாற்போல் பேணிவந்த நிலையிலும் சமூக ஒற்றுமையினையும் கட்டிக்காக்கவே செய்தனர். ஒப்பீட்டளவில் சிறந்த கல்வியாளர்களையும் பல்துறைசார் கலைஞர்களையும் பெருமளவு கொண்ட கிராமமாகவே இன்றும் ஆரையம்பதி திகழ்கின்றது.

இக்கிராமம் தந்த தனித்துவம் மிக்க பல்துறைக் கலைஞரே மூத்ததம்பி அருளம்பலம் எனும் இயற்பெயர் கொண்ட 'ஆரையூர் அருள்' அவர்கள். ஓய்வுநிலை அதிபரான இவர் ஒரு நற்றமிழ் அறிஞருமாவார்.

பாவினத்தை மூன்றாக வகைப்படுத்துவர். பாடல், செய்யுள், கவிதை என்பனவே அவை. முற்காலத்தில் பாடல்கள் யாவும் இறையருளாலேயே பாடப்பட்டவையென்றும் கூறுவதுண்டு. பொதுவாகப் பார்க்கும் தன்மையில் ஆரையூர் அருளின் படைப்புகள் பெரும்பாலும் பாடல் வகையுள் உள்ளடங்குவதை அவதானிக்க முடியும். அவரது நூல்களில் மிக முக்கியமாக 742 பக்கங்களை உள்ளடக்கிய இறையின்பப் பாவாரம் மற்றும் வில்லடிப் பாட்டு, பத்தாலய பாவாரங்கள் போன்ற நூல்கள் மிகுந்த முக்கியத்துவம் பெறுபவை. சிறந்த இறைபக்தரான இவரது பாடல்களில் அனேகமானவை பக்தி இலக்கியம் சார்ந்தவையாகவேயுள்ளன. இவரது இறையின்பப் பாவாரம் மற்றும் பத்தாலய பாவாரங்கள் பொதுவாகப் பிரதேசத்தின் வழிபாட்டுத் தலங்களை மையப்படுத்தியவையாகும். மூவாயிரத்துக்கும் அதிகமான பாடல்களைக் கொண்டமைந்த இறையின்பப் பாவாரம் ஒரு வரலாற்றுச் சாதனை எனலாம். கிழக்கிலங்கையின் பல்வேறு சைவத் திருத்தலங்கள் குறித்துப் பாடுகின்ற தன்மையில் அவற்றின் முழுமையான வரலாற்றுப் பின்னணியை நம்மால் இலகுவில் புரிந்துகொள்ளவும் முடிகின்றது.

தமிழ் இலக்கணத்தை நன்கு கற்றறிந்த மரபுவழிக் கவிஞரான ஆரையூர் அருள், தனது பாடல்களில் பொதுவாக யாப்பு, எதுகை, சீர், தளை என்பவற்றுக்கும் மேலாக எளிய தமிழில் சிந்து, பள்ளு, தாலாட்டு, கும்மி போன்ற கிராமிய மெட்டுகளையும் சந்தங்களையும் தனது கவித்துவ வெளிப்பாட்டின் மையமாகக் கொண்டிருப்பதை அவரது அனேக பாடல்களில் தெரியவரும். நமது முன்னவரான மகாகவி பாரதி சாமானியரும் புரிந்துணரும் தன்மையில் கவிதையின் தேவைகளாக இவற்றைக் கையாண்டமையும் அது பின்னர் தொடருவதையும் இங்கு சுட்டிக்காட்டுவது அவசியமானதாகும். கவித்துவம் மிக்கது கவிதை எனும் வரைவிலக்கணத்தோடு 'உள்ளத்துள்ளது கவிதை... இன்ப ஊற்றெடுப்பது கவிதை' எனும் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளையின் கூற்றினையும் ஆரையூர் அருளின் படைப்புகளில் பொருத்திப் பார்ப்பது மிக முக்கியமானதாகும்.

'கவிதை எழுத மிக முக்கியமானது உணர்ச்சி. ஒரு கவிஞர் எதனை இலக்காகக் கொள்கின்றாரோ அதுவே இலக்கிய அறிவாக அவருக்கு மாறிவிடுகின்றது. வாழ்க்கையில் கிட்டும் அனுபவமே அவருக்கு இலக்கிய அறிவைப் புகட்டுகின்றது. கவிஞர் எதையும் கூர்ந்து நோக்கும் இயல்புடையவர். கவிதையானது உணர்ச்சிகளை இதமாக வெளிப்படுத்துவதோடு பிறர் மனதில் நன்கு பதியும் வண்ணம் நயமிகு சொற்களில் அவை அமையவேண்டுமென்பதால் இலக்கியங்களைச் சுவைப்பதன் மூலம் அதற்கான மொழியறிவை நிச்சயம் ஒரு சிறந்த கவிஞரால் பெருக்கிக்கொள்ளமுடியும்' என்ற கோட்பாடு முழுக்க முழுக்க ஆரையூர் அருளுக்குப் பொருந்தி வருதை நம்மால் நிச்சயிக்க முடிகின்றது.

ஆரையூர் அருளின் பாடல்கள் தொடர்பில் ஒரு கணிப்பீடு செய்வதாயின் அவரது உள்ளார்ந்த சிந்தனைகளும் தெளிவான நோக்கமும் சாமானியர்களைச் சென்றடையும் வண்ணம் அவரது கவித்துவம் முன்னிறுத்தப்படுவதை நிச்சயம் உறுதி செய்யலாம். அவரது பணிகள் தொடர்ந்தும் நிலைபெற இறையருள் கிட்டுவதாக!



vlavoorkopal@thaiveedu.com




# ஆரையூர் அருளின் இலக்கியப் பணிகள்

## ஒரு பன்முகப் பார்வை

– இ. குகநாதன்



ஈழத்து இலக்கிய எழுத்து வெளியென்பது நீண்ட வரலாற்று தொடரும், தொடர்ச்சியும் கொண்டது. காலத்திற்கு காலம் குறித்த காலத்தின் பிரதிபலிப்பை அடிப்படையாக வைத்துப் பல இலக்கியங்களும் உருவாகியிருக்கின்றன. இவை வாய் மொழிகளில் இருந்து ஏட்டுப் பிரதிகளாக மாறி பின் அவை அச்சிடல்களாகப் பதிப்புரிமை பெற்று பரிணமித்தன. இன்று இன்னுமொரு படி உயர்ந்து சமூக வலைத்தளங்களும், இணையத்தளங்களும் இலக்கிய ஆக்கங்களைப் பரவலாக்கம் செய்கின்றன. இவை சார்ந்து சாதக, பாதக நிலைகளும் மற்றுமொரு புறத்தில் அவதானிப்புக்குரியவையாகினாலும் இலக்கிய உருவாக்குநர்களின் ஆக்கங்களை வெகுஜனப்படுத்தலென்பது இன்றைய சூழலில் இலகுத்தன்மை அடைந்துள்ளது எனலாம். மேலும் தற்காலத்தில் உருவாகும் இலக்கிய படைப்புகளின் தரம், தரமின்மை இலக்கியம் ஒன்று உருவாக்குவதற்கான தேடல், வாசிப்பு, அது சம்மந்தமான ஆய்வுப் புலமை பற்றியதான வினாக்களையும் முன்வைத்தல் ஆக்கபூர்வமான எழுத்துகளை உருவாக்குவதற்கான ஊக்கியாகக்கூட அமையலாம்.

இக்கட்டுரை யாவரும் அறிந்த, அறிந்தும் இன்றைய பாகுபடுத்தல் கல்விப்புலம் பார்க்கத்தவறிய ஒரு ஆளுமை; இலக்கியவாதி; பன்மை இலக்கியங்களை ஆக்கியோன். ஆழமான அறிவும் அனுபவமுள்ள ஆரையூர் அருளம்பலம் அவர்களின் இலக்கியப் பணி தொடர்பாக ஆராய்கிறது. பன்மைத் தன்மையான ஆளுமையுடைய ஆரையூர் அருளின் இலக்கியம், அவரது எழுத்துகள் இன்றைய உலக இலக்கியங்களுக்கு சமதையாக ஒப்பீட்டு பார்க்கக் கூடிய வகையில் பொருத்தலாம். இதற்கு எடுத்துக்காட்டு இவரால் எழுதப்பட்ட 'இறையின்ப பாவாரம்' எனும் நூலாகும். 742 பக்கங்களையும் 3010 பாடல்களையும் கொண்டு ஆக்கப்பட்ட இந்நூல் ஒரு வரலாற்று ஆவணமாக திகழ்கின்றது. இந்நூல் பற்றி தமிழ்த் தந்தி பத்திரிகையில் அறிமுக உரை குறிப்பு ஒன்றினை எழுதிய கவிஞர் தமிழ்மணி அகளங்கன் அவர்கள் இவ்வாறு குறிப்பிடுகிறார் '742 பக்கங்களைக் கொண்ட பெரும் கவிதை நூலான இந்நூல் இந்த நூற்றாண்டில் ஈழத்தில் வெளிவந்த மிகப்பெரிய கவிதை நூல் என்ற பெருமையை பெறுகிறது'. (தமிழ்த்தந்தி 25.08.2019).

ஆறு வயதில் சுவாமி விபுலானந்தர் பற்றி கவிதை எழுதி தன்னை ஓர் எழுத்தாளராக வெளி உலகிற்கு காட்டிய ஆரையூர் அருள், பவளவிழா காணும் வயது வரையும் எழுத்துப் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளும் ஒருவராக அனுபவ ஆளுமையாக ஈழத்து இலக்கிய வெளியில் தன்னை அடையாளப்படுத்துகிறார். இவரால் எழுதப்பட்ட இலக்கியங்களை கீழ்வருமாறு வகைப்படுத்தலாம்.

- சிறுகதைகள்.
- கட்டுரைகள்.
- கவிதைகள்.
- நாடகப் பனுவல்கள்.
- கூத்துப் பனுவல்கள்.
- வில்லுப்பாட்டு பனுவல்கள்.
- பதிப்பித்த நூல்கள்.

இதில் ஒவ்வொன்றும் ஆழமாக பார்க்கப்பட வேண்டியவை. இவர் ஒரு சிறுகதை எழுத்தாளர். பத்தொன்பதுக்கும் மேற் பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளார். இவை ஒவ்வொன்றும் சஞ்சிகைகள், பத்திரிகைகள், மலர்கள் மற்றும் போட்டிகளுக் காகவென எழுதப்பட்டவை. அவற்றில் அவள்(1986), சமுதாய தராசு(2000 தினக்கதிர்), மாணவர் மையக் கல்வி(2023 குருகுலம் சஞ்சிகை), பாரம்குறைந்தது(2010 சிகரம் நினைவலைகள்), நினைவலைகள்(2012), ஒற்றுமையே உயர்வு தரும்(2012), பொறாமை வேண்டுமா(2014), தப்புக்கான தண்டனை(2014), தந்திரம் மருந்தால் மந்திரம் வேண்டாம்(2016), அந்த நினைவு (2016), நன்றிக் கடன்(2019), உயர்ந்த உள்ளம்(2019) மன மாற்றம்(2020) மூர்க்கனும் முதலையும்(2022), நன்றும் தீதும் பிறர் தர வாரா(2021), நெஞ்சக நினைவுகள்(2021), வாழ்வளித்த தொழிற்கல்வி(2021), கடுகு சிறிது காரம் பெரிது, அகத்தே அழிந்த ஆசை போன்றவையாகும்.

அதுபோன்று 1998-ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை நாற் பத்தியெட்டிற்கு மேலான கட்டுரைகளை எழுதி வெளியிட் டுள்ளார். இக்கட்டுரைகள் சமூகம் சார்ந்த பிரச்சினைகள், நாட்டாரியல்சார் விடயங்கள், கல்வி சார் விடயங்கள், ஆன்மீகம் மற்றும் பக்தி சார்ந்த விடயப் பொருட்கள், தமிழ் துறவிகளின் பெருமைகள், கலைகள், தொழில்நுட்பம் சார் விட யங்கள், திறனாய்வு என்பவற்றைப் பேசுபொருளாகக் கொண்டவை. இதற்கு சில எடுத்துக்காட்டுகள் மனித சமூகத்திற்கு கணினியின் பங் களிப்பு(2000), கணிதத்துறைக்கு இராமானுஜரின் பங்களிப்பு(2001), இந்து ஆலய அமைப்பும் கிரியை முறைகளும்(2001),அருளாட்சி செய் யும் ஆரையூர்க் கண்ணகை (2003), சைவ சமயத்தில் கண்ணகிவழிபாடு (2004), சைவ சமயத்தில் கணபதி வழிபாடு(2004), விநாயக விரதங்கள்(2005), ஆரையம்பதி ஆகாயப் பேச்சி(2006), முதி யோரைப் புறக்கணிப்பர் சமுதாய விரோதிகள்(2007), சமூதாய முன்னேற்றத்தில் இளைஞரின் பங்கு(2008), அமரர் நல்லையா ஆற்றிய சமூக, பொருளாதார பணிகளும் பயன் களும்(2011), மண்முனைபற்று கிராமிய கலைகள்(2012), நாட்டார் கலை கற்றல் போட்டி(2013), நாட்டார் கலை கள்(2013), மண்முனைப் பற்றுப் பிரதேச பெண் தெய்வ வழிபாடு(2013), நாட்டார் பாடல்கள்(2014), மட்டுநகர் மறவா நாட்டுக்கூத்து நாயகன் த.நல்லலிங்கம்(2014), தென்றல் மாந்திரிக செயல்முறைகள்(2014), இலக்கிய விபரணப் போட்டி(2014), ஏற்ற இறக்கம்(2014), விபுலானந்தரின் சமரச சமத்துவ சமூகப்பணி(2018), ஆரையம்பதியில் வீரத்தமிழன் இராவணன்(2018), மட்டக்களப்பு வடமோடி, தென்மோடிக் கூத்துப்பிரதிகள்(2018), கணபதிப்பிள்ளை அதிபர் அவர் களின் நினைவுப் பாரம்பரியம், தும்புக் கைத்தொழில் (2018), எமது பிரதேச மரபுக் கலைகள்(2020) போன்ற பலவற்றைக் குறிப்பிடலாம்.

**ஆறு வயதில் சுவாமி விபுலானந்தர் பற்றி கவிதை எழுதி தன்னை ஓர் எழுத்தாளராக வெளி உலகிற்கு காட்டிய ஆரையூர் அருள், பவளவிழா காணும் வயது வரையும் எழுத்துப் பணியில் தன்னை ஈடுப டுத்திக் கொள்ளும் ஒருவராக அனுபவ ஆளுமையாக ஈழத்து இலக்கிய வெளியில் தன்னை அடையாளப்படுத்துகிறார்**

சிறு வயதிலிருந்து இவரது கவிதையாக்க பணி தொடர்ந் தாலும் புலமைசார் எழுத்துகள் பொதுவெளி வெளியிடல் களாக, இவரை ஒரு கவிஞராக தமிழ் இலக்கிய உலகுக்கு அடையாளம் காட்டிய சஞ்சிகையாக 1992-ஆம் ஆண்டு வெளிவந்த 'கிழக்கொளி'யைக் கூறலாம். இம்மலரில் இவர் எழுதிய 'பாரதி நீ மீண்டும் பிறந்திருப்பது நன்று' எனும் கவிதையே இவரை ஒரு கவிஞராக இலக்கிய உலகுக்கு அடையாளம் காட்டியது. இவ்வாறு நாற்பதுக்கு மேற்பட்ட கவிதைகள் இவரால் எழுதப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. அத்துடன் பல போட்டிகளில் வெற்றியீட்டிய கவிதைகளாகவும் இவை உள்ளன. சமூகம், கலை, ஆன்மீகம், பக்தி, தமிழறி ஞர்கள் எனப் பல்வேறு பாடுபொருள்களை இக்கவிதை உட் கொண்டுள்ளன. அவற்றில் சில கவிதைகள் கீழ் வருகின்றன: ஒற்றுமைக் கரவொலி ஒலிக்கட்டும்(1996), வித்தகன் விபுலா னந்தன்(1999), மண்முனைப் பற்றெழிலாள்(2003), தாயவள் ஏங்கி நிற்கிறாள்(2006), கவி(2009), மண்முனைப்பற்றுச் சிறப்பு(2009), சிறுவர் உரிமை (கும்மி பாடுல் -2010) ஆரையூர் அமரன்(2010), தென்றல் பேசுது(2011), கவிஞர் திரு.க.அன்ப ழகன் பாரட்டுப் பாவோலை(2011).

இவர் நாடக பனுவல்கள் எழுதுவதில் சிறந்தவர். 19 நாட கங்களை எழுதியதாக அறியமுடிகின்றது. 1970-களில் இதிகாச. புராண, சமூக நாடக ஆக்கத்தின் ஊடாக தன்னை ஒரு நாடக பனுவல் ஆசிரியராக அடையாளப் படுத்திக் கொண்ட இவர் கீழ்வரும் நாடகங்களை எழுதியுள்ளார் இவை சமூகம், வரலாறு, பக்தி, புராண மென பல கருப்பொருட்களைப் பனுவலின் உட்கிடைக்கைகளாகக் கொண்டவை. இவற் றில் சமர்ப் பணம்(2019), நல்லதம்பி (1973), ஒரே தாய் பிள்ளை(1975), புதிய விதி சமைப்போம்(1979), குந்தி யின்வரம்(1981), சிலைகளும் சிரிக்க வைக்கும்(1981), அளவான குடும்பம் (1982), திருநாவுக்கரசர்(1986), பெரி யோரை கனம் பண்ணுவோம், மரம் வளர்ப்போம்(1990), தியாக தீபம் (1991), கல்வியே கலங்கரை விளக்கு(1991), ஊர்வசி பெற்ற சாபம்(1993), முயற்சி திருவினையாக்கும்(1999) போன்றவற் றை எடுத்துக் காட்டலாம்.

இவரது இலக்கிய முயற்சியில் அடுத்து கூத்து பனுவலாக்கச் செயற்பாடுகளையும் எடுத்துக் கூற வேண்டும். குறிப்பாக மட் டக்களப்பின் தனித்துவமான கலை அடையாளமாக காணப் படும் வடமோடி, தென்மோடி கூத்துகளை எழுதும் வாண்மையும் இவரிடம் உண்டு. மட்டக்களப்பு மாவட்டத்தில் 17-ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் இருந்து ஆடப்பட்டு வரும் கூத்து இற்றைக்கு வரை தொடர்கிறது. மட்டக்களப்பில் 200-இற்கும் மேற்பட்ட வடமோடி, தென்மோடி கூத்துப் பனு வல்கள் ஆற்றுகைத் தளத்தில் காணப்படுகின்றன. பலமான அரங்காகவும் மக்களிடம் எளிமையாக தொடர்பு கொள்ளும் கலை வடிவமாகவும் காணப்படும் கூத்து அதன் பனு வல்களை ஏட்டு பிரதிகளாகவும், கையெழுத்து பிரதிகளா கவுமே பின்வருவோருக்கு பரிமாற்றம் செய்து வந்தன. இப்பரி மாற்றத்துக்கான நுட்ப முறைகளும் காணப்படுகிறன. கூத்துப் பனுவல்களை எழுதி பதிப்பித்தோர் மிகக் குறைவு. தாமே எழுதி அதனை நூலாக வெளியீட்ட புலவர் ஒரு சிலருள் இவர் முக்கியமானவராகக் கொள்ளப்படுகிறார். இவரால் இருபத் தியாறு கூத்துப் பனுவல்கள் எழுதப்பட்டுள்ளன.

ஆரையூர் அருளம்பலம் அவர்களின் இலக்கிய ஆளுமையை மேலும் விரிவுபடுத்த இவரால் எழுதப்பட்ட வில்லுப்பாட்டு பனுவல்களையும் இங்கு சுட்டிக் காட்டலாம் 22 வில்லுப்பாட்டுகள் இவரால் எழுதப்பட்டன. இவ்வில்லுப்பாட்டுக்கள் தேசிய, மாகாணமட்டப் போட்டிகளில் வெற்றி பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. 1975-ஆம் ஆண்டு இவர் எழுதிய 'வித்தகர் விபுலானந்தர்' எனும் வில்லுப்பாட்டுடன் இவரது இலக்கிய பணி தொடர்ந்தது எனலாம். 2021-ஆம் ஆண்டு ஆரையூர் அருளின் உருவாக்கத்தில் முனைக்காடு நாகசக்தி கலைமன்றத்தினரால் வெளியிடப்பட்ட 'வில்லடிப்பாட்டு' மிக முக்கியமான ஒரு நூலாக அமைகின்றது. இதுவரை மாவட்ட, மாகாண, தேசிய ரீதியாக போட்டிகளில் கலந்துகொண்ட 20 வில்லுப்பாட்டுகளைத் தொகுத்து இந்நூல் ஆக்கம் பெற்றிருக்கின்றது. பேராசிரியர் யோகராசா அணிந்துரையினை வழங்கியுள்ளார். மதிப்பீட்டுரையினைச் சிரேஸ்ட விரிவுரையாளர் ரூபி வலன்ரினா பிரான்சிஸ் எழுதியுள்ளார். இதில் வில்லுப்பாட்டுக்கான விதிகள் எனும் ஒரு இயலும் ஆசிரியரால் இணைக்கப்பட்டுள்ளது. இப்பாடல்கள் சமகால வாழ்வியலுக்குரியவை. அத்துடன் வரலாற்று விடயங்களை சமகாலத்திற்கு பொருத்திப் பார்க்கவும் பொருத்தப்பாடு உடையவை.

அதன் அடிப்படையில் மேற்கூறப்பட்ட இலக்கிய படைப்புகள் பல புத்தகங்களாக நூலுருவாக்கப்பட்டு வெளியிடப்பட்டாலும் பல பிரதிகள் இன்னும் அச்சிடலுக்கு உட்படாதவையாக உள்ளன. இவர் எழுதி பதினொரு நூல்கள் இன்றைவரை வெளிவந்துள்ளன. கல்லடி உப்போடை பேச்சியம்பாள் பாடல்கள்(2001), மட்டக்களப்பு புதுக்குடியிருப்பு கற்பரசி கண்ணகி அம்பாள் பாடல்கள்(2002) புன்னச்சோலை பத்திரகாளியம்பாள் பாடல்கள்(2006), கல்லடி உப்போடை நொச்சிமுனை சித்தி விநாயகர் பேச்சியம்மன் ஆலய பாடல்கள்(2010) ஓங்காரானந்த சரஸ்வதி சரிதம்(2010) பேச்சியம்பாள் அவதாரமும், ஆலயமும்(2012) கிராமத்து உள்ளங்கள்(2013), இறையின்ப பாவாரம்(2016), தமிழ் கூத்தியல் (2020), வில்லடிப்பாட்டு(2021), பத்தாலய பாவரங்கள்(2022) முதலானவற்றைக் இவ்வகையில் கூறலாம். கல்லடி உப்போடை நொச்சிமுனை சித்திவிநாயகர், பேச்சியம்பாள் பாடல்கள் எனும் நூல் 2001-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. கும்மி, காவடி, தாலாட்டு என 178 பாடல்களைக் கொண்டு 72 பக்கம் உடையதாக இந்நுநூல் ஆக்கம் பெற்றுள்ளது. புதுக்குடியிருப்பு கற்பரசி கண்ணகி அம்மன் பாடல்கள் எனும் நூல் 2002-ஆம் ஆண்டு நூலுருப் பெற்றது. 32 பக்கங்களைக் கொண்ட இந்நூல் காவடிப் பாடல்கள்-10, கும்மிப் பாடல்கள்-27, தாலாட்டு பாடல்-34, புதுப்பாடல்கள்-6 என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. எளிமையான கிராமிய மெட்டுக்களில் அழகுத் தமிழில் இவை எழுதப்பட்டிருக்கின்றன.

புன்னைச்சோலை பத்திரகாளி அம்பாள் பாடல்கள் எனும் நூல் 2006-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது. கும்மி, தாலாட்டு, காவடி, வேறு பாடல்கள் என்ற வரையறைக்குள் இந்நூலின் உள்ளடக்கம் அமைந்துள்ளது. 28 பக்கங்களை கொண்டவையாக இந்நூல் அமைகின்றது. அதே போன்று கல்லடி உப்போடை பேச்சியம்மாள் பாடல்கள் எனும் நூல் 2019-ஆண்டு வெளியிடப்பட்டது. இந்நூலிலும் கும்மி, காவடி, தாலாட்டு, பக்திப் பாடல்கள் என்பன காணப்படுகின்றன. அத்துடன் இவரது 'ஓங்காரானந்த சரஸ்வதி சபதம்' என்னும் நூல் திருப்பள்ளியெழுச்சி, கும்மி, காவடி, பக்திப் பாடல் மற்றும் பஜனை பாடல்கள் போன்றவற்றை கொண்டுள்ளன. 35 பக்கங்களைக் கொண்டதாக இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் இவரது முக்கியமான ஒரு நூலான பேச்சியம்பாளின் அவதாரமும் ஆலயமும் எனும் நூல் 2012-ஆம் ஆண்டு நூலுருப் பெற்றது. இதில் ஆலய அமைப்பு, பேச்சியம்மன் அவதாரம், ஆலய வரலாறு, பூசை முறைகள் என்பன காணப்படுகின்றன. இந்நூல் பேச்சியம்மன் பற்றிய காவடி, கும்மி, தாலாட்டு போன்றனவற்றையும் உள்ளடக்கியுள்ளது.

இவரால் 2012-ஆம் ஆண்டு நூலூருவாக்கப்பெறும் 'கிராமத்து உள்ளங்கள்' எனும் நூல் முழுக்க முழுக்க பக்தியிலிருந்து விடுபட்டு நாட்டாரியல் சார்ந்ததாக விளங்குகிறது. புரவலர் புத்தக பூங்கா இதனை வெளியீடு செய்துள்ளது. இந்நூல் ஈழத்து நாட்டார் பாடல்களையும், நாட்டார் இலக்கியங்களையும் விரிவாக ஆராய்கின்றது. இந்நூலிற்கு மறைந்த பேராசிரியர் செ.யோகராசா அவர்கள் அணிந்துரை வழங்கியுள்ளார். அடுத்து 'இறையின்பாவாரம்' மேலே குறிப்பிட்ட அடிப்படையில் சிறந்த ஒரு நூலாக கருதப்படுகிறது. அத்துடன் ஈழத்தில் வெளிவந்த பெரும் இலக்கியங்களில் ஒன்றாகவும் இதனைக் கருதலாம். மேலும் 2019-ஆம் ஆண்டு வெளிவந்த 'தமிழ் கூத்தியல்' எனும் நூல் கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டது. 98 பக்கங்களைக் கொண்ட இந்நூல் 'இறைவனும் புலவனும்', 'இராவண சொரூபம்' எனும் தலைப்பில் அமைந்த தென்மோடி கூத்துப் பனுவல்களைக் கொண்டது. இதற்கான நயவுரையை சாம்பசிவம் சிவாச்சாரியார் அவர்கள் வழங்குகிறார். மதிப்புரையினை மூனாக்கானா அவர்களும், மதிப்பீட்டுரையினை கா. மோகனதாசன் அவர்களும் வழங்கியும் உள்ளனர்.

2021-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட இவருடைய 'பத்தாலய பாவரங்கள்' எனும் நூலும் பத்து ஆலயங்களின் வரலாறுகளை தாங்கிய ஆவணமாக அமைகின்றன. இவ்வாறு பதினொரு நூல்களை எழுதி ஈழத்து இலக்கிய வெளிக்குரிய தாக்கியுமுள்ளார். மூன்று வருடங்கள் தொடர்ச்சியாக கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தினால் வழங்கப்படும் இலக்கிய விருதுனை இவரது கூத்தியல், வில்லடிப்பாட்டு, பத்தாலய பாவரங்கள் முதலான நூல்கள் பெற்றுக்கொண்டன. இவ்வாறு ஆரையூர் அருளம்பலம் அவர்களின் இலக்கியப் பணிகள் அமைகின்றன. இவை ஒவ்வொன்றும் தனித்தனியாக ஆய்வுகளுக்கு உட்படுத்த வேண்டியவை. அத்துடன் பல்வேறு தளங்களில் பரவலாக்கம் செய்யப்பட வேண்டியவை. இவரது ஒரு சில இலக்கியங்களைப் பற்றி பல்கலைக்கழக ஆய்வாளர்கள் ஆய்வு செய்தாலும் முழுமையான ஆய்வுக்கு உட்படுத்தி எதிர்கால சந்ததிக்கு கையளிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வது உயர்கல்வி நிறுவனங்கள், திணைக்களங்கள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் போன்றவற்றின் கடமையாகவுள்ளது. ஏனெனில் புலமைகளைத் திருடிப், பண்பாடுகளை தமக்கானதாக மாற்றிக் கொள்ளும் இலங்கைச் சூழலில் இவருடைய பாடல்கள் வரலாறுகளைச் சுமந்து நிற்கின்றன. இவை இன்னுமொரு நூற்றாண்டுகளுக்கு பின்னால் பண்பாட்டை மீட்டுருவாக்கம் செய்யக் கூட உதவலாம்.



kuganathan.e@thaiveedu.com




# ஆரையூர் அருளரும் நாடகத் துறையும்

*– சிவப்பிரியா வில்வரத்னம்*

கிழக்கிலங்கையில் மட்டக்களப்பு நகரில் இருந்து தென் பால் அமைந்துள்ள இயற்கை வனப்புடன் கூடிய பழம் பெரும் கிராமம் ஆரையம்பதி. இக்கிராமம் மட்டக்களப்பிலுள்ள ஏனைய கிராமங்களுக்கு முன்னுதாரணமாகவும் பண்பாட்டின் தொட்டியாகவும் கலைகளின் இருப்பிடமாகவும் விளங்குகின்றது. இக்கிராமம் தனக்கென்றொரு பண்பாட்டு பாரம்பரிய கலா சார விழுமியங்களை கொண்டு விளங்குவதுடன் பாரம்பரிய கலை வடிவங்களான கூத்து, மகிடிக்கூத்து எனப் பல பாரம் பரிய கலை வடிவங்களையும் எமக்குத் தந்துள்ளது. நவீன நாடக வளர்ச்சிக்கும் உறுதுணையாக விளங்குகின்ற கிராம மாகவும் ஆரையம்பதி காணப்படுகின்றது. இவ்வாறாக முன் னெடுப்பிற்கு, பல ஆளுமைகளின் தொடர்ச்சியான இருப்பும் செயற்பாடுகளுமே காரணமாகும். இவர்களில் முதன்மைச் சாதனையாளர்களுள் குறிப்பிட்டுச் சொல்லப்படும் ஒருவரா கவே ஆரையூர் அருள் அவர்கள் விளங்குகின்றார். இவருடைய கலைப் பயணங்களில் குறிப்பாக நாடகச் செயற்பாடுகளின் தனித்துவங்களை சான்றுபகர முடியும்.

இன்று மேலைத்தேய கோட்பாடுகளையும் அவர்களது சிந் தனைகளையும் தெரிந்து வைத்திருக்கின்ற அளவிற்கு எமது மாவட்டத்தில் இன்றும் கண்முன்னே வாழ்ந்து கொண்டிருக் கின்ற கலை, இலக்கிய செயற்பாட்டாளரான ஆரையூர் அருள் பற்றிய புரிதலும் அவர் பற்றிய தேடல்களும் குறைவாகவே காணப்படுகின்றது. பன்முக ஆளுமையாளரான அருள் பற்றிய பல தரப்பட்ட ஆய்வுகள் வெளிவர வேண்டும். வெளிவரும்போ துதான் அருளம்பலத்தின் கலை இலக்கிய செயற்பாடுகள் அடுத்த தலைமுறைகளுக்கு கடத்தப்படும் என்பது திண்ணம்.

காத்திரமான பல்வேறு கலை இலக்கிய செயற்பாடுகளுக்கும் சொந்தக்காரரான ஆரையூர் அருள் அவர்களின் நாடகச் செயற்பாடுகள் பற்றி எடுத்து நோக்குவது இன்றியமையாத தாகும். இவர் ஆரம்ப காலத்தில் நாடகங்களில் நடிகராக இணைந்து செயற்பட்டு பல நாடகங்களில், பாத்திரங்கள் பல வற்றைத் தாங்கி நடித்து பார்வையாளர்களின் பாராட்டுக்க ளையும் பெற்றவர். தனது நடிப்பாற்றல் திறமையை வெளிக் கொண்டுவந்த ஆரையூர் அருள், நாடகங்களைத் தானே எழு துகின்ற நாடக ஆசிரியராகவும் மிளிரத் தொடங்கினார்.

இவரது நாடகங்களை சமூக நாடகம், சிறுவர் நாடகம், இதி காச நாடகம், புராண நாடகம், நகைச்சுவை நாடகம், வரலாற்று நாடகங்கள் என வகைப்படுத்தி நோக்கலாம். ஆரையூர் அருள் அவர்களால் எழுதப்பட்ட சமூக நாடகங்கள் இவரது காலப் பகுதயில் சமூகங்களில் காணப்படுகின்ற பிரச் சினைகளையும் மக்கள் எதிர்கொள்கின்ற சவால்களையும் மையப்படுத்தியதாகவே அமைகின்றன. இவரால் எழுதப்பட்ட சமூக நாடகங்களாக 'சமர்ப்பணம்', 'நல்லதம்பி', 'புதியவிதி சமைப்போம்', 'அளவான குடும்பம்', 'பெரியோரை கனம் பண்ணுவோம்', 'தியாக தீபம்', 'இணைந்த இதயங்கள்' போன்ற நாடகங்களைக் குறிப்பிடலாம்.


சிறுவர் நாடகங்களையும் சிறுவர்களது மனநிலைக்கேற்ப அவர்களது கற்பனைத் திறனுக்கேற்ப நாடகங்களை எழுத வேண்டும். சிறுவர் நாடகம் எழுதுவதென்பது ஒரு சாதாரண விடயமல்ல. அவற்றைச் சவாலாக ஏற்று சிறுவர்களுக்கு உரிய வகையில் சிறுவர்களுக்கு சிறந்த கருத்துகளை எடுத் துக் கூறுகின்ற நாடகங்களை இவர் எழுதினார். இவரால் எழு தப்பட்ட சிறுவர் நாடகங்களாக 'ஒரே தாய்பிள்ளை', 'மரவளம் வளர்ப்போம்', 'கல்வியே கலங்கரை விளக்கு', 'முயற்சியே இருவி னையாக்கும்', 'கல்வியே அழகே அழகு', 'உண்மை விளக்கு' போன்றவற்றைக் கூறலாம்.

இதிகாச மற்றும் புராண நாடகங்களும் இவரால் எழுதப் பட்டன. 'குந்தியின் வரம்', 'ஊர்வசி பெற்ற சாபம்', 'இறைநம் பிக்கை' போன்ற இதிகாச புராண நாடகங்களை இவர் எழுதி யுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. அது மாத்திரமன்றி நகைச் சுவை மற்றும் வரலாற்று நாடகங்களையும் இவர் எழுதி யுள்ளார். 'சிலைகளும் சிரிக்க வைக்கும்' என்ற நகைச்சுவை நாடகமும், 'மாயவேட மன்னன்' என்ற வரலாற்று நாடகமும் இவருக்குப் பேரையும் புகழையும் ஈட்டித் தந்தது.

ஆரையூர் அருள் அவர்களது மேற்கூறப்பட்ட நாடகச் செயற் பாடுகளை வைத்துப் பார்க்கின்ற போது ஈழத்து தமிழ் நாடக வளர்ச்சிக்கு பாரிய பங்களிப்பை அவர் வழங்கி வருகின்ற மையைக் காணமுடிகின்றது. இவரது நாடகப் பிரதிகள் ஒவ் வொன்றும் கற்றலுக்கும் ஆய்வுக்கும் உரியவை. இப்பிரதிகள் பிரதேச ரீதியாகவும், மாவட்ட ரீதியாகவும், தேசிய ரீதியாகவும் பாராட்டுக்களையும் பரிசில்களையும் பெற்றவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

எனவே மேற்கூறப்பட்ட விடயங்களை தொகுத்து நோக்கு கின்ற போது ஆரையூர் அருள் அவர்கள் ஈழத்தமிழர்களின் பண்பாட்டு நடைமுறைகளுக்கும் அப்பண்பாடு இன்றும் உயிர்நாடியாக இருப்பதற்கும் உரிய செயற்பாட்டினை தனது கலை இலக்கியச் செயற்பாட்டின் ஊடாகவும் நாடகச் செயற் பாட்டிற்கூடாகவும் புரிந்துள்ளார் என்பதோடு, பன்முக ஆளு மையாளராகவும் இன்று வரையும் தொடர் செயற்பாட்டாளரா கவும் பயணித்துக் கொண்டிருக்கின்றார். இவரது செயற்பா டுகள் அனைத்தும் வருங்கால தலைமுறைகளுக்கு ஒரு படிப் பினையாக அமையும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

கிழக்கு மாகாணத்தின் முதன்மை சாதனையாளரான ஆரையூர் அருள் அவர்களின் கலை, கலாசார, பண்பாட்டு செயற்பா டுகள் மேலும் தொடரட்டும்.



sivapriya.v@thaiveedu.com






ஆரையூர் அருள் அவர்களின்

# வில்லடிப்பாட்டு

## நூல் மதிப்பீடு

க. மோகனதாசன்

வில்லுப்பாட்டானது மக்களின் அகத்திலெழும் உணர்வு களோடு ஒன்றி வளரும் கலையாகக் காணப்படுகிறது. நாட கத்தன்மை மிகுந்த நிலையில் கதை கூறலில் இது உரு வாக்கித் தரும் பயன்பாடுகள் பலவாகும். மரபு வழிக்க தைகள் முதல் இன்றைய அறிவியல் வளர்ச்சி நிலைகள் வரை வாழ்வியலை, அதன் தத்துவத்தை எளிதாகக் கூறும் வல்லபம் வாய்ந்தது வில்லுப்பாட்டு. தமிழுக்குத் தனித்துவம் வாய்ந்த இலக்கிய வடிவமாகவும் ஆற்றுகை வடிவமாகவும் இது துலங்குகின்றது. இதனால் மிகச்சிறந்த கதைக் கூற்ற ரங்கு (Narrative Theatre) என்ற நிலையை வில்லுப்பாட்டுப் பெறுகிறது. மக்களையும் கதையின் போக்கினூடே ஒன்ற வைத்துக் கதை கூறும் வடிவமாக, எந்தக் கால அளவுக் குள்ளும் ஒரு கதையினைப் படைத்துக்காட்ட ஏற்ற வடிவமாக இது திகழ்கிறது.

ஆக, நம்மோடு இயல்பாக உரையாடக்கூடிய தன்மை வில் லுப்பாட்டுக்குள்ளது. இந்த சாத்தியங்களைக் கருத்திற் கொண்டே, தமிழின் மகத்துவங்களைப் பண்பாட்டின் நடுவ ழியில் தவறவிடப்பட்ட வாழ்வை மீளக்கொணரும் வேட்கையில் பல்கலை வித்தகர் மூ.அருளம்பலம் அவர்களால் காலத்தின் தேவைகருதி உருவாக்கப்பட்டிருக்கிறது. 'வில்லடிப்பாட்டு' எனும் நூலாகும். இந்த நூல் ஆ.மு.சி. வேலழகன் ஐயா அவர் களுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

இந்த நூல் முழுவதுமாக படித்து முடித்தவுடன் விடுபட்ட நமது வாழ்வு பற்றிய ஏக்கம் பிறக்கிறது. மனதில் ஏற்படும் வெறுமையை நிரப்ப கண்களும் மனதும் புற உலகை தீராத ஏக்கத்துடன் பார்க்கிறது. நூலாசிரியரின் எழுத்தும் அவர் எடுத்துத்தரும் அர்த்தமும் அதன் தத்துவமும் ஒரு கனவினை ஓர் அழகிய வாழ்வினை வாழும்படி கை நீட்டி அழைக்கிறது.

‘வில்லுப்பாட்டு’ எப்படி உருவானது? பாண்டிய மன்னர் வில்லுடன் வேட்டைக்குப் போனார். பல விலங்குகளை வேட்டையாடினார். மாலை நேரம் வந்ததும், மன்னர் மனதில் கலக்கம். அமைச்சரிடம் ‘இந்த உயிர்களை இப்படிக் கொல்லுகிறோமே, நமக்கு சந்தோஷம், அவற்றுக்கோ துன்பம். மானைக் கொன்ற பின், அதன் குட்டி எப்படித் தவிக்கிறது பார்த்தீர்களா? என்றார். சரி, இதற்கெல்லாம் பரிகாரம் உண்டா? ‘உண்டு ராஜா. இறைவன் மீது மனமுருகப்பாடி பாவமன்னிப்புக் கோருங்கள். இசை ஒன்றுக்குத் தான் இசைவான்’ என்றார் அமைச்சர். உடனே காட்டிலேயே கச்சேரி நடத்த முடிவானது. ஆனால் பக்க வாத்தியங்கள் இல்லை. கொண்டு வந்த பொருட்களை இசைக்கருவிகளாக்கினர். வில்லைத் தரையில் வைத்து அம்பால் தட்டி இசை எழுப்பினார் மன்னர். அப்படி தட்டும் போது வில் சரிவர நிற்காததால். தண்ணீர் கொண்டு போயிருந்த மண் குடத்தைக் கட்டித் தட்டினார். ஓம் ஓம் என்று நாதம் பிறந்துவிட்டது. ராஜா பாட்டைத் துவங்கும் முன், ‘தந்தனத்தோம்’ என்று அடியெடுத்துக் கொடுத்தார் அமைச்சர். மன்னர் பாடும் போது, ஆமோதிக்க வேண்டாமா? அதனால் மன்னரின் உதவியாட்கள் ‘ஆமாம்’ போட ஆரம்பித்தனர்... என, அதன் வரலாற்றை வில்லுப்பாட்டு பிறந்த கதையாகத் தருகிறார் நூலாசிரியர்.




வில்லின் தத்துவம், வில்லிசையில் உடுக்கின் சிறப்பு, குடத்திற்குக் கிடைத்த இடம், வில்லுப்பாட்டின் முதன்மை துணைக்கருவிகள், வில்லுப்பாட்டு அன்றும் இன்றும், இறைவணக்கப் பாடலில் ஏற்பட்ட மாற்றங்கள், வில்லுப்பாட்டின் அமைப்பு எனும் உபதலைப்புக்களில் வில்லுப்பாட்டின் மகத்துவம் ஆய்வு நோக்கில் தரப்பட்டிருக்கின்றன. ‘உடுக்கெடுத்துப் பிடித்த கைக்குப் பேர்தான் சொல்லு, ஓங்கியே அறைந்த கையின் உருவம் சொல்லு...’ என்பதான பாடல் உடுக்கின் தெய்வீகத் தன்மையினை எடுத்தியம்புகின்றது. அந்த தெய்வீக இணைப்பின் முக்கியத்துவம் வில்லிசையில் உணரப்படுகின்றது.

வில்லுப்பாட்டு அன்றும் இன்றும் எனும் பகுதியில் அக்கால நிலைமைகள், இக்காலத்தில் ஏற்பட்ட, ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள், வில்லிசைக்கு உயிர் கொடுத்த கலைஞர்கள் போன்ற விடயங்களைத் தருகிறார். வில்லுப்பாட்டின் கட்டமைப்பு பெரும்பாலும் ஏழுவகைகளாகப் பிரிக்கப்படுகின்றன. இறைவணக்கமாக அமையும் காப்பு விருத்தம், குறிப்பிட்ட கதையை இன்று வில்லில் கூறப் போவதாக ஆசிரியர் முன்கூட்டியே குறிப்பிடும் நுதலிப்பாடுதல் எனும் வருபொருள் உரைத்தல், தனக்கு ஆசிரியராக இருந்தவரை நினைத்து வணங்கி நலம் உண்டாக உதவுமாறு கோரும் குருவடி பாடுதல், கதை கூறுவோர் தன்னை எளியோனாகவும், கேட்போரைச் சான்றோராகவும் கருதி கூறப்பெறும் அவையடக்கம், நாட்டு வளத்தைக்காட்டும் நாட்டு வளம், கதை முழுமையாகக் கூறப்பெறும் கதைக்கூறு, கதை கேட்போர், கதை மாந்தர், கதை கூறுவோர் என அனைவரும் நலம்பெற வாழ்த்துவதாகப் பாடும் வாழிபாடுதல் என்பன வில்லுப்பாட்டின் முக்கிய அங்கங்களாகும்.

வித்தகர் விபுலானந்தர், ஜீவ சேவையே சிவசேவை, ஞானவிளக்கு, சுத்தம் சுகம் தரும். ஒன்றே குலம் ஒருவனே தேவன், அல்லற்காலை நில்லலன் மன்னே, சமநீதியே சரிநீதி, சித்திர புத்திரன், அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றாகும், நோதலும் தணிதலும் அவற்றோர் என்ன, தேறற்க யாரையும் தேறாது, தானே வரும் தன்கேடு, மகளீர் நிறை காக்கும் காப்பே தலை, சினம் சினந்தாரைக்கொல்லும், மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம், புலித்தலைமை நாய் மோத்தல் இல், குறைப்பர் தம்மே வீழப்பனை, மயிர் நீப்பின் வாழாக் கவரிமான், யாகாவராயினும் நா காக்க, உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என இருபது பிரதிகள் இத்தொகுப்பிலுள்ளன.

புராண இதிகாசக்கதைகளாகவும் அதன் கிளைக்கதைகளாகவும் தமிழர்களின் விழுமியங்கள் பற்றிப் பேசுவனவாகவும் அடியார்கள் புகழ் உரைப்பதாகவும், அரசர்கள், புலவர்கள், முனிவர்கள், பெரியோர்கள் பற்றிய கதைகளாகவும் கல்வி, சுகாதாரம் பற்றியனவாகவும் இவ்வில்லடிப்பாட்டுக்கள் அமைகின்றன. இந்நூலிலுள்ள 20 வில்லுப்பாட்டுகளும் வில்லுப்பாட்டுக்குரிய கட்டமைப்புகளைக் கொண்டதாக உள்ளன. ஒரு கதை வில்லடிப்பாட்டாக விரிக்கையில் அங்கு படரும் வார்த்தைகளின் அர்த்தங்கள் கேட்போரை மெய்மறக்கச் செய்கின்றன. தெம்மாங்கு, சிந்து, கண்ணி இசை மெட்டுக்களைக் கொண்டனவாக இவை விளங்குகின்றன. இலகுவான உள்நுழைவினைத் தர வல்ல எளிமைத் தன்மை வாய்ந்தவைகளாகக் காணப்படுகின்றன. எடுத்த கருத்தினை தெளிவாக சொல்லும் ஆழமிக்கவைகளாகவும் சமகாலப் பதிவேற்றங்களையும் இட்டு நிரப்பும் தன்மை வாய்ந்தவைகளாகவும் நகைச்சுவைத் தன்மை நிரம்பப் பெற்றவையாகவும் காணப்படுகின்றன.

வாழ்க்கை எப்போதுமே கையருகில் உள்ள பேரதிசயம். அந்தப் பேரதிசயத்தை, வாழ்வின் அர்த்தங்களைத் தன்னுள் புதைத்து வைத்திருக்கும் ஓர் அழகிய வாழ்வை அழித்துவிடத்துடிக்கும் பல்தேசியக் கம்பனிகளின் கீழ்த்தரமான உத்திகளின் கிராதிகளின் இடைவெளியில் சிக்கித் தவிக்கும் வாழ்வொன்றிலிருந்து விடுவிக்கத் துடிக்கும் அழைப்பாக பல்கலை வித்தகர் ஆரையூர் அருள் ஐயா அவர்களின் குரல் நம்மைத் தொடுகிறது. அன்பைப் பிரவகிக்கும் நாட்டுப்புறத் தமிழிலக்கியப் பக்கத்தின் பெருங்கடல், மெல்லிய அலையாக முதுகில் தொட்டு, தன்னை உணர்த் தும் மென்மை, எல்லோரையும் கைகோத்துக்கொள்ளும் பேரன்பு. இவையே அவரின் அடையாளமாகிறது.




mohanathasan@thaiveedu.com






# பக்தி இலக்கியப் படைப்புகள்

## ஒரு விமர்சனப்பார்வை

*- பிரியதர்ஷனி ஜெதீஸ்வரன்*

ஈழத்தின் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மண்முனைப் பற்று பிரதேச சபைப்பிரிவுக்கு உட்பட்ட ஆரையம்பதியைச் சேர்ந்த ஓய்வு நிலை அதிபரும் கவிஞரும் எழுத்தாளருமாகிய செம்மொழிப் புலவர் ஆரையூர் மூ. அருளம்பலம் அவர்கள் ஓர் கலை இலக்கியச் செயற்பாட்டாளராவார். தனது வாழ் நாளில் கல்விப்பணியைச் சிரமேற்கொண்ட அவர் தன் பிரதே சமாகிய மட்டக்களப்பின் பாரம்பரியக் கலைபண்பாட்டு விழு மியங்களைப் பேணிப் பாதுகாப்பதோடு மட்டுமன்றி அதன் மரபுமாறா புதிய ஆக்கங்களைப் படைக்கும் ஓர் படைப்பாளி யுமாவார். இயல், இசை, நாடகம் என பல்துறை சார்ந்த அவரது படைப்புகள் கவிதை, சிறுகதை, கட்டுரைகள், நாட கங்கள், வில்லுப்பாட்டுகள், கூத்துகள், பக்தி இலக்கியங்கள் என கலை இலக்கியப் பணிகள் விரிந்துசெல்வன.

இலக்கியங்களைக் காலக்கண்ணாடி என்பர். தன் வரலாறு தெரியாத அல்லது போற்றிப் பாதுகாக்கத் தவறிய சமுகம் தன்னைத் தக்கவைக்க முடியாத ஓர் நிலையில்லா சமூக மாகும். அந்தவகையில் நம் தொல் தமிழ்க்குடிகள் தீர்க்கதரி சனம் மிக்க சமூகமாக வாழ்ந்திருப்பதும் தம் வரலாற்றின் செழுமையினை இலக்கியங்களிலும் கல்வெட்டுக்களிலும் ஓலைச்சுவடி களிலும் கட்டடங்களிலும் பதித்துச் சென்றிருப்ப தையும் நாம் காணலாம். இன்று எம் வரலாற்றை அறியவும் அதன் தனித்துவங் களைக் கண்டுணரவும் இவை வழிகோலு கின்றன. பிற சமூகங்களிலிருந்து நாம் கொண்டவற்றையும் கொடுத்தவற்றையும் கண்டறியவும் இவை வழி சமைத் துள்ளன.

இலங்கையின் கிழக்குப்பிரதேசம் மானிடவியலாளர்களின் ஓர் ஆய்வுச்சுரங்கம். அதனைத் தவிர்த்து இலங்கையின் வர லாற்றை குறிப்பாக தமிழர் வரலாற்றை எழுதிவிட முடியாது. இங்கு காலத்திற்குக்காலம் வந்தேறிய இந்திய குடிகளும் பட் டாணிகளும் மேலைநாட்டவரும் கிழக்கின் பூர்வீக குடிக ளுடன் பண்பாட்டாலும் இனக்கலப்பினாலும் விட்டுச் சென்ற தொன்மங்கள் இன்றுவரை இனங்களாகவும் மதங்களாகவும் காணப்படுகிறன. அந்தவகையில் கிழக்கு பிரதேச சமூகம் ஒரு பன்மைத்துவ பண்பாட்டைக் கொண்ட சமூகமாகும். இங்கு வாழும் சைவமக்கள் ஆகமவழிபாடுகளைப் பின்பற்றி னாலும் தம் வழிபாட்டுமுறைகளிலும் வாழ்வியல் நெறிக ளிலும் பூர்வீக மக்களின் பண்பாடுகளைச் சடங்குகளாக இன்றுவரை நம்பிக்கையுடன் பேணிப்பாதுகாத்து வருவதை கண்கூடாகக் காணலாம். இங்கு வாழும் வேடர்கள் எனும் பழங்குடிமக்கள் தம் வாழ்வியலில் தமக்கென குமாரத்தன், புள்ளிக்காரன், பொல்லுக்காரன், மாநீலி, குடாநீலி, தெவுத் தன், மாறா, மறுமுந்தநாச்சி எனப்பல தெய்வங்களை அவர் களுக்கான குறித்த சடங்குகளை இயற்றி பாடல்களைப்பாடி

கொட்டு எனும் வாத்தியத்தை வாசித்து மிகுந்த பயபக்தி யுடன் வழிபட்டு வருகின்றனர்.

மேலும் ஏனைய மக்கள் பிராமணர்களாலும் சைவக் குருக் கள்மார்களாலும் மந்திரம் ஓத ஆகம விதிக்கமைவான வழி பாடேற்கும் பிள்ளையார், முருகன், சிவன், அம்பாள், கிருஷ்ணன் போன்ற பெருந்தெய்வங்களை வணங்கும் மக்களாக காணப் படுவதுடன் தம் பூர்வீக கிராமியத்தெய்வங்களான காளியம்மன், கண்ணகையம்மன், மாரியம்மன், பேச்சியம்மன், கடல்நாச்சி யம்மன், திரௌபதையம்மன், வீரமாகாளி, நரசிங்கவைரவர், நாகதம்பிரான், வீரபத்திரர், நாகம்மை, வாசுகியம்மன் போன்ற ஆகமம் சாராத சடங்கு வழிபாடு என்னும் பத்ததி விதிமுறைக்கிணங்க நடைபெறும் வழிபாட்டினை ஏற்கும் தெய்வங்களையும் மிகுந்த பயபக்தியுடன் சடங்காற்றி வழிபடு கின்றனர். வருடம் ஒருமுறை இம்மடாலயங்களின் கதவுகள் திறக்கப்பட்டு குறித்த மூன்று அல்லது ஐந்து நாட்கள் இச்ச டங்குகள் தேவாதிகளின் ஆடலுடனும் பாடலுடனும் மந்திர உச்சாடனங்களுடனும் நடைபெறும். அக்காலங்களில் அவ் வூரே கோலாகலமாகக் காட்சியளிக்கும். எங்கும் சடங்குப்பா டல்கள் கேட்டவண்ணம் இருக்கும். அக்காலங்களில் அம்மக் களின் நடைமுறை வாழ்க்கையின் அனைத்து விடயங்களும் சடங்கை நோக்கியதாகவே காணப்படும். இன்று காலமாற்றங் களால் சிலகோயில்கள் ஆகமமுறைக்கேற்ப தினப்பூசைகள் நடைபெறும் கோயில்களாக காணப்பட்டாலும் குறித்த காலங் களில் அவற்றிற்கான சடங்குகளும் நடைபெறக்காணலாம்.

இத்தகைய பண்பாட்டினை அடிப்படையாகக் கொண்ட மட் டக்களப்பு பிரதேசத்தில் ஆரையம்பதி என்னும் ஊர் ஏராளமான கோயில்களைத் தன்னகத்தே கொண்டது. இவ் வூரில் பிறந்து வளர்ந்த திரு. மூ. அருளம்பலம் அவர்கள் தன் இயல்பான நற் குணாம்சங்களாலும் இறைபக்தியினாலும் இவ்விருவழிபாடுகளிலும் தன்னை இணைத்துக் கொண்டவர். அவரது பல்திறப்பட்திறன்கள் கிராமியக் கலைகளிலும் இலக் கியங்களிலும் பரிணமித்தன. சடங்கு வழிபாட்டினைப் பிர தான வழிபாடாகக் கொண்ட இம்மக்களிடையே காணப்படும் பக்தி இலக்கியங்கள் பலவும் அக்கோயில்களின் வரலாறு கூறும் நூல்களாகவும் அத்தெய்வங்களின் மேல் பாடப்பட்ட பாடல்களாகவும் காணப்படுகின்றன. இவை பெருந்தெய்வக் கோயில்கள், அவற்றின் தெய்வங்கள், சடங்குவழிபாட்டை ஏற்கும் கிராமியத் தெய்வங்கள் எனப் பலதிறப்பட்டன. இங்கு தான் தெய்வங்கள் மீது பாடப்பட்ட மூ. அருளம்பலம் அவர் களின் பக்தி இலக்கியங்களும் விதந்துரைக்கப்படுகின்றன. இவரது பக்திசார்ந்த படைப்புக்கள் ஏராளம். அவை கட்டு ரைகள், நாடகப்பிரதிகள், கூத்துப்பிரதிகள், வில்லுப்பாட் டுகள், பக்திப்பாடல்கள் எனப் பல துறைப்பட்டன. அந்த வகையில் இவரது படைப்புக்களில் பெரும்பகுதியாக காணப் படுபவை இறையின்பம் பயக்கும் பக்திப் பாடல்களாகும்.

அவர்களது பக்தி இலக்கிய வெளியீடுகளை நாம் மூன்று பெரும் பிரிவுகளுக்குள் அடக்கலாம். ஒன்று எழுத்துருப் பெற்று ஆற்றுகை செய்யப்பட்ட இலக்கிய வகை. மற்றயவை எழுத்துருப் பெற்ற பக்திப்பாக்கள். ஏனையவை இசை இறு வட்டுகள். அந்தவகையில் ஆற்றுகை செய்யப்பட்ட இலக்கிய வடிவங்களில் அவர் 20 வில்லுப்பாட்டுகளை இயற்றி பயிற்று வித்திருக்கிறார். அவற்றுள் சித்திரபுத்திரர்(1987), இளையான் குடிமாறநாயனார்(2013), போன்றவை பக்திசார்ந்தன. அவர் இயற்றிய 20 நாடகங்களுள் 'குந்தியின் வரம்(1981), திருநா வுக்கரசர்(1986), ஊர்வசி பெற்ற சாபம்(1998), குந்தியின் மடி யில்(1994), இறைநம்பிக்கை(2004)', போன்றன இதிகாச, புராண நாடகங்களாகும். அவர் எழுதி ஆற்றுகைசெய்த 18 வடமோடி, தென்மோடிக் கூத்துகளில் பலவும் பக்தி சார்ந்தவை. இவை ஒருவகை.

அவர் பல பக்திப் பாடல்களை நூல்களாக வெளியிட்டிருக் கின்றார். 'ஈழத்து திருச்செந்தூர் முருகன் ஆலயம் சிதானந்த தபோவனம் ஸ்தாபகர் ஓம்காரானந்த சரஸ்வதி சரிதம்(2010), பேச்சியம்மன் அவதாரம் ஆலயமும்(2012) என்பவை சரித் திரம் கூறும் நூல்களாகவும் 'கிராமத்து உள்ளங்கள்'(2013) என்னும் நூல் நாட்டார் இலக்கியமாகவும் காணப்படுகின்றது. மேலும் சிவநேசனார் ஆலயம்(1992-காவடி, ஊஞ்சல்), செல் வாநகர் சிவன்மேல் காவடிப் பாட்டு(1992) ஆரையம்பதி பேச் சியம்மாள்(1993-காவடி, கும்மி, தாலாட்டு கரகம், காவியம்), செல்வாநகர் காளிகோயில்(1995- தாலாட்டு, கும்மி, ஆக்கப் பாடல்கள்), வம்மிக்கோணி மாரியம்மாள்(1996-காவடி, கரகம். தாலாட்டு, ஆக்கப்பாடல்கள்), கோளாவில் மாரியம்மன் கோயில் (1997-காவடி, கும்மி, ஆக்கப்பாடல்கள்), கல்லடி உப்போடை பேய்ச்சியம்மாள் பாடல்கள்(2001), கல்லடி திருச்செந்தூர் முருகன்(கும்மி, காவடி, பக்திப்பாடல்கள், திருப்பள்ளியெ ழுச்சி) ஆகிய புத்தகங்களையும் வெளியிட்டு மட்டக்களப் புக்கு பெருமை சேர்த்தார். மேலும், கல்லடி உப்போடை பேச் சியம்பாள்(2001) காவடி, கும்மி, தாலாட்டு, பக்திப்பாடல்), மட்/ புதுக்குடியிருப்பு கற்பரசி கண்ணகி அம்பாள் பாடல்கள்(2002) மஞ்சந்தொடுவாய் வீரபத்திரர் காவியம் (2002), ஆலயடி வீர பத்திரர் காவியம்(2003), திமிலதீவு கிருஷ்ணர்(2004-காவடி, ஆக்கப்பாடல்கள்), புன்னைச்சோலைக் காளி(2006-காவடி, கும்மி, ஆக்கப்பாடல்கள், பக்தி பாடல்கள்), புன்னைச்சோலை ஸ்ரீபத்திரகாளி அம்மன் பாடல்கள்(2006), ஆனைப்பந்தி பிள் ளையார் (2008- காவடிப் பாடல்கள்), கல்லடி உப்போடை நொச்சிமுனை ஸ்ரீசித்திவிநாயகர், ஸ்ரீபேச்சியம்மன் பாடல்கள் (2010), கல்லடி உப்போடை பேச்சியம்மாள் பாடல்கள் (2010) என ஏராளமான பக்திப் பாக்களை எழுதியுள்ளார்.

பெரும் பக்தி இலக்கியமாகக் கொள்ளப்படும் அவரது பாடல்கள் 'இறையின்பப் பாவாரம்' என்னும் பெயரில் நூலு ருப்பெற்றுள்ளது. இந்நூல் 714 பக்கங்களையுடைய மிகப் பெரும் கவிதை நூல் என்ற பெருமையைப் பெறுகிறது. மொத்தம் 3010 பாடல்களைக் கொண்ட இந்நூலே ஈழத்தின் பக்திப் பாடல் வரிசையில் மிகப்பெரிய நூலாகும். பக்திப் பாடல்கள், பஜனைப் பாடல்கள், ஊஞ்சற் பாடல்ள், தெம் மாங்குப் பாடல்கள், தாலாட்டுப் பாடல்கள், கும்மிப்பா டல்கள், காவடிப்பாடல்கள், காவியம், திருப்பள்ளியெழுச்சி பாடல்கள் என பல வகைக் கிராமியப் பாடல்களை இந்நூல் கொண்டமைந்துள்ளது. இவை கிழக்கு மாகாணத்திலே கோவில் கொண்டுள்ள விநாயகர், சிவன், முருகன், விஷ்ணு, வைரவர், வீரபத்திரர், அனுமன், நரசிங்கர், நாகலிங்கேஸ்வரர் ஆகிய ஆண் தெய்வங்களின் மீதும் கண்ணகை, பேச்சி, மாரி, காளி, கடலாச்சி, காமாட்சி ஆகிய பெண் தெய்வங்களின் மீதும் பாடப்பட்டுள்ளன. இப்பாடல்களைத் தங்கள் ஆலய வரலாறு, தெய்வ முகூர்த்தங்களின் அவதாரம், அற்புதம், பூசை சடங்கு முறைகள், ஆலய அமைவிடங்கள் என்பவற்றை வைத்து அமைத்து தரும்படி அவ்வவ் ஆலய பரிபாலன சபைகள், ஊரவர், அன்பர்கள் கேட்டுக்கொண்டதற்கு அமையவே பாடல்கள் எழுத்துருப் பெற்றன. இப்பாடல்கள் 1980 முதல் 2016 வரை இயற்றப்பட்ட பாடல்கள் ஆகும். பெரும்பாலும்



ஒவ்வொரு பாடல்களின் கீழும் அப்பாடல்கள் ஆக்கப்பட்ட ஆண்டு, மாதம், திகதி குறிப்பிடப்பட்டுள்ளன. அவ்வக்காலங்களில் நடைபெற்ற சமகாலச் சம்பவங்களும் பாடல்கள் பலவற்றில் சுட்டிக்காட்டப்பட்டிருப்பது எதிர்கால சந்ததியினர் உண்மைகளை கண்டறிவதற்கு உதவும்.

விநாயகர் துதியுடன் ஆரம்பித்து தொடர்ந்து நாமகள்துதி பாடி தனது தாய்க்கு அந்நூலைச் சமர்ப்பணம் செய்கிறார். தொடர்ந்து விநாயகர் மீது 28 கும்மிப்பாடல்களைப் பாடி தன் கும்மிப் பாடலை ஆரம்பிக்கிறார். இதனை விநாயகரது பிரதாபங்களை கூறி ஓர் காப்புக் கும்மியாக பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அவரது கும்மிப்பாடல்கள் மாமாங்கப் பிள்ளையார், களுதாவளைப்பிள்ளையார், கல்லடி உப்போடை சித்திவிநாயகர், கொக்கட்டிச்சோலை தான்றோன்றீஸ்வரர், திருமலை திருக்கோணேஸ்வரர், சித்தாண்டி சித்திரவேலாயுதர், ஆரைநகர் கந்தன். தாந்தாமலை முருகன், ஈழத்து திருச்செந்தூர் முருகன், தில்லை மண்டூர் முருகன், ஆரைநகர் விஷ்ணு, தாழங்குடா நிசப்த ஸ்ரீகிருஷ்ணன், ஐயப்பன், முனைக்காடு ஸ்ரீநாகலிங்கேஸ்வரர், ஆரைநகர் கண்ணகியம்பாள் (இரு கும்மிப்பாடல்கள்) செட்டிபாளையம் கண்ணகியம்பாள், புதுக்குடியிருப்பு கண்ணகியம்பாள், மகிழடித்தீவு கண்ணகியம்பாள், ஆரைநகர் பேச்சியம்பாள் கல்லடி உப்போடை பேச்சியம்பாள், ஆரைநகர் வம்மிக்கேணி முத்துமாரி, கோளாவில் முத்துமாரி, நாவற்குடா ஸ்ரீமாரி, ஆரைநகர் செங்குந்தார் வீதி முத்துமாரி, காளியம்பாள், செல்வநகர் பத்திரகாளி, ஆரைநகர் பத்திரகாளி, திருகோணமலை பத்திரகாளி, மட்/வேலூர் பத்திரகாளி, புன்னைச்சோலை ஸ்ரீபத்திரகாளி பெரிய போரதீவு பத்திரகாளி, ஏற்றம் புல்லுமலை நாககன்னி, மயிலம்பாவெளி ஸ்ரீகாமாட்சி, போன்ற கோயில் களிலும் மடாலயங்களிலும் எழுந்தருளி அருள்பாலித்துக் கொண்டிருக்கும் தெய்வங்கள் மீது இயற்றிப்பாடியிருக்கின்றார். இக் கும்மிப்பாடல்களை மட்டக்களப்பில் பயில்நிலையிலுள்ள கும்மிப்பாடல்களின் பாரம்பரிய தருவுக்கமைவாக இயற்றியிருக்கின்றார்.

மேலும் ஒவ்வொரு கும்மிகளும் ஏறத்தாழ 20 பாடல்களிலிருந்து 66 பாடல்களைக் கொண்டதாகக் காணப்படுவதோடு காப்புப் பாடலுடன் ஆரம்பிப்பது சிறப்பு. இறைபக்தி விஞ்சிடும் இறைப்பாக்களாக அவை காணப்படுகின்றன. இவர் இயற்றிய காவடிப்பாடல்கள் மிகச் சிறப்பானவை. விநாயகர் (13 பாடல்கள்), ஆனைப்பந்தி சித்திவிநாயகர்(32 பாடல்கள்), ஆரையம்பதி அரசடிப் பிள்ளையார்(16 பாடல்கள்), நாவற்குடா கண்காணிப் பிள்ளையார்(27 பாடல்கள்), கல்லடி உப்போடை ஸ்ரீ சித்திவிநாயகர்(25 பாடல்கள்), சிவன்(24 பாடல்கள்), கந்தன்(29 பாடல்கள்), ஈழத்து திருச்செந்தூர்(14 பாடல்கள்), தில்லை மண்டூர் முருகன்(21 பாடல்கள்), ஆரைநகர் ஐயப்பன் (21 பாடல்கள்), கண்ணன்(29 பாடல்கள்), முனைக்காடு நாகலிங்கேஸ்வரர்(23 பாடல்கள்), கண்ணகை அம்பாள்(37 பாடல்கள்), புதுக்குடியிருப்பு கண்ணகை அம்பாள்(29 பாடல்கள்), ஆரைநகர் பேச்சியம்மன்(24 படல்கள்), கல்லடி பேச்சியம்மன்(28 பாடல்கள்), கோளாவில் முத்துமாரி (20 பாடல்கள்), வம்மிக்கேணி முத்துமாரி(13 பாடல்கள்), நாவற்குடா ஸ்ரீமாரி(27 பாடல்கள்), பட பத்திரகாளி(26 பாடல்கள்), வேலூர் பத்திரகாளி(31 பாடல்கள்), புன்னைச்சோலைக் காளி(22 பாடல்கள்), போரதீவு பத்திரகாளி(22 பாடல்கள்), ஸ்ரீகாமாட்சி அம்பாள்(30 பாடல்கள்) என அவருடைய காவடிப் பாடல்கள் காணப்படுகின்றன. அத்தனை பாடல்களும் எட்டு அடிகளைக் கொண்ட நடைக்காவடி அமைப்பில் மட்டக்களப்பில் பயில் நிலையிலுள்ள கழுகுமலைப் பத்தின் இசைக்கமைவாகவே காணப்படுகின்றன. இப்பாடல்களில் வரும் சில சொற்களுக்கான ஒத்த சொற்களை இவற்றின்பின்னர் வரும் 335-ஆம்

**மட்டக்களப்பு மாவட்டத்திலே அதிக ஒலிப்பேழைகளுக்கு வரியெழுதி வெளியிட்ட பெருமை ஆரையூர் அருள் அவர்களைச் சேரும். கலைப் பணியுடன் இசைப்பணியும் செய்து வரும் ஆரையூர் மூ. அருளம்பலம் அவர்கள் தண்டமிழால் மட்டக்களப்பு மண்ணையும் மண்ணைக் காத்து வரும் எம்மிறையையும் பெருமைப்படுத்துகிறார்.**

பக்கத்தில் கொடுத்திருக்கின்றார். ஒட்டாரம் - பிடிவாதம், ஊதவனம் - கடல், குறுகலர் - பகைவர், குச்சிதம் - இழிவு, கெழுவுடை - நட்பு, கெழுதகை - உரிமை, கேசரர் - கந்தரூபர், கையர் - வஞ்சகர் போன்ற 28 சொற்களுக்கான ஒத்த விளக்கச் சொல்லினைத் தந்தள்ளமை பாடல்களை மேலும் புரிந்துகொள்ள இலகுவாக உள்ளது. இவை பெருந்தெய்வங் களின்மீதும் கிராமியத் தெய்வங்களின் மீதும் பாடப்பட் டுள்ளன. காவடி எடுத்தல் என்பது இங்கு இரு வழிபாட்டிற்கும் பொதுவானதென்பதைக் குறிக்கின்றது.

கிழக்குப்பிரதேசத்தில் சடங்கு வழிபாட்டின் பிரதான இசைவ டிவம் தாலாட்டு. அருள் அவர்கள் தன் இறையின்பப் பாவா ரத்தில் கண்ணகையம்மன்(53 ஈரடிப்பாடல்), புதுக்குடியிருப் புக்கண்ணகையம்மன்(34 நான்கடிப்பாடல்), பேச்சியம்மன் தாலாட்டு (33 ஈரடிப்பாடல்), ஆரைநகர் பேச்சியம்மன் (32 ஈர டிப்பாடல்), கல்லடி உப்போடை பேச்சியம்மன்(31 நான்கடிப் பாடல்), ஆரைநகர் வம்மிக்கேணி மாரியம்மன்(44 ஈரடிப்பா டல்கள்), காளியம்மன் தாலாட்டு(33 ஈரடிப்பாடல்), புன்னைச் சோலைகாளி(28 நான்கடிப் பாடல்), புல்லுமலை அன்னை யர்கள் தாலாட்டு(நாக கன்னித் தாயார் மீது 12 பாடல்கள், காளிகாம்பாமீது 5 பாடல்கள், மாரியம்மன்மீது 5 பாடல்கள், பேச்சியம்மன்மீது 10 பாடல்கள் என அனைத்தும் நான்கடிப் பாடல்கள்) முதலான கிராமியத் தெய்வங்களின்மீது தாலாட் டுப்பாடல்களைப் பாடியுள்ளார்.

கிழக்கிலங்கையின் கிராமியத் தெய்வவழிபாட்டில் இன்றிய மையாதது காவியம். இவ்விசை வடிவமே அனைத்துத் தெய் வங்கள் மீதும் பாடப்பட்ட இசைவடிவமாகும். அதுமட்டுமன்றி ஒரே தருவினையும் மெட்டினையும் உடையது. அருள் அவர் களும் இம்மரபிலிருந்து வழுவாது தன் காவியப் பாடல் களைப் படைத்திருக்கின்றார். பைரவர் காவியம்(12பாடல்கள்), மஞ்சந்தொடுவாய் வீரபத்திரர்(10 பாடல்கள்), நரசிங்கரூபன் (11பாடல்கள்), ஆஞ்சநேயர்(11 பாடல்கள்), முனை க்காடு நாகலிங்கேஸ்வரர்(11பாடல்கள்), ஆரைநகர் கண்ணகை அம் பாள்(11பாடல்கள்), பேச்சியம்பாள்(11பாடல்கள்), நாவலடி கடலாட்சி(13 பாடல்கள்), ஆரைநகர் பட பத்திரகாளி(17பா டல்கள்), ஏற்றம் புல்லுமலை நாககன்னி(12 பாடல்கள்), மாவி லங்கத்துறை ஸ்ரீகாமாட்சி அம்மாள்(12 பாடல்கள்) என இவரது இறையின்பக் காவியங்கள் என்றும் நிலைத்திருக்கும் தன்மை கொண்டவை.

அருள் அவர்களது இந்நூலில் பேச்சியம்மன் மீதும் முத்துமா ரியம்மன் மீதும் இரு கரகப்பாடல்கள் உள்ளன. இரண்டும் வெவ்வேறு மெட்டுக்களில் அமைந்துள்ளன. அருள் அவர்கள் தம் இறையின்பப்பாவாரம் நூலில் ஆரையம்பதி எள்ளுச் சேனை ஸ்ரீசித்திவிநாயகர் மீதும் செல்வாநகர் சிவனேஸ்வரர் மீதும் ஊஞ்சல்ப் பாடல்களையும் பாடியுள்ளார். இவரது ஊஞ்சல் பாடல்கள் காப்புடன் ஆரம்பித்து 11 ஊஞ்சல் பாடல்களின் பின் வாழி பாடி தொடர்ந்து எச்சரிக்கை, பாராக்கு, லாலி எனும் இசைவடிவங்கள் முறையே அமைந்து மங்க ளத்தில் முடிவுறுகிறது.

மேலும் பக்தி இலக்கியப் பாடல் வகையில் திருப்பள்ளியெ ழுச்சி ஓர் வகை. தெய்வத்தை புலரும்பொழுதில் சயனத்திவி ருந்து எழும்புமாறு வேண்டிப் பாடும் பாடல்களாகும். இதனை முதன் முதலில் மணிக்கவாசகரின் திருவாசகத்தில் காண லாம் அவை 'போற்றியென் வாழ்முதலாகிய பொருளே' என்று தொடங்கி நான்கு சீர்கள், எட்டடிகள் கொண்ட பத்துப் பாடல் களைக் கொண்டுள்ளது. அப்பாடல்கள் ஒவ்வொன்றும் 'எம் பெருமான் பள்ளி எழுந்தருளாயே' என முடிவுறுகிறது. அந்த வகையில் அருள் அவர்கள் மூன்று திருப்பள்ளியெழுச்சிகளை இயற்றியிருக்கிறார். ஆரையம்பதி எள்ளுச்சேனை ஸ்ரீசித்தி விநாயகர், ஈழத்து திருச்செந்தூர் முருகன், நிசப்த ஸ்ரீகிருஷ்ணன் ஆகிய தெய்வங்களின்மேல் பாடப்பட்ட இவரது பள்ளியெழுச்சிகள் பெரும்பாலும் அத்தெய்வத்தின் வரலாற் றையும் சூழலையும் பிரதாபங்களையும் கூறி இறைவனைத் துயில் எழுப்புவதாக காணப்படுகிறது.

மேலும் ஏராளமான பக்திப் பாசுரங்கள், பஜனைப் பாடல்கள், ஆக்கப்பாடல்கள் போன்றவற்றை இறையின்பப் பாவாரத்திற் காணலாம். சில தருக்களுடன் காணப்படுகின்றன. சில பாடல்கள் தொகையறாவுடன் ஆரம்பித்து பல்லவி, அனு பல்லவி, சரணம் என கீர்த்தனை அமைப்பில் காணப்படு கின்றன. அவற்றில் சிலவற்றிற்கு சுருட்டி, மோகனம், ரஞ்சனி என ராகங்களையும் குறிப்பிட்டிருக்கின்றார். அந்தவகையில் இவர் நாட்டார் இசை வடிவங்களில் மட்டுமல்ல கர்நாடக இசையிலும் பரிச்சயமுடையவராக தெரிகின்றார்.

இவர் 'பத்தாலயப் பாவாரங்கள்' என்னும் நூலை 2022-இல் வெளியிட்டிருக்கின்றார். இந்நூல் மட்டக்களப்பு மாவட்டத்தின் வெவ்வேறு பிரதேச செயலாளர் பிரிவுகளில் கோயில் கொண் டெழுந்தருளிய தெய்வத்தின் சிறப்புக்கள், அக்கோயில் வர லாறு, சடங்கு, வழிபாட்டுமுறைகள் போன்றவற்றை உள் நின் றுருகிப் பாடியிருக்கின்றார். பண்டாரியாவெளி நாகதம்பிரான் ஆலயம், ஆரையம்பதி கடற்கரை நரசிங்கர் ஆலயம், இருத யபுரம் மேற்கு வாசுகியம்மாள் ஆலயம், பருத்திச் சேனை மீனாட்சி அம்பாள் ஆலயம், முனைக்காடு முத்து மாரி அம்பாள், முனைக்காடு வீரபத்திர்ஆலயம், மஞ்சந்தொ டுவாய் விநாயகர் கண்ணகை ஆஞ்சநேயர் ஆலயம், குமா ரத்தன் ஆலயம், கொல்லைநுலை பேச்சியம்மன் ஆலயம், விளா

வட்டுவான் வீரமாகாளி ஆலயம் ஆகிய பத்து ஆலயங்கள் மீது அவர் இயற்றிய பாடல்களே பத்தாலயப் பாவாரங்கள் என்னும் பக்தி இலக்கியமாகும். இந்நூலிலும் கும்மி, காவியம், காவடி, தாலாட்டு, பஜனை, போற்றி, அர்ச்சனை போன்ற இசைவடிவங்களே காணப்படுகின்றன. அருள்அவர் களது பக்திப்பாக்கள் பக்திப்பெருக்கு நிறைந்தவையாக மக் களுக்கு பக்தி உணர்வை ஊட்டுவதுடன் அவை சமகாலப் பிரச்சனைகளையும் பேசுகிறது.

இவரது பாடல்கள் நமது சமூகம் சார்ந்த வழிபாட்டு முறைகள், சடங்கு முறைகள், தெய்வங்களின் பால் நிகழ்ந்த அதிசயங்கள் வரலாறுகள், சமுக நம்பிக்கைகள், பண்பா டுகள், கலைகள், வழக்காறுகள், என்பனவற்றை பதிவு செய் கின்றன. அவை வரும் காலத்திற்கான இந்த சமுகத்தின் செய் தியாகும்.

மட்டுநகரின் கிராமங்களது இயற்கை எழிலை ஆங்காங்கு கூறி மகிழ்கிறார் ‘கார்பொழி மஞ்சு கொஞ்சு மஞ்சந்தெ டுவாய், வங்கக் கடல் ஒலிக்கும் கிழக்கே, மட்டு வாவி மீனின மிசைக்கும் மேற்கே, தேனூறும் தேற்றாத்தீவு’, இவ்வாறு பல இடங்களில் காணலாம். இலங்கையில் நடந்த இனக்கலவ ரங்கள், அழிவுகள், சூறாவளி, ஆழிப்பேரலையால் வந்த அழிவுகள் போன்றவற்றையும் இப் பாடல்களில் ஆங்காங்கு பதிவு செய்திருப்பதைக் காணலாம். இவரது கண்ணகை யம்மன் பாடல்கள் ஈழமக்களின் பார்வையில் கண்ணகியம் மனின் முக்கியத்துவம் பற்றியும் வரலாறுபற்றியும் கூறுகிறது. கிழக்குப் பிரதேசத்தின் சடங்கு வழிபாட்டில் முக்கியம் பெறும் பாடல்களின் தொகுப்பு அடங்கிய சீமான் கணபதிப்பிள்ளை அவர்கள் ஏடுகளிலிருந்து தேடித் தொகுத்தளித்த ‘மகாமா ரித்தேவி திவ்யகரணி’ என்னும் தொகுப்பு நூல்களிலுள்ள காவியம் போன்ற பாடல்களை தனது காவிய அமைப்பிலும் மரபுமாறாது பேணியிருப்பதுடன் பல பாடல்களில் தனித்தும் வேறுபட்டும் தன்னைப் பதிவு செய்திருக்கிறார் .

அருள் அவர்களது நூல் வடிவில் காணப்படும் பக்தி இலக்கி யங்களின் சிறப்புக்கள் காலத்தால் அழியா நம் கிழக்குப் பிர தேசத்து மக்களது பண்பாட்டின் பொக்கிஷங்கள் எனலாம். ஆரையூர். மூ. அருளம்பலம் அவர்களின் இன்னுமொரு பரி ணாமத்தின் தோற்றம் ஒலிப்பேழைகள். அவரது இறையிசைப் பாக்கள் ஒலிப்பதிவுகளாகும். அவை ஆரம்பகாலத்தில் ஒலி நாடாக்களாகவும் பின்னர் ஏனையவை இறுவட்டுக்களாகவும் வெளிவந்துள்ளன. அவை இறையின்பப் பாவாரம், பத்தாலய பாவாரங்கள் ஆகிய அவரது நூலிலிருந்து தெரிவு செய்யப் பட்ட பாடல்களாகும். இவரது கலை முயற்சியானது தனியே பாடல்கள் எழுதுவதோடு நில்லாது ஒலிப்பேழை(இறுவட்டு) வெளியிடுதல் வரை சென்றிருக்கின்றது. அவரது பாடல்கள் அடங்கிய மொத்தம் 30 ஒலிப்பேளைகள் இதுவரை வெளிவந் துள்ளன. மட்டக்களப்பு மாவட்டத்திலே அதிக ஒலிப்பேழைக ளுக்கு வரியெழுதி வெளியிட்ட பெருமை ஆரையூர் அருள் அவர்களைச் சேரும். கலைப்பணியுடன் இசைப்பணியும் செய்து வரும் ஆரையூர் மூ. அருளம்பலம் அவர்கள் தண்ட மிழால் மட்டக்களப்பு மண்ணையும் மண்ணைக் காத்து வரும் எம்மிறையையும் பெருமைப்படுத்துகிறார்.

ஆரையூர் மூ. அருளம்பலம் அவர்கள் 30-க்கு மேற்பட்ட ஒலிப்பேழைகள் (குறுந்தகடுகள்) வெளியிட்டுள்ளார். அவர்க ளுடைய ஒலிப்பேழைகளில் உள்ளடக்கப்பட்ட பாடல்கள் பல வற்றுக்கு பலர் இசையமைத்துள்ளனர். சென்னையைச் சேர்ந்த சதீஷ் அவர்களும் இசையமைத்திருக்கின்றார். மேலும் நம்நாட்டு பாடகர்கள் பலர் அவருடைய பாடல் களைப் பாடியிருப்பதோடு இந்தியக் கலைஞர்களும் பாடியி ருப்பது குறிப்பிடத்தக்கது. சதீஸ், ஜனனி, ஜுட் நிரோஷன், பிரதீபன், சிவா, மோகன், அமுதசாகரன், ஏ. செல்வக்குமார் போன்ற பலர் கும்மி, காவியம் போன்ற பாரம்பரிய இசைமெட் டுக்களுக்கு இசை அமைப்புச் செய்ததுடன் ஏனைய பாடல்க ளுக்கும் இசையமைத்தும் உள்ளனர் . மேலும் திரு. பத்மஸ்ரீ, அகலியா, கு. சபேஷ்காந், சாந்தினி, தருமநாதன், மு. நமசி வாயம், பு. காயத்திரி, பு. டிலக்ஷி, ராஜ், சர்வேஸ்வரன், லிங் கேஸ்வரராஜா, ஸ்ரீரம்யா, இரா. தெய்வராஜன், கேமா, சுவா, காயத்திரி, சாயிசங்கர், நீரஜா, விகாஷ், டிலாணி, சபேசன், ரிஷிகேசவன், போன்ற இலங்கைக் கலைஞர்களும் திரு. மாணிக்கவினாயகம், கிருஷ்ணராஜ், மார்ட்டின், ஆனந்து, முகேஷ், தெய்வராஜன், உசாராஜ், ரேணுகா, தீபா, சோபியா போன்ற தென்னிந்தியக் கலைஞர்களும் பாடியுள்ளனர். இப்பெருமை ஆரையூர் அருள் அவர்களைச் சாரும்.

ஆரையூர் அருள் அவர்கள் இயற்றிய சடங்கு பாடல்கள் பல வற்றிற்கு அவரே இசையமைத்துள்ளார். அவரது கண்ணகை அம்மனின் கூறைதாலிப் பாடல், ஊஞ்சல் பாடல் என்பன புதிய இசை மெட்டில் காணப்படுகின்றன. தற்கால இலத்தி ரனியல் சாதனங்களின் வளர்ச்சி அவரது சடங்கு பாடல்களில் சில மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. இப்பாடல்கள் நவீன வாத்தியங்களுடன் பாடப்பட்டு ஒலி, ஒளிப்பதிவுகள் செய்யப் படுகின்றன. இதனையும் ஒரு வளர்ச்சியாக ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. அந்தவகையில் அவர் இக்காலத்தோடு ஒட்டியும் பயணிப்பதை அவதானிக்க முடிகிறது. மேலும் அவர் இன்றுவரை தன் செயற்பாடுகளில் ஓய்வொழிச்சலின்றி பயணித்துக்கொண்டே இருக்கும் செயல்வீரர். முத்தமிழ் வித்தகன் வாழ்ந்த மண்ணில் இயல் இசை நாடகம் மூன்றிலும் குறையாப் பணியாற்றிவரும் மூ. அருளம்பலம் அவர்களுக்கு கிழக்கு மண் பெருங் கடமைப்பட்டிருக்கின்றது.

**வாசிக்கப்பட்டவை**


**உசாத்துணை:**

- ஆரையூர் அருளம்பலம், இறையின்பப் பாவாரம், 2016, A.E.T.Printers, திருகோணமலை.
- ஆரையூர் அருளம்பலம், பத்தாலயப் பாவாரங்கள், 2022, ஸ்ரீமுருகன் இந்துமாமன்றம் வெளியீடு, மட்டக்களப்பு.
- செல்வாநகர் சிவன்மேல் காவடிப்பாட்டு, பிரதி, 1992.
- க. நிலாணி, கவாபூஷணம் மட்டக்களப்பு ஆரையம்பதி மூ. அருளம் பலம் அவர்களின் கோயில் சடங்குப்பாடல்களில் இசை பற்றிய ஆய்வு, ஆய்வுக்கட்டுரை, 2017, இசைத்துறை, கலைப்பீடம், யாழ்ப் பாணப் பல்கலைக்கழகம்.
- நேர்காணல்: அருளம்பலம். மூ. ஆரையம்பதி, வயது 75, ஓய்வுபெற்ற அதிபர், தேசியக் கலைஞர்.
- தகவல்கள்: ஒலிநாடாக்கள், இறுவட்டுக்கள், you Tube, இணையத் தளம்.




priya.jetheeswaran@thaiveedu.com




## ஆரையூர் அருள் அவர்களின் நினைவுப் பதிவுகளிற் சில...






















# "கூத்துக் கலைஞர்கள், அண்ணாவிமார்கள் இருக்கும் வரை அவர்களே கூத்தின் இரட்சகர்கள்"

### – மூத்ததம்பி அருளம்பலம்

## நேர்காணல்:

### – பிரசாத் சொக்கலிங்கம்

▸ **உங்களைக் கலைஞர், புலவர் என்றே பலர் அறிவார்கள், இருப்பினும் நீங்கள் ஒரு நல்லாசான் என்பது பொது வெளியில் பெரிதாகத் தெரிவதில்லை. உங்கள் ஆசிரியர் பணி பற்றிக் கூறுங்கள்?**

ஆசிரியரகவும் அதிபராகவும் 31 வருடங்கள் கடமையாற்றியிருந்தேன், 1973-இல் எனது முதல் நியமனமான ஒணாகம முஸ்லிம் வித்தியாலயம் தொடக்கம், 2004-இல் ஒய்வுபெறும் வரையில், பொத்துவில் முஸ்லிம் மகாவித்தியாலயம், மற்றும் மெதடிஸ்த மிசன் தமிழ் கலவன் பாடசாலை, வாழைச்சேனை மகாவித்தியாலயம், குருக்கள் மடம் தமிழ் வித்தியாலயம், முதலைக்குடா கோபால் வித்தியாலயம், மகிழடித்தீவு சரஸ்வதி வித்தியாலயம், ஆரையம்பதி மகா வித்தியாலயம் மற்றும் சுப்பிரமணிய வித்தியாலயம், தாழங்குடா மெதடிஸ்த மிஷன் பாடசாலை, மாவிலங்கத்துறை விக்னேஸ்வரா வித்தியாலயம் போன்ற பாடசாலைகளில் கடமையாற்றியிருந்தேன். என்னிடம் கற்ற பெரும்பான்மை மாணவர்கள் உயர்கல்வி கற்று, பல்கலைக்கழக பட்டப் படிப்பை முடித்து இன்று சமூத்தில் நல்ல நிலையில் பல பிரதேசகளிலும் வாழ்கின்றனர். ஆகவே நான் ஆசிரியராக அறியப்படாமல் இருந்திருக்க முடியாது அல்லவா ?

இருப்பினும், சில வேளைகளில் இன்றைய தலைமுறையினருக்கு எனது ஆசிரியர் பணிபற்றி தெரியாமல் இருக்க வாய்ப்புகள் உள்ளதுதான்.

▶ **உங்களுக்கு ஆசிரியராகப் பணியாற்றும் போது ஆத்ம திருப்தி கிடைத்ததா? அதிபராகப் பணியாற்றும் போது ஆத்ம திருப்தி கிடைத்ததா? உங்களின் அனுபவங் களைப் பகிருங்கள்?**

ஆசிரியராக இருந்து அதிபராவதிலேதான் திருப்தி. ஓர் ஆசிரி யராக இருந்தபோது மாணவர்களின் வேறுபாடறிந்து கற்பிக்க வேண்டும். எனது நியமனம் கணித ஆசிரியராகும். மாண வர்கள் சிலரின் ஆரம்ப மனப்பதிவே கணிதமென்பது ஒரு வெறுப்பான, கஷ்டமான பாடமென்பது. ஆனால், கணித பாட மென்பதே கல்வியென்ற உடம்புக்கு உயிராக அமைகின்றது. கணிதம் சித்தியடையாதவிடத்து, உயிரற்ற உடலாக, சுவை யற்ற பாலாக அமைந்து விடும். கணிதத்தை, மாணவர் மனப் பாங்கை புரிந்து, அவர்களின் வேறுபாட்டுக்கேற்ப கற்பிக்க வேண்டும். கணிதத்தை வேம்பு எனக் கருதும் மாணவர்க ளுக்கு அது இனிப்பு என உணரக் கற்பிப்பதே சிறந்த ஆசிரி யரின் ஆளுமையாகும். அந்த வகையில் பல பாடசாலை களில் கணிதபாடம் கற்பித்து, பல மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சையிலும் உயர்தரங்களிலும் நல்ல பெறுபேறு களைப் பெற்று பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகிச் சென்றுள்ளார்கள். விஞ்ஞான, கலைப் பிரிவுகளிலும் மாண வர்கள் பட்டங்கள் பெற்று உயர்ந்திருப்பதால் அந்தந்த மாண வர்கள், பாடசாலைச் சமூகங்கள், பெற்றோர்கள் மனதில் என்றும் மறவாத ஆசிரியராக இடம் பிடித்திருக்கின்றேன்.

எத்தனையோ மறக்க முடியாத விடயங்கள் நெஞ்சக நினைவு களாக, அழியாத கோலங்காக அகமெனும் ஆழ்மனதில் அவை ஆழ்ந்து கிடக்கின்றன. அவற்றுள் சில: குருக்கள்மட சரஸ்வதி வித்தியாலயத்தில் கற்ற தொண்ணூறு வீதமான மாணவர்கள் கணித பாடத்தில் மிகச்சிறந்த சித்தி பெற்று பல் துறைகளில் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்று பல உயர் தொழில்களிலும், ஆசிரியர் தொழில்களிலும் நிய மனங்கள் பெற்று, காணுமிடங்கள், சேவையாற்றுமிடங்க ளெல்லாம் அருளையாவிடம் கணிதம் கற்றே சிறந்த இடங்க ளிலிருக்குகிறோமென்று மனம் விட்டுக் கூறுவதை அறியும் போது அவர்களின் உயர்வே எனது மனமகிழ்ச்சியாகும். தரம் 05-இல் கல்வி பயிலும் மாணவர் பலரைப் புலமைப்பரிசில் பரீட்சைக்கு கற்பித்து அவர்களைச் சித்தி பெறச் செய் துள்ளேன். ஆனால் 1999-இல் ஆரைப்பற்றை சுப்பிரமணிய வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றிய போது தரம் 05-இல் கற்பிக்க வேண்டிய ஆசிரியை தரம் 04-இல் கற் பித்துக் கொண்டிருந்த இறுதி நேரத்தில் சுகவீனமுற்ற தரு ணத்தில் தரம் 05-இற்கு கற்பித்து மண்முனைப்பற்று பிரதே சத்தில் எம் பாடசாலை மாணவர்கள் 162, 160, 156 புள்ளி களைப் பெறச் செய்தேன். அவர்கள் முதல் மூன்று இடங்க ளையும் இப்பாடசாலையே பெற்றதற்காக, கற்பித்த எனக்கு மட்டக்களப்பு கல்வித்திணைக்களம் சான்றிதழ் தந்து பாராட் டியது. முதலைக்குடாவில் கற்பித்த போது அங்கு உயர்த ரத்தில் இந்து நாகரிகம், இந்து சமயம் கற்பித்த ஆசிரியை கலவரம் காரணமாக மட்டக்களப்புக்கு தற்காலிக நியமனம் பெற்றுச்செல்ல, கற்ற மாணவர்கள் அறுவரும் பெற்றோரும் வந்து அதிபருடன் பிரச்சினைப்பட, பிள்ளைகள் நகரத்துக் குப்போய் கற்க முடியாத நிலை ஏற்பட்டது. அவர்கள் இயக் கத்தில் சேர்ந்து விடுவார்கள் என அதிபருடன் சண்டையிட, நான் அவ்விரு பாடங்களையும் கற்பித்து அறுவரும் 'B' சித்தி பெற்று பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானார்கள். அன்றியும், ஆசிரியராயிருந்து கற்பித்தலில் பெற்ற அனுபவமே, அதிபராகி பாடசாலையில் கல்வி அபிவிருத்தி, பௌதிகவள அபிவிருத்திப் பணிகளைச் செய்ய வாய்ப்பாக அமைந்தது. எனது ஆசிரிய ஆளணியில் இருந்த ஆசிரியர்களுக்கு வாண்மை விருத்திகளைப் பெற உதவியமையாலும் பாடசாலைச் சமூகத் துக்கு உதவியமையாலும் அவர்கள் என்றென்றும் என்னிடம் மதிப்பும் மரியாதையும் வைத்துள்ளனர்.

▶ **முழுநேர ஆசிரியர் பணி உங்களின் கலை வெளிப் பாடுகளுக்கு இடையூறாக அமையவில்லையா?**

நான் குருக்கள் மடம் தமிழ் வித்தியாலயத்தில் கற்பித் தபோது, அதிகமான மாணவர்கள் உயர்கல்விகற்று பல்க லைக்கழகம் சென்றனர், ஒரு தடவை ஒரு கூலித் தொழிலா ளியின் மகள் கணித, விஞ்ஞானப் பிரிவில் கற்பதற்குத் தகுதி யுடையவராயிருக்க, அத்தொழிலாளி பிள்ளையை தொடர்ந்து கல்விகற்க வசதியில்லையெனத் தடுத்திருந்தார். பின்னர் ஒருவாறாக அவர் தனது மகளைக் கலைத்துறையில் கற்ப தற்கு வழிசமைத்திருந்தார். அதேவேளை ஒரு போடியாரின் மகள் கலைப் பிரிவிற்கே தகுதி பெற்றும், போடியார் பணவலி மையால் விஞ்ஞானப் பிரிவில் கல்வி கற்க வழிசமைத்துக் கொடுத்திருந்தார். பாடசாலை கல்வி முடிவடைந்ததும் கூலித் தொழிலாளியின் மகள் கலைத்துறையில் பட்டப்ப டிப்பை முடித்து ஆசிரியையாக நியமனம்பெற, விஞ்ஞானப் பிரிவில் கற்ற போடியாரின் மகள் மூன்று வருடங்களில் படிப்பைப் பற்றிப்பிடிக்க முடியாமல் இடைநடுவே நிறுத்தி விட்டார். இச்செயற்பாடு என் மனதில் ஆழப்பதிந்து, பிற்கா லத்தில் 'வழிதவறிய வஞ்சி' எனும் கூத்தை உருவாக்கியது. மாணவர்கள் தங்களால் தூக்கக் கூடிய சுமையைத் தூக்க பெற்றோர் வழிகாட்ட வேண்டுமென்ற கதைக்கருவால் பழக் கிய கூத்து பட்டிதொட்டியெலாம் பாராட்டைப் பெற்றுப் பல உயர்தரப் பாடசாலைகளில் கலைப் பிரிவில் கற்க வழிகாட்டி மாணவர்களைப் பட்டம் பெற இக்கூத்தும் வழிவகுத்ததனை மறக்க முடியாது.

முதலைக்குடா மகாவித்தியாலயத்தில் பணியாற்றும் வேளையிலே கல்வியை இடைநடுவில் நிறுத்தி சில வரு டங்கள் சென்ற நிலையில் ஒரு மாணவனைச் சந்தித்தேன். அவனைப் பகீரதப் பிரயத்தன முயற்சியால் பாடசாலையில் மீண்டும் சேர்த்தேன். வகுப்பில் பயிலும் மாணவர்களை விட இம்மாணவனுக்கு வயது அதிகம் என்பதால் சக மாணவரி டத்தில் பழகுவதில் பல்வேறு இடர்பாடுகள், தாழ்வுச் சிக் கல்களை இம்மாணவன் எதிர்நோக்க வேண்டியிருந்தது. இந் நிலையில் அவனை எவ்விதமெல்லாம் ஆற்றுப்படுத்த முடி யுமோ அவ்விதமெல்லாம் ஆற்றுப்படுத்தி, வகுப்பு மாணவ தலைவனாக்கி, அவனது நல்ல தலைமைத்துவப் பண்பி னையும் வளர்க்க முயன்று அதிலும் வெற்றி பெற்றேன். பின்னர் அவனையும் ஏனைய மாணவர்கள் ஏற்றுக்கொள்ளத் தக்கதான நிலையையும் உருவாக்கினேன். அதன் பின், 'தியா கதீபம்' எனும் சமூக நாடகத்தில் கதாநாயகனாக அவனை நெறிப்படுத்திப் பட்டிப்பளைப் பிரதேச பாடசாலை மட்ட நாடகப் போட்டியிலே பங்குபெறச் செய்தேன். பதினான்கு நாடகங்களில் இந்நாடகம் முதலாமிடத்தைப் பெற்றது. அவனின் கூடுதலான நடிப்பின் திறமை கண்டு நடுவர்கள், ஏனைய பாடசாலைகள், ஊர்மக்கள் பாராட்டினார்கள். தயாரித்து நெறிப்படுத்திய என்னையும் பாராட்டி காணுமிடங் களெல்லாம் மரியாதையோடு அணுகினார்கள். அம்மா ணவன் பல்கலைக்கழக வாய்ப்பினைப் பெற்று இன்று

பட்டதாரி ஆசிரியராகவும் திகழ்வது மட்டுமன்றி, நன்றியுணர்வோடு என்னை நினைவுகூருகிறான். ஆசிரியத் தொழில் என் வாழ்வில் நெஞ்சம் நிறைந்த பணியாகிறது. 'ஆசிரியப்பணி அறப்பணி அதற்கு உன்னை அற்பணி' அதற்கேற்றாற்போல கணித எண்ணக்கருக்களைக் கவர்ச்சியுறு வகையில் மாணவரிடத்தே பதியவைக்கும் முயற்சியில் நாடகக் கலையைப் பயன்படுத்தி மாணவர்களை வழிப்படுத்திய சம்பவங்களும் என் ஆசிரிய வாழ்வில் அற்புதமானதாகும். கணித வினாவிடைப் போட்டிகளில் கோட்டம், வலயம், மாவட்டம், மாகாணம் என்ற மட்டங்களில் மாணவர்கள் தடம் பதித்து இடம் பிடிக்கத் தக்க துணையாய் நானிருந்த காலங்கள் இன்றும் என் மனதில் இளமையாகவே இனிக்கின்றன. கணித பாட ஆசிரியராக மட்டுமல்லாது அப்பாற் சென்று கல்விப்புல இணைப்பாட செயற்பாடுகளுள் ஒன்றான தமிழ்த்தினப் போட்டிகளில் வடமோடி, தென்மோடி, சிந்துநடை, இசைநாடகம் முதலானவற்றை மாணவர்களுக்குப் பயிற்றுவித்து அம்மாணவர்கள் மாகாணமட்டம் வரை முதன்மை நிலையினைப் பெற்றுக்கொள்ள வழி சமைத்தேன். அம்மாணவர்களை அத்தோடு விடாது ஒரு தலைமுறை அண்ணாவிமார்களாக உருவாக்கி, அவர்கள் இன்று கூத்துகளைப் பழக்கி அரங்கேற்றுவதற்கும், தமிழ்த்தினப் போட்டிகளில் பங்குபற்றி முதலிடங்களைப் பெறுவதற்கும் உந்து சக்தியாகவும் இருந்தேன். இன்று அவர்கள் இதற்கெல்லாம் காரணம் எங்கள் குரு அண்ணாவியார் அருளம்பலமையாவே எனக் கூறுவதை நினைக்கும் தோறும் பசுமையாக இனிக்கிறது. ஆசிரியர் பணியினையும் எனது கலை இலக்கியச் செயற்பாடுகளுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டேன் என நினைக்கின்றேன்.

▸ **உங்கள் இளமைக்கால வாழ்வு பற்றி?**

எனது வாழ்வு எனது ஊரான ஆரையம்பதியிலே பெரும்பாலும் அமைந்துவிட்டது. அன்று தொட்டு இன்று வரை இங்கே வாழும் மக்கள் ஆன்மீகம், மரபுரீதியான கல்வி, கலை கலாசாரம், விழுமியங்களைக் கட்டிக்காக்கும் சுட்டித்தனமுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். அறிஞர்கள், ஆர்வலர்கள், கலைஞர்கள், நிறைந்த கலைகளின் தொட்டிலென ஆரையம்பதியைக் கூறுவார்கள். அதன்படியே எனக்கும் ஆரையம்பதி அன்னை ஊட்டி வளர்த்த ஆன்மீகம், மரபுக்கலைகள் கைகூடிற்று. கல்வி கற்றலிலும் எனக்கு இளமைக்காலத்தில் ஆர்வமிருந்தது. எமது ஊர் கலைஞர்கள், புலவர்கள், விவேகிகள், அறிஞர்கள், ஆர்வலர்களே எனது நண்பர்களாகவும் இருந்தார்கள்; இருக்கிறார்கள். அதுவே எனது வாழ்வுமாகிற்று.

▸ **நாட்டுக்கூத்தில் உங்களுக்கு இவ்வளவு ஆர்வம் வரக் காரணமென்ன ?**

எனது தந்தை ஆரையம்பதி கண்ணகை அம்பாளின் உதவிக் கட்டாடியார் ஆக இருந்தவர். அவரைச் சிறந்த மந்திரவாதி என்பார்கள். இவர் அக்கால பூசாரிமார்கள், மந்திரவாதிகளுடன் நட்பாக இருந்து பல மந்திர, தந்திர, யந்திர ஏடுகளைப் பெற்றுப் படித்து பல வைத்திய முறைகளையும் கைக்கொண்டவர். இதனால் இவரிறந்த பின் நான் வளர்ந்து வரும்போது ஊரவர் உன்னப்பன் சிறந்த மந்திரவாதியென்று கூறி அம்முறையை விடாது மேற்கொள்ளும்படி என்னைத் தூண்டுவார்கள். ஆனால் எனது தாயார் அன்னம்மா, மந்திர விடயங்களில் என்னைத் தடுத்து இளமையிலிருந்தே பாரதம், இராமாயணம், இதிகாசக் கதைகளை கூறி, ஆலயத்திலே படிக்கும் கும்மி, தாலாட்டு, காவடி, காவியப் பாடல்களைக் கேட்கவும் மனனம் பண்ணவும் பழக்கியதுடன், அக்காலத்திலிருந்தே ஆடும் கூத்துக்களைப் பார்க்கவும் மட்டுமே அனுமதியளிப்பார். நானும் கூத்து பழகும் போதும், கூத்து ஆடும் போதும் கலரியின் முன்பாக அமர்ந்து தொடக்கம் முதல் முடியும் வரை பார்த்து, அக்கூத்துக்களின் பாடல்களைப் பாடி வீட்டில் சென்று ஆடிக்காட்டி மகிழ்வேன். இவ்வாறு தொடர்ந்து ஆரையம்பதியில், முகத்துவாரத் தெருவில்

இராம நாடகம், பப்பரவாக நாடகம், குசலவ நாடகம், ஆரைப்பற்றைத் தெருவில் ஆடிய இராமாயணம், தர்மவைகுந்தம், வள்ளி திருமணம், குருக்கேத்திரன் போர், அல்லி நாடகம், சயிந்தவன் நாடகம், நடுத்தெருவிலாடிய வாளவீமன், பப்பரவாகன், அலங்காரரூபன் கூத்துக்கள் வேளாள தெருவில் சுபத்திரை கல்யாணம், 17-ஆம் 18-ஆம் போர், மார்க்கண்டேயர், பேச்சியம்பாள் கோவிலடியில் சிறுத்தொண்டர் நாடகம், கோவில்குளம் லவகுசா நாடகம் என்றும், திருவிழாக் காலங்களில்



கந்தசுவாமி ஆலய முன்றலில் ஆடிய கூத்துக்களைப் பார்த்திருக்கிறேன். தர்மர் வைகுந்தம் பழக்கிய போது கோளாவில் அண்ணாவியார் எனது ஆர்வத்தையறிந்து என்னை அழைத்து ஏடு(கொப்பி) பார்ப்பதற்கு அனுமதியளித்ததோடு அன்று சமூகமளிக்காத கூத்தர்களின் பாத்திரத்தில் என்னை ஆடச் சொல்லி ஊக்கப்படுத்தியும் தட்டிக்கொடுத்தார். அதேபோல இராமநாடகத்தில் பரதன் பாத்திரத்தில் ஆடவைத்தார். எமது ஊர் அண்ணாவியார்களான கோவிந்தன், பரிசாரி பொன்னன், பாலியப்பா, காசியர், கணபதியர், செல்லத்தம்பி, இராசையா, கோணலிங்கம் போன்றோருடன் நல்ல உறவினைப் பேணினேன். மத்தாள அண்ணாவிமாராக இளையப்பா(தென்மோடி), நல்லதம்பி(வடமோடி), செல்லத்தம்பி(வடமோடி), பூபாலப்பிள்ளை(வடமோடி), சிவபாதம்(வடமோடி) போன்றோரும் எனக்கு உறுதுணையாக இருந்தனர். அக்காலத்தில் இரு மறலியை வென்ற மங்கை(தென்மோடி), அனுமன் கண்ட சீதை(வடமோடி), வழிதவறிய வஞ்சி(வடமோடி), குரு தட்சணை(வடமோடி) போன்ற கூத்துக்களை எழுதி பாத்திரமேற்று ஆரையம்பதி கந்தசுவாமி ஆலயத்தில் அரங்கேற்றியுமுள்ளேன்.

▸ **நாட்டுக்கூத்துக் கலை மக்களிடையே இரசனை இழந்து, இல்லாமல் போய்விடும் என்கிற கருத்து உள்ளது. இது பற்றி உங்கள் கருத்து என்ன?**

இது தவறான கருத்தாகவே நான் கருதுகின்றேன். ஏனெனில் மட்டக்களப்பு படுவான் கரையில் கன்னங்குடா, மங்கியட்டு, பாவற்கொடிச்சேனை, பருத்திச்சேனை போன்ற அங்குள்ள கிராமங்கள் தோறும், பட்டிப்பளை, அரசடித்தீவு, மகிழடித்தீவு, முதலைக்குடா, கொக்கட்டிச்சோலை, முனைக்காடு போன்ற ஊர்களில் ஆண்டுதோறும் கூத்துகள் ஆடி அரங்கேற்றம் செய்யப்பட்டுக்கொண்டேயிருக்கின்றது. ஆனால் யுத்தகாலம், கொரோனா காலத்தில் கொஞ்சம் குறைவாகவேயிருந்தது உண்மைதான். ஆனால், தற்போது தொடர்ந்து மரபுமாறாமையில் வடமோடி, தென்மோடிக் கூத்துகள் ஆடப்பட்டு இளைஞர்களிடமும் கையளிக்கப்பட்டு வருகின்றது. அன்றியும் பாடசாலை மட்ட, பல்கலைக்கழக மட்டத்திலும் கூத்துகள் ஆடப்பட்டு வருகின்றது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

**தாங்கள் கலாநிதிப் பட்டம் பெற, ஊரூராகக் கூத்தாடும் அண்ணாவிமார்களிடமும், கூத்தர்களிடமும் சென்று வடமோடி, தென்மோடிக் கூத்துகளை அரைகுறையாக பயின்று பட்டம் பெற்றபின், அவர்கள் தான் கூத்தின் சொந்தக்காரர்கள் எனக் கூறிக்கொண்டு, அந்த அண்ணாவிமார்களையும், கூத்தர்களையும் குறைகூறிக் கொள்ளுகின்றனர். ஆனால், கூத்து கைமாறவில்லை; அதனைக் கைப்பற்ற எத்தனிக்கின்றனர்**

▸ **மக்களிடம் இருந்த நாட்டுக்கூத்துக்கலை பல்கலைக் கழகங்களுக்கு கைமாறி இருப்பதை நீங்கள் எப்படிப் பார்க்கின்றீர்கள்?**

பல்கலைக்கழகங்களில் அண்மைக் காலங்களில் ஆரம்பிக்கப்பட்ட பாடநெறியான 'நாடகமும் அரங்கியலும்' என்னும் பாடத்திட்டதிற்கமைய கூத்துகளையும் தமதாக்கிக் கொண்டுள்ளனர். இவர்கள் தாங்கள் கலாநிதிப் பட்டம் பெற ஊரூராகக் கூத்தாடும் அண்ணாவிமார்களிடமும், கூத்தர்களிடமும் சென்று வடமோடி, தென்மோடிக் கூத்துகளை அரைகுறையாக பயின்று பட்டம் பெற்றபின், அவர்கள் தான் கூத்தின் சொந்தக்காரர்கள் எனக் கூறிக்கொண்டு, அந்த அண்ணாவிமார்களையும், கூத்தர்களையும் குறைகூறிக் கொள்ளுகின்றனர். ஆனால், கூத்து கைமாறவில்லை; அதனைக் கைப்பற்ற எத்தனிக்கின்றனர். ஆனால் முறைப்படியான மரபுமுறை அல்லது பாரம்பரிய கூத்துமுறைகளை இவர்களால் என்றும் முழுமையாக கைப்பற்ற முடியாது.

▸ **'பல்கலைக்கழகம் சார்ந்தவர்களே கூத்தின் இரட்சகர்களாகத் தங்களைக் கட்டமைத்துக் கொண்டிருக்கிறார்கள்' இது பற்றிய உங்கள் கருத்து என்ன?**

இசை நடனக் கல்லூரியை கட்டுவித்த அமைச்சராயிருந்தவர் இதனை ஆரம்பித்த நோக்கம் பரம்பரையான மரபுக்கலைகள், மரபு மாறாமல் படிக்கின்ற மாணவர்களுக்குக் கையளிக்கப்பட வேண்டும். பல்கலைக்கழகத்தில் உள்ளவர்கள் இதனை முற்று முழுதாகப் பயின்று சென்று மற்றைய வருங்காலச் சந்ததிகளுக்கு மரபு மாறாமல் கையளிக்கவேண்டும்; பல்கலைக்கழகத்திலே கூத்துக்கலையை முறையாகக் கட்டிக்காத்து வரவேண்டுமெனில் வித்தகமுடைய அண்ணாவிமார்கள் விரிவுரையாளர்களாக வரவேண்டும். இவர்களுக்குப் பயிற்றுவித்தலைச் செய்து கற்பிக்க வழிப்படுத்துவதுடன், விரிவுரையாளராக வருபவர்களும் கூத்தை முற்றாக துறைபோகக் கற்றபின்னே விரிவுரை செய்ய வேண்டும்.ஆனால் இவ்வாறான நிலை இன்றில்லை. இன்றைய பல்கலைக்கழகச் செயற்பாடுகள் குரங்கு கைப் பூமாலை போல ஆகியுள்ளதை நினைத்து வேனைப்டுக்கிறேன். கோழியொரு முட்டையைப் போட்டு விட்டுக்கொக்ரிப்பது போலவே கொக்கரிப்பதும், ஆயிரம் முட்டைகளையிட்ட ஆமை போல் மரபு மாறாத கூத்தின் அண்ணாவிமார்கள் அவமானப்படுத்தப்படுவதும் கவலையைத் தருகிறது. பொய்மையாக விரிவுரையாளர்கள் தங்களைக் கூத்தின் சூத்திரதாரியாகக் கட்டமைக்க எத்தனித்தாலும் கிராமங்களில் கூத்துக் கலைஞர்கள், அண்ணாவிமார்கள் இருக்கும் வரை அவர்களே கூத்தின் இரட்சகர்கள். இதை எவரும் மறுக்கவோ மறுதலிக்கவோ முடியாது. கூத்துக்கலையின் பூரணத்துவம் அறியாத அப்பாவிகள். வால் புடியர்கள் அவர்களை ஆதரிக்கலாம். காலக்கண்ணாடி காட்டும் உண் மையை. ஏனெனில், கூத்துக்கலையானது, கூத்து இறையாண்மைத் தொடர்பின் உறவுப்பாலம், கூத்து மரபுவழி ஊடகம், கூத்து அறிவியல் தொழில்நுட்பம், கூத்து வரலாற்றின் குறிகாட்டி, கூத்து தமிழ் இலக்கண, இலக்கியக் காப்பேடு, கூத்து முகாமைத்துவ அடித்தளம், கூத்து பாரம்பரியத்தின் புகலிடம், கூத்து ஒற்றுமையின் தத்துவம், கூத்து இறைதந்த பெருங்கொடை, கூத்து திறமைக்கு ஒரு களம், கூத்து அறிவுக்கு ஒரு பாடம், கூத்து முத்தமிழ் வித்தகம், கூத்து தமிழர் கலை காக்கும் காவலரண், கூத்து கிராமிய பல்கலைக்கழகம், கூத்து ஈழத்தின் தனித்துவம், கூத்து புலவனின் புத்தகம், கூத்து தனிநபர் அடையாளம், கூத்து ஊருக்குப் பெருமிதம்.

▶ **கூத்து மீளுருவாக்கம், புத்தாக்கம், மீள்கண்டுபிடிப்பு என்கிற கோட்பாட்டைப் பற்றி உங்களது கருத்து?**

மட்டக்களப்பு கூத்துக்கலை 1947 வரை புராண, இதிகாசக் கதைகளைக் கதைக்கருவாகக் கொண்டும், 1947-இல் சமூகக் கதைகளைக் கருப்பொருளாகக் கொண்டும் (லெட்சுமி கல்யாணம்) ஆடப்பட்டன. 1960-இல் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் சு. வித்தியானந்தன், சிவத்தம்பி அவர்களால் ஆட்டம், பாட்டு, மத்தளம் எனத் தாளங்களில் மாற்றமின்றி 'படச்சட்ட' முறையில் மாத்திரம் மாற்றம் செய்யப்பட்டு ஆடப்பட்டது. இம்முறை பட்டணங்களில், பாடசாலைகளில் (தமிழ்த்தினப் போட்டிகளில்) ஆடப்பட்டாலும் கிராமப்புற மக்கள் இம்மாற்றத்தை நிராகரித்தனர். பரம்பரையான (மரபு மாறாத) ஆட்டத்தை மாற்றம் செய்வது பொருத்தமற்றது என இடித்துரைத்து மறுத்தனர்.

அண்மைக்கால பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சிலர் 'கூத்துக்கலை மீளுருவாக்கம்' என்ற பெயரில் இக்கலைகளைக் 'கண்டபாவனையில் கொண்டை முடித்தல்' என்பது போல, நாடகத்தைப்போல காட்சியமைப்பு, திரைகள், வாத்தியங்கள் என்பவற்றை புகுத்தி கூத்துக்களை விலாச நாடமாக மாற்றினர். ஆனால் மட்டக்களப்பு கூத்தானது மத்தளம், தாளம், சலங்கையின் ஒருங்கிசைவு என்பதை அறியாதவர்கள் என்பதையே நாங்கள் உணர வேண்டும். 'கூத்தும் மத்தளம் போல் கூடி வாழ்க' என மணமக்களை மட்டக்களப்பில் வாழ்த்துகின்ற வழமையுண்டு. கூத்தையும் மத்தளத்தையும் பிரிக்க முடியாது. அதுபோல் மணவாளனும், மணவாட்டியும் பிரிக்க முடியாதபடி கூடி வாழ்க என்பதாகும்.

சிங்கள பாரம்பரிய கலைகளான கண்டிய நடனம், சோக்கரி, யக்கா முதலிய நடனங்கள் மாற்றமின்றி அவ்வாறே தொடர்ந்து பேணப்பட்டு வருகின்றன. அதே உடை, அதே ஆட்டம், அதே 'பெர' வாத்தியம் அதில் எவ்விதமாற்றமும் செய்ததில்லை. அவ்வாறே 'சோக்கரி', 'யக்கர்' ஆட்டங்களிலும் எவ்விதமாற்றமும் செய்யப்படவில்லை. கண்டிய நடனக்காரர்கள் அணியும் ஆடைகள் அப்படியே மாற்றமின்றியிருக்கின்றன. 'பெர' என்ற மத்தள வாத்தியத்தை தவிர வேறெந்த வாத்தியங்களும் பயன்படுத்தப்படுவதில்லை. ஆட்டமுறை, தாளக்கட்டு என்பதிலும் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை. இவைகளை நாமேன் சிந்திக்க கூடாது. இந்தியாவிலும் கதகளி, யட்சகானம், தெருக்கூத்து அனைத்தும் பழைய முறைகளிலே பாரம்பரிய கலைகளாகவே ஆடப்படுகின்றன. உடைகள், ஒப்பனைகள் எவற்றிலும் மாற்றமில்லை. ஆட்டங்கள், பாட்டுக்களிலும் எவ்வித மாற்றங்களுமில்லை. யப்பானின் 'கபுக்கி' நடனம், சீனாவின் 'ட்றேகன்' நடனம் அதே பழைய உடை, ஒப்பனை, ஆட்டம் எனத் தொடர்கின்றன. எத்தனையோ தொழில்நுட்ப வளர்ச்சி ஏற்பட்டிருக்கும் போதும் தங்களின் பாரம்பரிய கலைகளில் அவர்கள் கைவைக்கவில்லை. அவ்வாறே நாமும் மரபுவழிக் கலைகளை மாயவலைக்குள் மறைக்க முயற்சிக்காது, நமது பாரம்பரிய கலையான கூத்துக் கலையையும் பேணவேண்டியதும் வருங்கால சந்ததியினரிடமும் மரபு மாறாது கையளிக்கப்பட வேண்டியதும் கட்டாய கடமையாகும். ஏனெனில் பாராம்பரிய கிராமியக் கலைகள் அதன்மூல வடிவத்திலே இருக்கவேண்டும். மாற்றம் செய்வதனால் அதன் தனித்துவத்தை இழந்து, போலி (பொய்) முகத்துடன் காட்சியளிக்கும் எந்த நாட்டிலும் பாரம்பரியக் கலைகளை இவ்வாறு மாசுபடுத்துவதில்லை. நவீனப்படுத்தப்படவில்லை. பாரம்பரிய கலைகள் ஒரு சமூகத்தின் வரலாற்று பதிவுகள் ஆகவும், நாகரிகப் பதிவாகவும் அமைகின்றன. பாரம்பரிய கலைகள் நமது பரம்பரைச் சொத்து. முதுசம். அதில் எவ்வித மாற்றமும் தேவையில்லை. மாற்றம் வேண்டி நிற்பன: நேரமாற்றம், தற்கால நடைமுறைக் கதைக்கரு, தற்கால கூத்தர்களின் ஒப்பனை போன்றவைகள்.



**▸ நீங்கள் பேணிப் பாதுகாத்து வரும் 'நிகண்டு' ஏட்டுப் பிரதியின் கதை என்ன?**

மற்றைய இடங்கள் போலவே எனது ஊரான ஆரையம்பதியிலும் பழைய தலைமுறையினர் ஏட்டுச் சுவடிகளையும் பேணிப்பாதுகாத்து வந்தனர். இன்றும் சிலரிடம் வைத்தியம், மாந்திரீகம் போன்ற ஏட்டுப் பிரதிகள் உள்ளதையும் அறிய முடிகின்றது. அது போலத்தான் எனது தந்தையின் ஏடுகள் ஒரு பொட்டகத்தினுள் கட்டுக்கட்டாக இருக்க, அவர் மறைவின் பின் எல்லா ஏடுகளையும் தனது சகோதரனான இளைய தம்பி, எனது மாமாவின் உதவியுடன் எரியூட்டிய போது, அவற்றில் சில ஏடுகளை பாய்ச்சுற்று அசவுகளில் எடுத்து மறைத்து வைத்து, தமக்கையாருக்குத் தெரியாமல் தன் வீட்டில் பொட்டத்திற்குள் வைத்து, எமது தாயின் மறைவின் பின் எனக்கு அம்மாவின் ஆதங்கங்ளைக் கூறி கையளித்து, மந்திரங்களை மறந்தும் கற்றுவிடாதே தம்பியென்று கூறினார். அவ்வாறு கையளித்த 22 ஏட்டுச் சுவடிகளில் ஒன்றுதான் இந்த அரும்பொக்கிஷமான 'சிந்தாமணி நிகண்டு' ஆகும். இவற்றை பல வகைகளில் பழுதடையா வண்ணம் பச்சிலைகளால் துடைத்து பாதுகாத்து வந்த வேளை முதலில் திருகோணமலை வளாக அரும்பொருட்காட்சியக திறப்பு விழாவின் போது காட்சிப்படுத்தப்பட்டதன் பின்னர் 'சிந்தாமணி நிகண்டு' ஏட்டினைப் பற்றிப் பரவலான விமர்சனம் வந்தது. ஏட்டுப் பிரதிகளையெல்லாம் மட்டக்களப்பு ஆவணக் காப்பகமான அரசடி நூலகம் பேணிப் பாதுகாத்து வருகிறது. இந்நூலகத்தில் பணிபுரியும் காப்பக ஆய்வு இளைஞர்கள் எமது ஏடுகளையும் பெற்று 'படி'யெடுத்து ஆவணப்படுத்தியதோடு எமது ஏடுகளையும் சுத்தப்படுத்தி பாதுகாப்பாக இருக்கும் வகையில் தேப்பன்தைலதால் சுத்தப்படுத்தி மீண்டும் கையளித்தனர். கிழக்குப் பல்கலைக்கழகமும் அண்மையில் ஏட்டுக் காப்பக பிரிவைத் தொடங்கி எனது ஏட்டுப் பிரதிகள் சிலவற்றையும் பாதுகாத்து வைத்திருக்கின்றனர். ஆனால் இந்த நிகண்டு எமது இல்லத்தில் ஏனைய ஏட்டுப் பிரதிகளுடன் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

**▸ உங்கள் செயற்பாடுகளுக்கு உங்கள் குடும்பம் தரும் ஆதரவு பற்றிச் சொல்லுங்கள்?**

***'என்நன்றி கொண்டார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை***
***செய்நன்றி கொண்ட மகற்று'***

எனும் பொய்யாமொழிப் புலவர் வள்ளுவப்பெருமானின் திருக்குறள் படி, 'வாயும் வகிறுமானாலும் தாயும் பிள்ளையும் வேறு' என்பார்கள். அந்த வகையில் இந்தக் கேள்வி மிகவும் பொருத்தமானது. எனது நன்றிக் கடன்களை நவின்று விட சந்தர்ப்ப மளித்த உங்களுக்கு முதல் நன்றி. எனது அனைத்து கலையிலக்கிய செயற்பாடுகளுக்கும், எப்பொழுதும் கைகொடுத்து, மெய்வருத்தம் பாராது, எதுவும் சொல்லாது குறிப்பறிந்து உதவுபவர் எனது மனையாள். எந்த எந்த மாதிரியான பங்களிப்புகளை எப்வெப்போது செய்ய வேண்டுமோ அவ்வப்போது செய்வார். கூத்து, நாடகம் பழக்கும் போதும், பயிலும் போதும் வரும் அத்தனை கலைஞர்களையும் ஆதரித்துக் காப்பார். வேளைக்கு வேளை தேநீர், குளிர்பானங்கள், சிற்றுண்டிகளை அவரவர் தேவைகளையறிந்து கொடுத்து உபசரிப்பார். எனது நாடக, கூத்து பாத்திரங்களுக்கான சேலை, சட்டை மற்றும் ஒப்பனைப் பொருட்களை அவரே வாங்கி ஒப்பனை செய்வதும், நான் இலக்கிய எழுத்துக்களில் மூழ்கி எழுதும் பொழுதெல்லாம் விழித்திருந்து நேரத்துக்கு நேரம் கண்டிப்புடன் ஆகாரங்களையளித்து உண்ணக், குடிக்க வைப்பார். இன்னும் எனது கலை, இலக்கிய செயற்பாடுகளுக்கு தோளோடு தோள் நின்று ஒத்துழைப்பு வழங்கி வருகிறார். 'மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்' என்பதை எனது கலையுலகப் பயணத்தில் நான் கண்டு கொண்டேன். எனது ஒரே மகன் பூஸிதன் எனது எழுத்தாங்கங்கள் அத்தனையும் நேரம், காலம் பார்க்காது கண்விழித்து தட்டச்சு செய்து, ஒழுங்குபடுத்தி உரிய உரிய முறைப்படி பிரதிகள் எடுத்து சரிபார்ப்பதற்குக் கொடுப்பார்; எனக்கு அவ்வப்போது தேவை யான தரவுகளை எவ்வகையிலும் பெற்று உடனுக்குடன் உதவுவார். எனது கலையாக்கச் செயற்பாடுகளுக்கு தனது உழைப்பு, நேரம் என்பவைகளை முதலீடு செய்து எனது கலைப் பயணத்தைத் தடையின்றி நான் நிறைவேற்ற முன்னின்று உதவும் திறன், ஆற்றல், மனப்பாங்கினைக் கொண்டுள்ளார்.

**▸ நமது பாரம்பரியக் கலைகள் மற்றும் இலக்கிய முயற்சிகளில் ஈடுபடும் இன்றைய தலைமுறையினருக்கு நீங்கள் சொல்ல விரும்புவது என்ன?**

கலையென்பது மனநிறைவைத் தரும் சாதனம். கலையானது அதனைப் பயில்வோருக்கும் நுகர்வோருக்கும் மனநிறைவைத் தருகின்ற ஒரு திறனாகும். கலையானது மனிதரைச் செம்மைப்படுத்துவது. பாரம்பரியக் கலை, இலக்கியங்கள் மக்கள் மனம் கொள்ளும் தெய்வீகக் கலைகளாக மிளிர்கின்றவை. கலைகளைக் கலைகளாக மதிக்கவேண்டும். கலைப் பயணத்தில் எத்தனையோ தடைக்கற்களைச் சந்திக்க வேண்டி வரும். அவற்றையெல்லாம் பொறுமை, சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு, செவிமடுத்தல், நம்பிக்கையாயுதங்களால் படிக்கற்களாக மாற்றி இலக்கையடையப் பயணிக்க வேண்டும். கலையிலக்கியங்களைச் சரியான செம்மையான முறைகளில் கைப்பற்ற கலைஞர்களுக்கிடையே போட்டி இருக்க வேண்டும். அதனைத் தப்பிதமாக விளங்கி பொறாமையாக மாற்றி விடக்கூடாது. உண்மைக் கலைஞர்களை கலையுணர்வுள்ள உண்மை இரசிகர்களே மதித்துப் போற்றி வாழ்த்த வேண்டும். கலைகளின் உண்மை நுட்பங்களையறியாது, கலைஞரென்று தம்மைத்தாமே பீற்றிக்கொள்ளுபவர்களை ஏற்றுக் கொள்ள முடியாது. சரிசம நீதிகளோடு திறமைகளை மதித்தால், உண்மைக் கலைஞர்களாக உயர்ந்து மிளிரலாம் என்பதே நிதர்சனம். இவற்றை ஏற்றுக்கொள்வதோ மறுதலிப்பதோ அவரவர் மனநிலையைப் பொறுத்ததாகும். எனினும், பாரம்பரியக் கலைகளைப் பாரம்பரிய முறைப்படி, பேணிப் பாதுகாப்பதோடு வளர்ந்து வரும் இன்றைய தலைமுறையினர் அதனை முறையாகக் கைக்கொண்டால், உண்மைக் கலையிலக்கியங்களுக்கு உயிரூட்ட முடியும். இதனை உணர்ந்து செயற்படுவார்களாயின் உயர்வைப் பெறமுடியும்.



prasad.s@thaiveedu.com






# அருளின் கவிதைகள்! தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைகளுள் சிலவற்றின் மீதான பார்வை

– த. கி. ஷர்மிதன்

ஈழத்து இலக்கியப் பரப்பில் பாரறிந்த தமிழ் எழுத்தாளருள் ஒருவர் ஆரையூர் அருளர். தனது உரையாலும் எழுத்தாலும் தமிழ் வளர்த்துவரும் இவரது பணி போற்றத்தக்கது. அடக்கம், பணிவு, விட்டுக் கொடுப்பு, அர்ப்பணிப்பு, சேவை என்பன மிக்க வித்தகக் கலைஞர் இவரென்பது சாலப் பொருந்தும். கிழக்கிலங்கையில் மட்டக்களப்புத் தமிழகத் தில் நன்னகராம் ஆரையம்பதியில் வசித்துவரும் மூத்ததம்பி அருளம்பலம், ‘ஆரையூர் அருள்’ எனும் பெயரில் தனது எழுத்துப் பணியில் ஈடுபட்டு வருகிறார்.

கவிதை, கட்டுரை, செய்யுள், பாடல் எனப் பல்வகைமை களில் சமூகம், சமயம், வாழ்வியல் எனப் பல பொருள்க ளிலும் ஆக்கங்களை ஆக்கி அளித்துவருகிறார். நவீன கவிதை, மரபுக்கவிதை, கரகம், கும்மி, பின்னல் கும்மி, நாட்டார் பாடல், கிராமியப் பாடல், வாழ்த்துப் பாக்கள், இறை யின்பப் பாவாரங்கள், கூத்துப் பாடல்கள், கொம்புமுறிப் பாடல்கள், நவீன கூத்துப் பாடல்கள் என இவர் இதுவரை 10,758 பாடல்களை எழுதியுள்ளார். இவரது ஆக்கங்கள் வீரகேசரி, சிந்தாமணி, தினகரன், தினக்குரல், தினக்கதிர், தினமணி, கதிர், தளிர், கதிரவன், விடிவானம், ஒளி, சிகரம், கீழ்வானம் எனப் பல பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வெளிவந்துள்ளன. அவை இவரது தமிழ் ஆளுமைக்குச் சான்று பகர்வனவாய்த் திகழ்கின்றன.

மாவட்ட முதன்மை வாழ்நாள் சாதனையாளர், தேசிய கலைஞர் எனத் தனது திறமையை வெளிப்படுத்தியுள்ளார்.

ஆரையூர் அருள் எழுதிய கவிதைப் படைப்புகளுள் தேர்ந் தெடுக்கப்பட்ட சில கவிதைகளில் வெளிப்படும் சிந்தனை களை எடுத்தியம்புவதாக இக்கட்டுரை அமைகிறது.

### தாயவள் ஏங்கி நிற்கிறாள்:

தாய்நாட்டின் (இலங்கையின்) நிலைமையை எடுத்தியம்பும் கவிதையாக இது திகழ்கின்றது. நம்மை ஈன்ற, நம்மைத் தாங்கும் தாய் மண்ணை நமது சுய இலாபத்திற்காய் கவனி யாது இருக்கும் நிலைமையை நன்கு எடுத்து விளக்கும் கவிதையாக இக்கவிதை காணப்படுகிறது. எளிமையான சொல்லாடல் மூலம் சொல்லவந்த உயர் பொருளை நன்கு எடுத்துரைக்கும் இவருடைய பாங்கு சிறப்புக்குரியதாகும். பெற்ற தாயையே விலைபேசி விற்கும் ஈனச் செயலைச் சாடிடும் கவிஞரின் ஆதங்கம் எம்மில் சாட்டையாக வந்து விழுகின்றது.

***‘சுகபோகச் சாக்கடையில் வீழ்ந்து***
***தம்மினம் விற்க விலை பேசும் - சொந்த***
***மைந்தர்கள் மனநிலை யறியாத***
***மாதா ஏங்கி நிற்கிறாள்...’***

‘ஒற்றுமைக் கரவொலி ஒலிக்கட்டும்’ இலங்கையில் இன ஐக்கி யத்தை ஏற்படுத்துவதன் அவசியத்தை வலியுறுத்திக் கூறும் கவிதை. இலங்கையில் பிரிவினைவாதம் தலைதூக்குவ தற்கான காரணம், அதனைச் சரிசெய்யும் முறைமை, இன ஐக் கியத்தால் ஏற்படும் நன்மை என்பவற்றை கவிஞர் கவிதை யூடாக வெளிப்படுத்துகிறார்.

இன ஐக்கியத்திற்குத் தடை ‘சாதியம்’ தான் என்பதை,

***‘பேசிடின் ஜாதிகள் பற்றி - மன***
***அந்தகாரம் தினம் முற்றி,..’***

எனப் பாடுகின்றார்.

இன ஐக்கியத்தை ஏற்படுத்துவதன் அவசியத்தை,

***‘சங்கிலி பிணைந்திட்டால் வலிமை - இன***
***சங்கம இணைப்பினால் பெருமை,..’***

எனப் பாடி நன்கு வலியுறுத்துகிறார்.

இலங்கைத் தீவில் மகிழ்ச்சி மலரும் வழியையும் நன்கு வலியுறுத்தியுள்ளார்.

***‘மதத்தினை ஒன்றாய் மதிப்போம் - மற்ற***
***இனத்தினைச் சேர்த்தே அணைப்போம்***
***குணத்தினால் கூடி இருப்போம் - தேசிய***
***உணர்வினால் ஒன்றி உழைப்போம்...’***

என்ற வரிகள் இன ஒற்றுமைக்கான பாதையைக் காட்டி நிற்கின்றமை குறிப்பிடத்தக்கது.

ஔவை இலக்கியங்கள் அத்தனையும் ஔடதங்கள். ஔவையாரின் இலக்கியங்கள் மானிட குலத்திற்கு மருந்து போன்றவை என்பதை இக்கவிதை கூறுகிறது. ஔவையாரின் நூல்களை வரிசைப்படுத்திக் கூறி, அவரின் தமிழ்ப் புலமையையும் அவரின் இலக்கியங்களில் காணப்படும் செழுமையையும் எடுத்துரைக்கின்றார். அத்துடன் இக்கவிதை ஔவை இலக்கியங்கள் போற்ற வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தி நிற்கிறது.

***‘நெறிதவறா நீதிவாழ்வை நிதம் நேரில்காட்டி***
***அறநெறியாமிவ் விலக்கியங்கள் வாழ்வின் வழிகாட்டி***
***அத்தனையும் மானிடமுன்னேற்ற நல்வழித் திசைகாட்டி***
***அறியுள்ளங்கை நெல்லிக்கனியென நெஞ்சில்***
***நிலைநாட்டி...’***

எனும் வரிகள் ஔவை இலக்கியங்களின் பயனை நன்கு எடுத்துக் கூறுகின்றன.

வாழ்வு மலர்ந்தது வாழ்வு எவற்றால் மலர்கிறது என்பதைக் கூறும் கவிதையும் இது. கூட்டுறவில்தான் வாழ்வின் மலர்ச்சி என்பதையும் இக்கவிதை அடித்துச் சொல்கிறது. கவிஞரின் தமிழ் ஆற்றலும் கற்பனை வளமும் மிகுந்திருக்கும் எளிமையான இக்கவிதை மனதிற்கு இதத்தைத் தரும் கவிதையாகவும் உள்ளது. சமூகப் புரட்சி சிந்தனைகளையும் இக்கவிதை நன்கு வெளிப்படுத்துகிறது.

***‘நல்லுறவாம் கூட்டுறவில் நன்மை விளைந்தது***
***கூட்டாளியாகக் கூடி உழைத்ததால்***
***பாட்டாளி வாழ்வு மலர்ந்தது...’***

எனும் வரிகளில் தொழிலாளர் ஒற்றுமையும் வலியுறுத்தப்படுகிறது.

சமூகத்தில் காணப்படும் பழுதுகள் சரிசெய்யப்படும் போது தான் மனிதம் மாண்பு பெறும் என்பதையும் இக்கவிதை வெளிப்படுத்துகிறது. சமூகத்திலுள்ள மனித மாண்புக்கு எதிரான விடயங்களைப் பட்டியலிட்டு, அத்தகு தீங்குகள் இல்லாதொழியும் போது மனித சமுதாயம் மென்மேலும் மேன்மை பெறும் என்பதையும் எடுத்தியம்புகின்றது.

***‘பாலியற் கொடுமைகள் பட்டிட வேண்டும் - அந்த***
***பாவிகள் நொந்தே செத்திட வேண்டும்***
***பெண்ணியம் கண்ணாகப் பேணிட வேண்டும் - அதற்கு***
***திண்ணிய நெஞ்சோடு செயற்பட வேண்டும்’***

எனும் வரிகள் எமது சமூகத்திலுள்ள பெண்கள்சார் கொடுமைகள் அழிய வேண்டியதன் அவசியத்தையும் அத் தகு கொடுமைகள் அழிந்து பாலின சமத்துவம் வளரும்போதுதான் மனிதம் மாண்பு பெறும் என்பதும் வலியுறுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

விலைபேச முடியாதது அன்பு. அவ்வன்பின் ஆழ, அகலத்தை எடுத்தியம்பும் இக்கவிதை, அன்பு விலை மதிப்பற்றது என்பதையும் அகிலத்தின் ஆணிவேர் அது என்பதையும் வரலாற்றின் துணையுடன் எடுத்துவிளக்குகிறது.

***‘பின்ன மில்லா***
***உயருண்மை***
***அன்புதான்***
***உருவமற்ற மொழிகளிலே சிறந்த***
***தன்புதான் - என்றும்***
***பருவமாற்ற பாதிப் படையாததும்***
***அன்புதான்***
***சமயமனைத்தும் போதிக்கும் தத்துவம்***
***அன்புதான்...’***

எனும் வரிகளில் எம்மை அன்பால் கட்டிப்போட்டுவிடுகிறார் கவிஞர்.

‘பாரதி நீ மீண்டும் பிறக்காதிருப்பதே நன்று’ என்று, பாரதியின் சிந்தனைகளுக்கு முரணாகச் சமூகம் மாறியுள்ளதை வெளிக்காட்டுகிறது இப்படைப்பு. சமூகத்தின் போக்குப் பற்றியதான தனது ஆற்றாமையைப் பாரதியைத் துணையாக்கி கவிஞர் வெளிப்படுத்திய பாங்கு சிறப்பிற்குரியது. பாரதி இனி மண்ணில் பிறக்காமல் இருப்பதுதான் பாரதிக்கு நல்லுது என்பதற்கான காரணங்களைப் பட்டியல் படுத்துவதனூடாகச் சமூகம் பிறழ்வான போக்கில் போய்க் கொண்டிருக்கும் தன்மையை எடுத்துக்காட்டுகிறார்.

***‘தீண்டாமை ஒழித்திடு என்றாய் - இன்று***
***வேண்டாமை பேசிடும் வீணர் வாழ்கிறார் நன்றாய்***
***வேற்றுமை முரசெங்கும் முழங்கும்***
***ஆற்றாமை கண்டு நீ அழுதிட வேண்டும் - அதனால்***
***பாரதி! நீ மீண்டும் பிறக்காதிருப்பதே நன்று’***

என்ற வரிகள் கவிஞரின் மனநிலை நமக்குத் தெட்டத்தெளிவாகப் புலப்படுத்தி நிற்கின்றது.

என்னென்று சொல்வது நாட்டில் நடக்கும் குழப்பங்களைப் பார்த்துப் புலம்புவதாக இக்கவிதை திகழ்கிறது. மனதிற்கு

ஒவ்வாத, நீதிக்குப் புறம்பான பல்வேறு விடயங்கள் நாட்டில் நடந்தேறுகின்றன. அதனை எதிர்த்துக் கேட்பதும் குற்றம், எழுத்தில் கேட்பதும் குற்றம். வாய்பேசாமல் மக்கள் புலம்பும் தன்மையை எதுகை, மோனைச் சுவைபட எளிய சொற்களால் வடித்துத் தந்திருக்கின்றார் கவிஞர். நாட்டில் என்னதான் நடந் தேறினாலும் எதிர்த்துக் கேட்கமுடியாத கருத்துச் சுதந்திரம் மறுக்கப்படும் தன்மையை,

***'என்ன? ஏது? நடக்குதிந்த நாட்டில - என்று***
***சொல்ல முடியாதிருக்கு பாட்டில***
***எல்லாத்தையும் மெழுதிவிட்டா - ஏட்டில***
***எம்மப் பிடிச்சடைப்பா கூட்டில***

எனும் வரிகள் நன்கு புலப்படுத்தி நிற்கின்றன.

## மண்முனைப்பற்று எழிலாள்:

இலங்கையின் கிழக்குமாகாணத்தில் அமைந்துள்ள மண்மு னைப்பற்று எனும் பிரதேசத்தின் புகழ்கூறும் கவிதை இதுவாகும். மரபு பா வகையில் கலித்துறையில் அமைந்த இப் பா மண்முனை பிரதேசத்தைப் பெண்ணாக உருவகித்து அதன் வளத்தையும் வரலாற்றையும் கூறி மண்வாசனையைத் தூண்டி மனதை நிறைத்துவிடுகிறது. உலகநாச்சியால் ஆளப்பட்ட சிறப்பிற்குரிய பிரதேசம் மண்முனைப்பற்று என்பதை,

***'மண்முனைப்பற்று இராட்சியம்***
***இளவரசி உலகநாச்சி கோலதோட்சி***
***திண்ணமுடன் சிகரம் சிறப்புற்று விளங்கிய மாட்சி'***

எனும் வரியில் கவிஞர் பதிவுசெய்துள்ளார். நெய்தல், மருதம், குறிஞ்சி, முல்லை நானில வளமும் கொண்ட நற்பூமி என்றும் பல்லின மதத்தவரும் பண்புடன் வாழ்ந்திருக்கும் பிரதேசம் என்றும் மண்முனைப்பற்றின் வளங்கூறி மண்முனைப்பற்றின் எழில் முகத்தை எமது கண்முன்னே கொண்டு நிறுத்தும் பாங்கு சிறப்பிற்குரியது.

***'பாலோடு தயிர் நெய்யளிக்கும்***
***கறவையினம் பல்கிப் பெருகும்***
***தேனோடு முக்கனி முந்திரி***
***நற்கனித்தருக்கள் தழைத்து வளரம்***
***தெங்கோடு நுங்குநிறை பனைகள்***
***செறிந்துசெழித்து விளையும்***
***எங்கும் எத்தொழிலும்***
***செய்திடுதீரர்கள் நிறைந்து விளங்கும்***
***செந்தமிழர் இஸ்லாமியர் தாய்மொழியாலொன்றி***
***சமத்துவமாயிருக்க தன்மடிவிரித்தாள்***
***இந்திஸ்லாம் கிருஸ்தவம் இன்சுவை***
***முக்கனியாயிருக்க வுயர்வளித்தாள்'***

என்ற வரிகள் மும்முனை எழிலாளிடம் எம்மை அழைத்துச் செல்கின்றமை மறுக்கமுடியாத உண்மை.

மட்டக்களப்பின் மண்வாசம் வீசும் மற்றுமொரு கவிப் படைப்பு இதுவாகும். கணவன், மனைவி இருவருக்கிடை யிலான உரையாடலாய் அமைந்த இக்கவிதையில், மட்டக்க ளப்பு பிரதேச வழக்குச் சொற்கள் மிக இலாவகமாகக் கையா ளப்பட்டுள்ளதை அறிய முடிகிறது. கணவன் பல்வேறு தொழில்களுக்குச் செல்லும் போது மனைவி கூறும் வார்த் தைகளை வரிகளாக்கி மட்டக்களப்பு மண்ணின் பண்பாட்டை நமது கண் முன்னே காட்சியாகப் பதிவு செய்துள்ளார். மட்டக் களப்பிலுள்ள ஆண்கள் புரியும் தொழில்களாக பட்டியில் பால்கறக்கப் போதல், காலைப் பாதுகாப்பு, உரமெறியப் போதல், பாயிழைத்தல், கதிரறுத்தல், வீசுதல், விறகு வெட்டல், தோட்டவேலை போன்ற தொழில்களைப் பட்டியல் இடுகிறார் கவிஞர்.

***'பாயிழைக்கப் பன்னறுக்கக் கிரான்குளம் போறமச்சான்***
***திராய்கிடக்கும் புடுங்கிவாங்க சுண்டி வெகுநாளாச்சிது'***

எனவும்

***'புதுக்குடியிருப்பு பொன்விளையும் வயலுக்குள்ள***
***கதிரறுக்க போறநீங்க புதுருக்கதிர் கொண்டுவாங்க'***

எனவும் வரும் கவி வரிகள் ஆடவர் புரியும் தொழில்களைச் சுட்டி நிற்கின்றன எனலாம்.

மட்டக்களப்புப் பாரம்பரிய உணவு முறைகள் பலவற்றையும் இக்கவிதையில் கவிஞர் பதிவுசெய்துள்ளமை சிறப்பம்ச மாகும். கொழுக்கட்டை, திராய்ச் சுண்டல், கண்ணாக்கடியன் மீன், மட்டுறால் குழம்பு, மண்டுப்புட்டு, சீலாமீன் பொரியல், தாமரைக் கிழங்கு போன்ற உணவு வகைகளைக் கவிஞர் கூறியுள்ளார்.

***'பாலன்முனை கடற்கரைக்கு வெள்ளாப்போடபோ மச்சான்***
***சீலாமீன் வாங்கிவாங்க கீலமாக வெட்டி பொரிச்சுத்தாறன்'***

எனும் வரிகள் மண்வாசனையை மணக்கச் செய்கின்றன. ஊருக்குள் கோயில் கதவு திறந்தால் மச்சம் விடுதல், பேய் பார்வையாதல், குறிகேட்டல், புதுக்கதிர் எடுத்து வீட்டில் கட்டுதல் முதலான மட்டக்களப்பு மரபுவழிப் பழக்கவழக்கங் களைப் பதிவு செய்துள்ளார்.


***'செல்வாநகர் கிழக்குக் காளிகோயில் திறந்திருக்கு***
***எல்லையெங்கும் மச்சமில்ல'***

என்ற வரிகள் இதனை வெளிக்காட்டி நிற்கின்றன.

கிராமியவாசம் வீசும் மட்டக்களப்புப் பிரதேச வழக்குச் சொற் கள் பல இக்கவிதையில் கையாளப்பட்டுள்ளன.

***'உமலுக்க ஒருதுண்டு ஓட்டு கொழுக்கட்ட இருக்கு***
***மறவாம தின்னுமச்சான் மதியம்வர பசியெடுக்கா'***

எனும் வரிகளில் வரும் உமல் எனும் பிரதேசக் கிளைமொழி குறிப்பிடத்தக்கதாகும். (உமல் என்பது பனை ஓலையால் செய்யப்பட்ட பொருட்களைக் காவுவதற்குப் பயன்படும் ஒரு பையாகும்) இவ்வாறாகச் சமூகத்தின் மரபுகளைப் படம் பிடித்துக்காட்டும் சமூகத்தின் வளர்ச்சிக்கு உதவும் பல கவிதைகளை ஆக்கி அளித்த ஆரையூர் அருளின் தமிழ் ஆளுமைப் பண்பு நயந்து போற்றுதற்குரியது என்றால் மறுப் பதற்கில்லை.



sharmithan.k@thaiveedu.com

# ஆரையூர் அருள்

– மூ. சிவகுமாரன்

முத்தமிழ் செழித்துச் சொத்தெனக் காக்க
முயல்கிறாய் திறனுடன் தோன்றி
வித்தகம் நிறைந்த வளமிகு முத்தாய்
வியனுல குய்யவே வந்தாய்
சத்தியம் காத்தே நித்தமும் வாழ
சகலரும் இன்புற வென்றே
இத்தரை சிறக்க அருளுடன் எழுந்த
இன்முகம் இன்புற வாழ்க !

மகத்துவம் பெற்ற குணங்களை ஆசான்
மாணவர் கற்றார் உன்னால்.
இகத்தினில் வயதும் தடையில்லை என்றே
இணைந்துநீ பெற்றனை பட்டம்
அகமது நிறைய அதிபராய்த் தேறி
ஆண்டனை அனைவரும் போற்ற
முகமது மலர்ந்த செழிப்புறு தமிழே
முழுவுல கும்தொழும் உன்னை!


எழுபது கடந்த போதிலும் நீயோர்
எழிலுறு இளையவன் தானே
எழுத்தும் ஆக்க மெலாமுனைப் பேசும்
எங்கணும் அருளென அன்பாய்
முழுமதி யுடைய புலவனாய் ஆனாய்
முதல்நிலை இலக்கியத் தாலே
பழுதிலாப் பாவ லனாகியே பாரில்
பணிச்செனை ஒளிர்ந்திரு முத்தே

வில்லிசை கூத்தும் கும்மியும் நன்றாய்
விளையுதே செழிப்புடன் ஓங்கி
பல்திறப் பாக்கள் காவடிச் சிந்தும்
பரமனைப் புகழ்ந்துமே பாடும்
தொல்தமிழ் காக்கும் புலவனும் ஆக
தோன்றுதே காவியப் பாடல்

sivakumaran.m@thaiveedu.com





# ஆரையூர் அருளும் சிறுகதையும்

– வ. துஷாந்தன்

மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள பழம்பெரும் கிராமங்களில் ஒன்றே ஆரையம்பதி. இக்கிராமம் ஆரம்ப காலத்தில் ஆரைப்பற்றை என அழைக்கப்பட்டது. இக்கிராமத்தில் கலை, இலக்கிய ஈடுபாடு கொண்டு மிளிந்தவர்கள் பலர். அவ்வரிசையில் இதே கிராமத்தில் பிறந்து, வளர்ந்து வசித்துக்கொண்டிருப்பவர்தான் ஆரையூர் அருள் என அறியப்படும் மூத்ததம்பி அருளம்பலம். சிறுவயதில் இருந்து கலை, இலக்கியத்தில் ஆர்வம் செலுத்தியதினால் இன்று ஆக்க இலக்கியங்கள் பலவற்றை ஈர்ந்தளித்துள்ளார்.

இவரால் எழுதப்பட்ட ஆக்க இலக்கியங்களில் சிறுகதையும் ஒன்றாகும். தரம் 5-இல் கற்கும் போதே சிறுகதை எழுதுவதில் ஆர்வம் செலுத்தியுள்ளார். அவ்வருடத்தில் அவர் எழுதிய 'அவள்' என்ற சிறுகதை சான்றளிக்கின்றது. இச்சிறுகதை பாடசாலை மட்டப் போட்டியில் முதலிடத்தினையும் பெற்றது. இதைத் தொடர்ந்து பல சிறுகதைகளைச் சிற்றிதழ்கள், பத்திரிகைகள், போட்டி நிகழ்ச்சிகளுக்காக எழுதியுள்ளார். அவ்வகையில் இவரால் எழுதப்பட்ட சிறுகதைகளாக 'அவள்' (1986), சமுதாய தராசு(2000), மாணவர் மையக் கல்வி(2003), பாரம் குறைந்தது(2010), நினைவலைகள்(2012), ஒற்றுமையே உயர்வு தரும்(2012), பொறாமை வேண்டாம்(2014), தப்புக்கான தண்டனை(2014), தந்திரம் இருந்தால் மந்திரம் வேண்டாம் (2016), அந்த நினைவு(2016), நாட்டார் பாடல்(2016), நாட்டார் கலை கற்றல்(2018), நன்றி கடன்(2019), உயர்ந்த உள்ளம் (2019), கசமுகாசூரனின் கர்வம் அடக்கிய கணபதி, மனமாற்றம், மூர்க்கனும் முதலையும்(2022), நன்றும் தீதும் பிறர்தர வாரா(2021), நெஞ்சக நினைவுகள்(2021), வாழ்வளித்த தொழிற்கல்வி(2021), கடுகு சிறிது காரம் பெரிது, அகத்தே அழிந்த ஆசை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இச்சிறுகதைகளில் பெரும்பான்மையானவை, சமூகத்தின் பண்பாட்டினையும் விழுமியங்களையும் இறைவனின் பெருமைகளையும் வாழ்வியல் அம்சங்களையும், தற்கால கல்வி முறைமையினையும் சித்தரிப்பதாக அமைந்துள்ளன. சமுதாயத்தின் தேவை அறிந்து செயற்பட வேண்டும் என்பதனை வலியுறுத்துவதாக இவரின் 'அந்த நினைவு', 'மனமாற்றம்' போன்ற சிறுகதைகள் அமையப்பெற்றுள்ளன. துன்ப துயரங்களை அனுபவித்து முதன்நிலையை பெற வேண்டும் என துடிக்கும் மாணவர்களைத் தட்டிக்கொடுக்க வேண்டும் என்ப

**இவரின் சிறுகதைகளில் பேச்சு வழக்கு கையாளப்பட்டிருக்கின்றது. வரலாற்று செய்திகள் உள்ளன. குறைந்தளவிலான பாத்திரங்களுடன் கதை நகர்ந்து செல்வதைக் காணமுடிகின்றது. நகர்ந்து செல்வதைக் காணமுடிகின்றது. உணர்வு தூண்டல், எளிய வசன நடை என்பன இவரின் சிறுகதைகளில் காணப்படுகின்றது.**

தனையும் அத்தட்டிக்கொடுப்பால் மாணவர்கள் வெற்றியை நிலை நாட்ட வேண்டும் என்பதனையும் உள்ளார்ந்த அர்த் தமாக கொண்டு அந்த நினைவு என்ற சிறுகதை நகர்கின்றது. இதனை இக்கதையில் வருகின்ற பாத்திரங்களும் சம்பவங் களும் உணரச்செய்கின்றன. கோரத்தாண்டவத்தில் சிக்கிச் சிதைக்கப்பட்டு, மொட்டிலே கருகும் மலர்களாக மாண வர்கள் இருக்கிறார்கள் என்னும் நிதர்சனமான உண்மை யினை சுரேசின் வாழ்வுக்கூடாக இச்சிறுகதை விளக்கிச் செல்கிறது. சமூகத்தினை விழிப்பூட்டுவதாக இவரின் 'கசமு காசூரனின் கர்வமடக்கிய கணபதி' என்ற சிறுகதை அமைந் துள்ளது. இச்சிறுகதையின் மூலமாக அதர்மம் அழிவைக் கொடுக்கும் என்பதனை கூறி சமூகத்தினை விழிப்பூட்டு கிறார் ஆசிரியர்.

ஆரையூர் அருள் வசிக்கின்ற பிரதேசம் இஸ்லாமிய சமூகத் தினர் அருகில் வாழ்கின்ற பிரதேசமாகும். இம்மக்களின் கலை, இலக்கியத்தோடு இணைந்து கொள்பவர் மட்டு மல்லாது தனது இலக்கிய வட்டத்தினையும் இவர்களோடு இணைத்து கொண்டவர் என்றதனடிப்படையிலும் இவரின் சிறு கதைகளிலும் அச்சமூகத்தின் பேச்சு நடைகள் கலந்திருப்ப தனையும் கண்டு கொள்ள முடிகிறது. இதனால் இவரின் சிறு கதைகள் இன நல்லுறவை வெளிப்படுத்தும் சிறுகதைகளாக அமைகின்றன. இவரின் 'நெஞ்சக நினைவுகள்' என்ற சிறுக தையில் கீழ்வரும் சம்பவம் ஊடாக இன நல்லுறவை காணமு டிகின்றது.

*'பைபிளின் கருத்தை பலீல்மௌலானா பற்றுடனே கூறுவதும், கீதை சொட்டும் போதனையை கீஸ்தோபர் பேசுவதும், இயேசு காவியந்தன்னை காசியானந்தன் கதை கதையாய் கதைப்பதையும், கண்ணகையம்பாள் சடங்கு காலத்தில் காசீம்காக்கா குடும்பம் நேர்த்திகள் கொடுப்பதும், வேதாந்த ஆராதனை காண வேல்முருகு குடும்பம் செல்வதுவும், கந்தூரி காலத்தில் கைலாயநாதர் குடும்பம் கலந்து கொள்வ துவும், சீனிமுகம்மது மகன் சுன்னத்துக்கு கிறிஸ்தவ, இந்து குடும்பங்களும், இந்துக்கள், கிருஷ்தவர்கள் திருமணத்தை முஸ்லிம்கள் முன்நின்று நடத்துவதும், எல்லோரினதும் மர ணக்கிரியைகளில் எல்லா மதத்தவரும் பொறுப்புடனே பங்கு கொள்வதும் பண்பாட்டு, கலாசார, பாரம்பரியங்கள் பேணிக் காப்பதுவும் எல்லோரும் ஒரே தாய் மக்கள் என்று வாழ்ந்து வந்ததுவும், அந்தக் கிராம பாடசாலையில் நான்காம் தரம் வரை அனைவரும் சாதிமத பேதமின்றிச் சமத்துவமாய் கற்ற துவும் உள்ளமது குதூகலிக்க ஒன்றாயிருந்து உணவுகளை பகிர்ந்துண்டு மகிழ்ந்ததுவும் நினைவலைகளாகயெழுந்து நெஞ்சை நெருடி மணம் பரப்பின'.*

இவரின் 'நன்றிக்கடன்' என்னும் சிறுகதை கடந்த கால போர்ச் சூழலில் ஏற்பட்ட இழப்பை நிவர்த்தி செய்வதற்கு மேற் கொள்ள வேண்டிய உபாயங்களை எடுத்துரைப்பதுடன், நன்றி மறவாமை உள்ளவர்களாகவும் மக்கள் வாழ வேண்டும் என்பதனையும் வலியுறுத்துகிறது.

கல்வி புலத்தில் நீண்ட காலம் சேவையாற்றியவர் என்றதன டிப்படையில், சமகாலக் கல்வி தொடர்பிலும் ஆரையூர் அருள் அதிக கவனஞ் செலுத்தி வருகிறார். எதிர்கால மாண வர்களின் நிலை தொடர்பிலான வெளிப்படுத்தலை ஆரையூர் அருளின் சிறுகதைகளில் கண்டு கொள்ளலாம். அதாவது தற் காலத்தில் இருக்கின்ற புத்தகக்கல்வி முறையால் தொழிற்சந் தையில் வேலைகளை பெற்றுக்கொள்ள முடியாமல் பட்டதா ரிகள் தொடர்ந்து போராடி வருவதையும் ஆர்ப்பாட்டங்களை நடத்துவதையும் சுட்டிக்காட்டி தொழில்மையக் கல்வி முறையின் அவசியத்தினை 'வாழ்வளித்த தொழில்கல்வி' என்ற சிறுகதையின் ஊடாக வெளிக்காட்டுகின்றார். இதே போன்று 'மாணவர் மையக் கல்வி' என்ற சிறுகதையின் ஊடாக ஆசிரியர் மையக்கல்வியில் இருந்து மாணவர் மையக் கல்விக்கு மாற வேண்டும் என்பதனையும் வெளிப்ப டுத்துகின்றார். அதாவது, மாணவர் மையக்கல்வி முறை என்று சொல்லப்பட்டாலும் ஆசிரியர்கள் இன்னும் இதிலி ருந்து விடுபடவில்லை. ஆசிரியர் மையத்திலேயே நின்று கொண்டிருக்கின்றனர். இது மாற்றமுற வேண்டும். என்பதனை இதன்மூலம் கூற விளைகின்றார்.

ஆரையூர் அருளின் சிறுகதைகள் இவ்வாறு அமைந்துள்ள அதேவேளை, சிறுகதைகள் சிறந்த கதைகளாக மிளர்வதற்கு அதில் கையாளப்படும் உத்தி முறைகளும் பெரும்பங்கு வகிக்கின்றது. அவ்வகையில் இவரின் சிறுகதைகளில் பேச்சு வழக்கு கையாளப்பட்டிருக்கின்றது. வரலாற்று செய்திகள் உள்ளன. குறைந்தளவிலான பாத்திரங்களுடன் கதை நகர்ந்து செல்வதைக் காணமுடிகின்றது. உணர்வு தூண்டல், எளிய வசன நடை என்பன இவரின் சிறுகதைகளில் காணப்ப டுகின்றது. சமூக உணர்வும் இவரின் கதைகளில் வெளிப்ப டுத்தப்படுகின்றது. பொருத்தமான தலைப்பு, சுருக்கமான வெளிப்படுத்தல், போன்றன சிறப்பாக அமைந்திருப்ப தனையும் காணலாம். சிறந்த சிறுகதைகளை சமூகத்திற்கு வழங்கிய எழுத்தாளர் என்ற வகையில் ஆரையூர் அருள் சிறப்பிடம் பெறுகின்றார்.



thusanthan.v@thaiveedu.com




# ஆரையூர் அருளின் கட்டுரைகள்

## நோக்கும் போக்கும்

– மா. உலககேஸ்பரம்

தமிழ் இலக்கியத்துறையில் தன்னை நிலைநிறுத்தி சாதனைகளைப் புரிந்து பல விருதுகளுக்கும் பாராட்டுகளுக்கும் சொந்தக்காரனாக விளங்கும் ஆரையூர் அருளம்பலத்தின் சிறப்புகள் எண்ணிலடங்காதவை. கவிஞராக, எழுத்தாளராக நடிகராக, இலக்கிய விற்பன்னராகத் திகழும் இவரின் கலைப்பணியானது என்றென்றும் எச்சமூகத்தினராலும் பாராட்டிக் கௌரவிக்கப்பட வேண்டியதொன்றாகும். தற்போது அருகி வரும் எமது பாரம்பரியக் கலைகளுக்கு உரமூட்டுவதாக இவருடைய கலை, இலக்கியச் செயற்பாடுகள் அமைந்துள்ளன. இதற்கு இவரால் எழுதி அளிக்கைச் செய்யப்பட்ட கூத்து, வில்லுப்பாட்டு, கும்மி, கரகாட்டம் என்பன சிறந்த எடுத்துக் காட்டுக்களாகும். ஆரையூர் அருள் கலை, இலக்கியத்துறை வளர்ச்சிக்கு ஆற்றி வரும் பங்களிப்புக்களுக்காக கலாசார அமைச்சு 'கலாபூஷணம்' விருது வழங்கி அவரைக் கௌரவித்தது. மேலும் இவரால் வெளியிடப்பட்ட 'கிராமத்து உள்ளங்கள்', 'இறையின்பபாவாரம்' போன்ற நூல்களுக்கு விருதுகளும் கிடைக்கப் பெற்றமை இவரது திறமைக்குச் சான்றாகும். இவரது எளிமையான போக்கிற்குப் பெருமை சேர்ப்பதுபோல 'செம்மொழிப் புலவர்' பட்டமும் இவருக்கு வழங்கப்பட்டது.

சமூகத்தின் பண்பாட்டுக் கோலங்களை ஆரையூர் அரும்பலம் சிறுகதை, கட்டுரை, கவிதை, நாடகம், வில்லுப்பாட்டு, சடங்குப் பாடல்கள், கூத்து எனப் பல வடிவங்களில் எடுத்தியம்பியுள்ளார். முப்பத்தைந்திற்கும் மேற்பட்ட இவருடைய கட்டுரைகள் உள்வாங்கி இவ்வாய்வுக்கட்டுரை எழுதப்படுகிறது. ஆரையூர் அரும்பலத்தின் கட்டுரைகளை வரலாறு சார்ந்த கட்டுரைகள், நிகழ்கால கதைகள், அறிஞர்களின் சிந்தனைகள், இந்து மத வழிபாட்டு முறைகள், இலக்கியத்தோடு தொடர்புபட்ட கல்வி முறைகள் என வகைப்படுத்தி ஆராயலாம். இலக்கியம் சார்ந்த கட்டுரைகளில் கலை இலக்கியமும் கல்விச் செயற்பாடும், சிறுவர் இலக்கியமும், இலக்கிய விபரணமும், கவிதை அமைப்பு போன்றனவும் விரவி நிற்கின்றன. கலை இலக்கியமும் கல்வி செயற்பாடும் என்னும் இவருடைய கட்டுரை கலை இலக்கியங்களைக் கல்வி செயற்பாட்டுடன் எவ்வகையில் தொடர்புபடுத்தலாம் என்பதை ஆராய்கின்றது. இவர் வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு மனிதநேய பண்புகள் அனைத்தையும் ஒட்டுமொத்தமாக திரட்டி தருவது கலையும் இலக்கியமுமே என்கின்றார். ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் இக்கட்டுரையில் குறிப்பிட்டு இலக்கியமே கலைகளுக்குள் தலையாய கலையாகும் என்பதையும் தெளிவுபடுத்தியுள்ளார்.

மகாபாரதம், இராமாயணம், சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற இலக்கியங்களில் மனித வாழ்வியலில் ஒழுக்க அறநெறிகள் வெளிக்காட்டப்படுவதையும் அவர் சுட்டிக் காட்டத் தவறவில்லை. கலை, இலக்கியம் என்பன ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் என இக்கட்டுரையில் கூறுமிவர் இலக்கியங்கள் கல்வி செயற்பாடுகளை முன்னெடுக்கப் பயன்படும் தளங்கள் எனவும் விளக்கியுள்ளார். அத்துடன் கலை இலக்கியங்களைக் கல்வி செயற்பாட்டுடன் இணைப்பதற்கான வழிகளையும் கூறுகின்றார். முறைசார் கல்வித் திட்டமிடலில் இலக்கியங்கள் தொடர்பாக புதிய செல்நெறிகள் இணைக்கப்படும்போது கலை இலக்கியங்களைப் பாதுகாக்க முடியும் என்பதையும் உணர்த்தியுள்ளார்.

சிறுவர் இலக்கியம் எனும் கட்டுரையானது சிறுவர் பாடல்கள் எனும் தலைப்பிலுள்ள நூலுக்கு எழுதிய விமர்சனமாக அமைந்துள்ளது. இதில் சிறுவர் இலக்கியமும் நவீன இலக்கியங்களில் ஒன்றென வலியுறுத்தும் இவர் சிறுவர் இலக்கியங்களை எழுதுகின்ற பலரும் சிறுவர் உளவியல் தொடர்பான அறிவியல் சார்ந்து சிந்திக்காமலும் சிறுவர்களாக மாறாமலும் பெரியவர்களாக நின்று எழுதுகின்றார்கள் என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார். இதில் சூழலியல் தொடர்பான விடயங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு குறிப்பிட்ட சமூகத்தின் வாழ்க்கை முறைகளை உதாரணங்கள் மூலம் விளக்கியிருப்பதையும் காணமுடிகின்றது.

மூ. அருளம்பலத்தின் 'இலக்கிய விபரணம்' எனும் கட்டுரை 'சிறுகதை' குறித்துப் பேசுகிறது. விபரணத்தில் வரும் சொற்பிரயோகங்கள், மொழிநடை, சிறுகதையின் உட்பொருளுக்கு கொடுக்கும் விளக்கம் என்பன மற்றவர் மனதைப் பண்படுத்துவதாகவும் சுவைமிக்கவும் அமைந்துள்ளது எனக்கூறுகிறார். மேலும் கனவுலகம் எனும் நூல் பற்றி குறிப்பிடும் போது சமகால விடயங்கள் மட்டுமின்றி ஏனைய எழுத்தாளர்களின் கவனத்துக் கெட்டாத புதிய விடயங்களையும் பேசுகிறது.

விபரணத்தின் மகுடமாக 'மகரதோரணம்' பற்றி நோக்குகின்றார். இதில் நகைப்புக்குரிய மொழிப்பிரயோகங்களை ஆழமாகப் பார்க்கின்றார். மொழிபெயர்ப்பாளர் சுவாமிநாதனுக்கு சிங்கள இலக்கியங்களில் உள்ள பாண்டித்தியத்தினையும் எடுத்துக்காட்டுவதாகவும் இக்கட்டுரை அமைகிறது. கட்டுரைகளின் வசன நடை, உட்பொருள் என்பன அருளம்பலத்தின் ஆற்றலையும் திறனையும் வெளிப்படுத்துவதாக உள்ளது.

விபுலானந்தர், இராமானுஜர், சுவாமி விவேகானந்தர் முதலான அறிஞர்களின் கருத்துக்களையும் சமூகப் பணிகளையும் கட்டுரைகள் பலவற்றில் எடுத்தாண்டுள்ளார். 'விபுலானந்தரின் சமரச சமத்துவ சமூக பணி' எனும் கட்டுரையின் தலைப்பிலேயே கட்டுரையின் மையக்கருத்துகள் உள்வாங்

கப்பட்டிருப்பதை அவதானிக்க முடியும். விபுலானந்தர் பற்றிய சகல விடயங்களும் வாசகர் மனதில் ஊற்றெடுக்கும் வகையில் கட்டுரையின் வசனநடை அமைந்துள்ளது. இக்கட்டுரையில் விபுலானந்தரின் சிறப்புகளை கூறுமிவர், குறிப்பிட்ட ஓர் இனத்திற்கு மாத்திரமின்றி அனைத்து சமூகத்திற்கும் கிடைத்த மாபெரும் பண்பாட்டு கலைப் பொக்கிஷமாக விபுலாநந்தரைக் காணுகின்றார். சமரச சமத்துவ சமூகப் பணிகளின் ஊடாக தூங்கிக்கிடந்த சமுதாயத்தினை விபுலாநந்தர் வீறு கொள்ளச் செய்வதையும் இக்கட்டுரையில் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளார். சாதிக் கொடுமையைத் தகர்த்தெறியவும், தாழ்ந்த சமுதாயத்தினை மேம்படுத்தவும் கல்விதான் முக்கியம் என்பதை உணர்த்தி இதற்கு மட்/சிவானந்தா பாடசாலை சான்றாக அமைந்துள்ளதையும் தெளிவுபடுத்தியுள்ளார். சமூகத்திற்கு தேவையான சமரச நோக்குக்கு வித்திட்ட ஆரம்ப கர்த்தா விபுலாநந்தர் என்பதை இக்கட்டுரை நிறுவிச் செல்கிறது.

இராமானுஜர் கணிதத்துறைக்கு ஆற்றிய பங்களிப்பைச் சுபீட்சம் சஞ்சிகையில் எழுதிய கட்டுரை உணர்த்தி நிற்கிறது. இராமானுஜர் வாழ்க்கையைச் சுருக்கமாகக் குறிப்பிட்டு சில கணித துணுக்குகளையும் இக்கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறே சுவாமி விவேகானந்தர் பற்றிய கட்டுரையில் விவேகானந்தரின் சமூக மற்றும் சமத்துவம் சார்ந்த சிந்தனைகளையும் அவருடைய ஆன்மீகப் பணிகளையும் விளக்கியுள்ளார். குறிப்பாக சாதி வேற்றுமையைக் கண்டித்து அதன் கொடூரத் தன்மையிலிருந்து விடுபட விவேகானந்தர் கையாண்ட முறைகளையும் இக்கட்டுரையில் அருளம்பலம் சுருக்கமாகக் கூறியுள்ளார். சாதி வேற்றுமை, சமய, சமூக முன்னேற்றத்திற்கும் ஒரு தடைக்கல் என்பதை இக்கட்டுரையில் ஆழமாக வலியுறுத்தி உள்ளார். விவேகானந்தர் கல்வி தொடர்பாகக் கூறியவற்றைச் சுருக்கமாகக் கூறி கல்வியின் இறுதி நோக்கு மனிதத்தன்மையைத் தருவதாக இருக்க வேண்டுமென்பதையும் தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறார்.

அருளம்பலம் அவர்களின் இலக்கிய படைப்புக்களில் இந்து மதத்துடன் தொடர்புபட்ட கட்டுரைகளும் உள்ளடங்குகின்றன. இவற்றுள் மண்முனை பிரதேச பெண் தெய்வ வழிபாடு, காட்சி தந்த பேச்சியம்மன், இந்து ஆலய அமைப்பு, இந்து மதத்தின் சிறப்பம்சம், சைவ சமயத்தில் கண்ணகி வழிபாடு, விநாயக விரதம், நான் கண்ட நாகசக்தி போன்ற சமயக் கட்டுரைகள் குறிப்பிட்டுக் கூறத்தக்கவை. 'மண்முனைப் பிரதேசப் பெண் தெய்வ வழிபாடு' எனும் கட்டுரையில் சக்தி வழிபாட்டின் தத்துவம் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. இப்பிரபஞ்ச தோற்றத்திற்கு மூலாதார சக்தி ஆதிபராசக்தி என்பது சாக்த மதத்தின் முடிந்த முடிவென்பதை இக் கட்டுரை சுட்டிக்காட்டுகிறது. பெண் தெய்வ வழிபாட்டின் பத்தாசி முறை பற்றியும் தெளிவாக குறிப்பிட்டுள்ளார். மேலும் 'கணபதி வழிபாடு', 'விநாயக விரதங்கள்' போன்ற கட்டுரை களில் விநாயக தத்துவம், விரதம் அனுஷ்டிக்கும் முறைகள் என்பன சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளன. அத்துடன் 'காட்சி தந்த பேச்சியம்மன்', 'சிறப்பு மிகு சிவராத்திரி', 'நான் கண்ட நாகசக்தி' என்பவற்றில் தெய்வத்தின் மகிமைகளும் பெருமைகளும் எளிமையானமுறையில் விளக்கப்பட்டுள்ளன.

இவருடைய 'மட்/வடமோடித், தென்மோடி கூத்துக்கள்', 'எமது பிரதேச மரபுக் கலைகள்' (நிகழ்கலைகள்) என்பன கலைகள் தொடர்பான கட்டுரைகளுக்கு சான்று பகிர்கின்றன. மட் / வடமோடி தென்மோடி கூத்துக்கள் எனும் கட்டுரையானது எமது சமூகப் பாரம்பரியத்தில் பின்பற்றப்படும் வட, தென்மோடி கூத்துப் பிரதிகள் பற்றிய விளக்கத்தை தருகிறது. இதில் கூத்தின் அடிப்படைத் தன்மைகள் விளக்கப்படுவதுடன், அண்ணாவியார் செயற்பாடுகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பது தொடர்பாகவும் கூறப்படுகிறது. அண்ணாவிமாரின் ஆடல், பாடல், அவர்களின் திறன், இரசனை மற்றும் மத்தளம் அடிக்கும் வித்தகத்தன்மை என்பனவற்றை இம்மியும் பிழையில்லாமல் இகட்டுரை கூறிநிற்கிறது. கூத்தினை வழி நடத்திச் செல்பவராக அண்ணாவிமார் அமைதல் வேண்டுமென்பதையும் இக்கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். எமது பிரதேசக் கூத்துகளின் கையெழுத்துப் பிரதிகளின் பாடுபொருளாக 'மகாபாரதம்', 'இராமாயணம்' ஆகிய இதிகாசக் கதைகள் எழுத்தாளப்படுகின்றன. கடந்த சில தசாப்தங்களில் கூத்து மீளுருவாக்கம் நவீன மயமாக்கல் உருவாக்கத்தின்போது சமகாலச் சம்பவங்களும் கூத்துப் பிரதிகளில் உள்வாங்கப்பட்டிருப்பது ஆரோக்கியமானது.

அடுத்து பிரதேச மரபுக் கலைகள் தலைப்பில் எழுதப்பட்ட கட்டுரையானது தற்கால சமூகத்திற்கு எமது பிரதேசத்திற்குரிய பாரம்பரிய மரபுக் கலைகள் தொடர்பான விடயங்களை வெளிக்கொணர்கின்றது. மரபுக் கலைகளுக்குள் காவடி, கும்மி, வில்லுப்பாட்டு, கரகம், இசை நாடகம், தெருக்கூத்து, பொம்மலாட்டம் என்பவற்றை உள்ளடக்கி அவற்றின் சிறப்பம்சங்களையும் விளக்கியுள்ளார். காவடி, கும்மி, கரகம் என்பன ஆலய சடங்குகள், திருவிழாக்களின் நடந்தேறுகின்ற கலைநிகழ்வுகளாகும். எமது பிரதேசத்தின் பண்பாட்டு அடித்தளத்தினை நிலை நிறுத்திய கூத்துக்கலை பற்றியும் விரிவாக விளக்க முயன்றுள்ளார். கூத்தின் வகைகளைக் குறிப்பிட்டு பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் தொடர்பாகவும் கட்டுரையில் விளக்கி உள்ளார்.

பொதுவாக அருளம்பலம் அவர்களின் கட்டுரைகளின் வசன நடை, படித்தவர் மட்டுமின்றி பாமர மக்களும் வாசித்து பயன் பெறக்கூடிய வகையில் அமைந்துள்ளன. வரலாற்றுக் கதைகளைச் சித்தரிக்கும்போது இலகுவான வசன நடை கையாளப்படுகிறது. கட்டுரையின் தன்மைகளுக்கேற்ப அணிப் பயன்பாடுகளும் கையாளப்பட்டுள்ளன.

'ஆரையூர் அருள்' என அழைக்கப்படும் மூ. அருளம்பலம் ஐயா அவர்கள் பல்துறை சார்ந்த கலையாக்கச் செயற்பாடுகளைப் படைத்து வருபவர். 'பல்கலை வித்தகர்' என மட்டக்களப்பு மக்களால் போற்றப்படுபவர். 'அறன் வலியுறுத்தல்' எனும் அதிகாரத்தில் உள்ள குறள்பாக்களை மரபுக்கவிதை முறையில் எடுத்துக் கூறி உலக சாதனையை ஒன்றையும் மட்டக்களப்பில் நிகழ்த்தி உள்ளார் என்பதையும் அறியமுடிகின்றது. இவருக்கு கிடைக்கப்பெற்ற பட்டங்களும் பாராட்டுக்களும் விருதுகளும் எண்ணிலடங்காதவை. இவற்றையெல்லாம் ஒரு தனி மனிதரால் பெற்றுக்கொள்ள முடியும் எனின் இவரின் திறமை, ஆற்றல், புலமை என்பவற்றை நம்மைப் போன்ற சாதாரண மக்களால் மதிப்பிட முடியாது என்றால் அது மிகையாகாது.



ulakakēsparam.m@thaiveedu.com




# ஆரையூர் அருளம்பலத்தின் பன்முக ஆளுமையும் சிறப்புகளும்

*– சு. சந்திரகுமார்*



**கி**ழக்கிலங்கையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஆரையூர் அருளம்பலம் அவர்கள், தமது வாழ்நாள் முழுவதையும் பிரதேசத்தின் கலை பண்பாட்டு வளர்ச்சிக்கு அர்ப்பணித்தவர். இவர் தமது சிறுவயதிலேயே தமக்கான கலைப் பயணத்தைத் தொடங்கியவர். தமது பிரதேச வாழ்வியலினூடாக, கூத்துக் கலையினூடாக, சடங்கி னூடாக தம் கலைப்பணியை முன்னெடுத்தவர். அருளம்பலம் அவர்கள் பாடசாலையின் அதிபராக் கடமையாற்றி, சமூ கத்தின் தேவைக்கேற்ப இயங்கி வருபவர். படைப்பாற்றலும் ஆக்கத்திறனும் நிறைந்த இவர், சமூக நலனுக்காகவும் கலைக்காகவும் தம் படைப்புகளை ஆக்கியளித்தவர். இந்நி லையில் அவரது அயராத கலை வழிப்பணிகளுக்கு வழங்கப் பட்ட விருதுகள், பட்டங்கள், பாராட்டுக்கள், கௌரவிப்புக்கள் எண்ணிலடங்காதவையாகும். 'ஆரையூர் அருளர்' எனும் புனைபெயரில் தனது கலை, இலக்கியப் பயணத்தை வெவ்வேறு துறைகளில் முன்னெடுத்தவர். சமூகம், பொருளா தாரம், சமகால அரசியல் போக்குகள் முதலியவற்றை சிறுக தைகள், கட்டுரைகள், கவிதைகள், வில்லுப்பாட்டு, நாட கங்கள் என வெவ்வேறு தளங்களில் வெளியிட்டவர். அத்துடன், மட்டக்களப்பின் கூத்தரங்க மரபிலும் தனது இடையறாத பணியினை ஆற்றி வருபவர். வடமோடி கூத்து, தென்மோடி கூத்து, வசந்தன் கூத்து, சமூகக் கூத்து போன்ற கூத்து வடிவங்களைத் தம் புலமைத்துவத்தைப் பயன்படுத்தி எழுதி, ஊருக்குள் உள்ள அண்ணாவிமாருடன் இணைந்து அவற்றைப் பயிற்றுவித்தும் வருகின்றார். கூத்தரங்கின் ஆட்ட, தாளங்கள், கதைக் கட்டமைப்புகள், பாத்திர வார்ப் புகள் முதலானவற்றைச் செவ்வனே தமது எழுத்துகளில் பிர யோகித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. அண்மையில் கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறையினரின் பாரம் பரிய அரங்கவிழா மாமாங்கத்தில் நடைபெற்ற பொழுது ஜூலை 31, 2024 அன்று ஆற்றுகை செய்யப்பட்ட 'இறைவனும் புலவனும்' எனும் தென்மோடிக் கூத்து இவரவால் எழுதப் பட்டது.

படைப்பாற்றலும் செயற்றிறனும் நிறையப் பெற்ற ஆரையூரா ருக்கு பல விருதுகளும் கௌரவிப்புகளும் வந்து குவிந் துள்ளன. வாழும் பொழுது ஓர் ஆளுமையை வாழ்த்துவதும், பாராட்டுவதும் அவரது வாழ்நாளை அதிகரிப்பதோடு, அவரைப் போல் மற்றவர்களும் உருவாகுவதற்கும் வழிப்ப டுத்தும். காலத்திற்குக் காலம் தமது எழுத்துப்பணிக்காகவும் சமூகப்பணிக்காவும் கலைப்பணிக்காகவும் பல வழிகளிலும், பல நிலைகளிலும், பல விழாக்களிலும் அரசுசார்ந்த, அரசுசாரா நிறுவனங்கள், ஊரின் கலைக்கழகங்கள் ஊடா கவும் விருதுகள், பாராட்டுகள், கௌரவிப்புகளைப் பெற் றுள்ளார். ஒரு கலைஞரின் சமூகப் பணிக்கு, சேவைக்குக் கொடுக்கும் மதிப்பும் சிறப்பும் பாராட்டும் அவரை மேலும் ஊக்கப்படுத்தும். ஆரையூர் அருளம்பலத்திற்குக் கிடைத்த பட்டங்களும் விருதுகளும் அவரின் சேவையை எமக்கு ணர்த்தி நிற்கின்றன. 1997-ஆம் ஆண்டு அரச அதிபரால் கொடுக்கப்பட்ட சிறந்த 'கூத்துக்கலைஞர்' விருது தொடங்கி 2023-ஆம் ஆண்டில் அனாமிகா பண்பாட்டு மையத்தால் கொடுக்கப்பட்ட 'தலைக்கோல்' விருது ஈறாக ஒவ்வொரு வருடமும் தொடர்ச்சியாக ஏதோ ஒரு வகையில் அவரது திற மைக்குப் பட்டங்களும் விருதுகளும் கிடைத்தே வந்துள்ளன. ஆரையூர் அருளம்பலம் அவர்கள் ஒரே ஆண்டில் அதிகமான விருதுகளையும் பெற்றுள்ளார். 2009, 2014, 2019, 2023 ஆண்டுகளை இதற்கு உதாரணமாகக் கூறலாம். இதில் அர சாங்கத்தினால் தேசிய ரீதியாக வழங்கப்படும் 'கீர்த்திஸ்ரீ' விருது(2009), 'கலாபூசணம்' விருது(2010) ஆகியனவும் உள் ளடங்கும். இவ்விருதுகள் அரசினால் வழங்கப்படும் முதன்மை விருதுகளாகும்.

இவருக்கு கலாசார அமைச்சால் தேசிய கலைஞர் விருது 2019-ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. உள்ளூர் மட்டம் தொடங்கி; பிரதேச, மாவட்ட, மாகாண, தேசிய ரீதியாகவும் விருதுகளையும் பாராட்டுகளையும் பெற்றவராக ஆரையூர் அருளம்பலம் திகழ்கின்றார். இவரது விருதுகளின் வகை களைப் பார்க்க உண்மையிலேயே மகிழ்ச்சியளிக்கின்றது. கலைஞர், கலைச்செம்மல், கவியரசர், பல்கலைமாணி, கலைமுத்து, பல்கலைவித்தகர், இலக்கிய வேந்தர், மரபுக் கலை மன்னன் போன்ற குறிப்பிடத்தக்க பட்டங்களையும் இவர் பெற்றிருந்தமையும் இவ்விடத்தில் நினைவுகூரத் தக்கது. இதனை நோக்கும் பொழுது, அருளம்பலம் கலையால் வாழ்த்தப்படும் ஒருவராக வெளிப்படுகின்றார். சமூக சேவைக் காக இறைஞான தேசிகர், இறைகவிமாமணி, சமூக தீபம், செம் மொழிப் புலவர் ஆகிய பட்டங்களும் இவருக்கு கிடைத்துள்ளன.

**பட்டங்களும் விருதுகளும்:**

- 1997 - கூத்து கலைஞர்
  (முன்னாள் அரசாங்க அதிபர் திரு. சண்முகம்)
- 1997 - அண்ணாவியார்
  (மண்முனைப் பற்று சாகித்திய விழா)
- 2002 - நாட்டுக் கூத்து கலைஞர்
  (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஜோசப்பரராஜசிங்கம்)
- 2004 - சமாதான நீதவான்
  (நீதி அமைச்சர்)
- 2009 - கீர்த்திஸ்ரீ தேசிய விருது
  (முன்னாள் பிரதி நீதி அமைச்சர் புத்திரசிகாமணி)
- 2009 - கலைஞர் கௌரவிப்பு
  (மண்முனைப் பற்று பிரதேச கலாச்சார பேரவை)
- 2009 - கலைஞானி
  (ஆரையம்பதி மகாவித்தியாலய நட்புறவு குழு)
- 2010 - முதலமைச்சர் விருது
  (கிழக்கு மாகாண சபை - முதலமைச்சர்)
- 2010 - கலாபூசணம் தேசிய விருது
  (இந்து கலாச்சார அலுவல்கள் திணைக்களம்)
- 2011 - இறைஞான தேசிகர்
  (நாவற்குடா ஸ்ரீ முத்துமாரியம்மன் அறங்காவலர் சபை)
- 2012 - சாதனையாளர் விருது
  (ஆரையம்பதி சமூக அபிவிருத்தி சபை)
- 2013 - இறைகவிமாமணி
  (ஆரையம்பதி வடபத்திர காளியம்மாள் நிர்வாக சபை)
- 2013 - கலைச் செம்மல்
  (மட்டக்களப்பு மாவட்ட கலாசாரப் பேரவை)
- 2014 - பல்கலைமாமணி
  (கல்லடி உப்போடை நொச்சிமுனை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், ஸ்ரீ பேச்சியம்மாள் ஆலய நிர்வாகிகள்)
- 2014 - கவியரசர்
  (புல்லுமலை நாக கன்னியம்பாள் ஆலய நிர்வாக சபை)
- 2015 - திறமைக்கான தேடல் விருது, 'கிராமத்து உள்ளங்கள்'
  (லக்டோ மீடியா நெட்வெர்க் ஸ்ரீலங்கா)
- 2015 - சமூக தீபம்
  (ஒற்றுமைக்கான உறவு பாலம்)
- 2015 - செம்மொழிப் புலவர்
  (முனைக்காடு நாகலிங்கேஸ்வரர் ஆலய பரிபாலன சபை)
- 2017 - இலக்கிய விருது
  (கிழக்கு மாகாணம் - இறையின்பப் பாவாரம்)
- 2017 - இயக்குநர் இமயம் பாரதிராஜாவின் கலைஞர் விருது
- 2018 - கலை முத்து கலைதீபம் பட்டமும் தேசாபிமானி விருதும்
  (லக்டோ மீடியா)
- 2018 - சாமஸ்ரீ தேசாபிமானி விருது
  (அகில இன நல்லுறவு ஒன்றியம்)
- 2019 - பல்கலைவித்தவர்
  (ஆர்.கே.மீடியா, இலங்கை)
- 2019 - இலக்கிய வேந்தர்
  (ஒற்றுமைக்கான உறவு பாலம்)
- 2019 - தேசிய கலைஞர்
  (கலாசார அமைச்சு)
- 2020 - மரபுக்கலை மன்னன்
  (கலாசார பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு)
- 2021 - வில்லிசை வித்தகர்
  (நாகசக்தி கலா மன்றம்)
- 2021 - தேனக தீபம், அறிவுப் பொக்கிசம்
  (லக்டோ மீடியா)
- 2022 - கலை அருவி
  ('அ' கலையரங்கம்)
- 2022 - வில்லுடிப்பாட்டு
  'கிழக்கு மாகாண இலக்கிய விருது'
- 2023 - கலைப்பாவரசு
  (லக்டோ மீடியா)
- 2023 - வீசுதென்றல் வீசுது
  (தென்றல் சஞ்சிகை குழு)
- 2023 - 'தலைக்கோல்' விருது
  (அனாமிகா பண்பாட்டு மையம்)

ஆரையூர் அருளம்பலத்திற்குக் கிடைத்த பாராட்டுகளும் கௌரவிப்புகளும் அவரது கலைச்சேவைக்கு கிடைத்த அங் கீகாரங்களாகும். கலை, இலக்கியச்செயற்பாட்டாளருக்குக் கொடுக்கவேண்டிய 'புகழ்ச்சியையும் மரியாதையையும்' மக்கள் அவருக்கு கொடுக்க வேண்டிய முறையில் கொடுத்து அவரைக் கௌரவப்படுத்தி உள்ளனர். கலைஞரை அவர் வாழும் காலத்திலேயே வாழ்த்திக் கௌரவிப்பது சிறப் பானது. கலைஞர் ஒருவருக்கு கொடுக்கும் பாராட்டுக்களும் கௌரவிப்புக்களும் அவரை புத்துணர்சியுடன் மீள இயங்கச் செய்கின்றன. அவரை மீளமீள புதிது புதிதாகப் பிறக்க வைத்து, புதிதாகக் கலைகளையும் படைக்கச் செய்கின்றன. ஆரையூர் அருளம்பலத்தின் கலை, இலக்கிய, சமூகப் பணிகள் காலத்தால் அழியாதவை. அவர் தன் படைப்பாக்க முறைமையாலும் வினைத்திறனாலும் தனது படைப்பாக்க வெளியை அகலப்படுத்தியுள்ளார். அதுவே அவரைக் கலை ஞராக என்றைக்கும் நிலைகொள்ளச் செய்கிறது.



chandrakumar.s@thaiveedu.com